
கல்கி
KALKI 14-11-82
ரூ. 1.20
தீபாவளி
சிறப்பிதழ்
இலவச
இணைப்பு
யாரை
வதைக்கும்
தீபாவளி?
அட்டைப்படக் கட்டுரை:

மத்திய இந்தியாவில் 'மௌவ்' என்றோர் இடம்.

நேருஜியிடம் தளபதி கரியப்பா ''பண்டிட்ஜி! இந்த இளைஞர்தான் மணி நாகப்பா. பார்யா! மகாராஜாவுக்குப் பவநகரில் சிலை வடித்த சிற்பி. இவரை அவசரம் அவசரமாக மெட்ராஸிலிருந்து வரவழைத்தேன் — உங்களிடம் அறிமுகம் செய்ய'' என்றார்.

''ஸோ வாட்?''

''இந்த ராணுவ முகாமில் உங்களுடைய சிலையொன்று வைக்க வேண்டுமென்பது எங்களது ஆசை.''

நேருஜியின் முகத்தில் லேசான புன்னகை. என்னை அருகே அழைத்து, ''எவ்வளவு மாதம் போஸ் கொடுக்கணும்?'' என்றார் கிண்டலாக.

''மாதமா? ஒரு மணி நேரம் போதும் பண்டிட்ஜி'' என்றேன்.

''இப்படித்தான் லண்டனில் ஒரு பெண் சிற்பி. போனால் போகிறது என்று அவள் சிலை வடிக்க போஸ் கொடுக்க ஒப்புக்கொண்டேன். அந்தப் பெண் மூன்று மாதம் என்னைக் கட்டை போல் உட்காரவைத்து உயிரை எடுத்துவிட்டாள். அதிலிருந்து எனக்குச் சிற்பிகளைக் கண்டால் அலர்ஜி'' — வாய் விட்டுச் சிரித்தார் நேருஜி.

ஒரு நீளமான ஹால்.

அங்கே நேருஜிகையில் ஒரு புத்தகத்துடன் நாற்காலியில் உட்கார்ந்தார்.

ஒரு பலகையில் களிமண் சகிதமாக எதிரே நின்று கொண்டிருந்த நான் மாடலை உருவாக்க ஆரம்பித்தேன். நேருஜியின் கழுத்து எப்படி, கண் எப்படி, என்று அவரைச் சுற்றிச் சுற்றி வந்து பார்க்க வேண்டியது. மீண்டும் களிமண்ணை உருட்ட வேண்டியது. சரியாக ஒரு மணி நேரமானதும் நேருஜியிடம்,

''பண்டிட்ஜி! இன்று என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள். தாங்கள் போஸ் கொடுத்ததற்கு நன்றி'' என்றேன்.

தொடர்ந்து ''மாடல் சரியாக இருக்கிறதா பாருங்கள்'' என்றேன்.

''எனக்கு அரசியல்தான் தெரியும். மாடலைச் சரி பார்க்கத் தெரியாது. இருந்தாலும் நீங்கள் அந்த லண்டன் பெண்ணை விடப் பரவாயில்லை. மாடலும் ஓகே'' என்றார்.

சில வருடங்கள் கழித்து மீண்டும் நேருஜியை இலங்கையில் சந்திக்கும் அரிய வாய்ப்புக் கிடைத்தது.

அப்போது இலங்கையில் ஒரு சர்ச்சை.


அந்த நாட்டில் அமைக்கப்படும் சிலைகளெல்லாமே ஒரு இந்தியச் சிற்பியினால் (என்னால்) உருவாவது பற்றிச் சிலர் முணு முணுத்தார்கள். ஆனால் பிரதமர் பண்டார நாயகா புத்த மதத்தின் பிரமுகர்களைக் கூப்பிட்டு, ''புத்த பிரான் பிறந்தது இந்தியாவில்தான். அவரை நீங்கள் வழிபடும்போது அவரது திருவுருவத்தை ஓர் இந்தியர் செய்வது பற்றிச் சர்ச்சையில் ஈடுபடலாமா?'' என்று கேட்டாராம். அதிலுள்ள நியாயத்தால் அனைவரும் ஒப்புக் கொண்டார்களாம்.

இந்த நிகழ்ச்சியைப் பிரதமர் பண்டார நாயகா நேருஜியிடம் கூறியதும் இருவரும் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள்.

''கலைக்கும் கடவுள் வழிபாட்டுக்கும் தேச வேறுபாடு கிடையாது. உங்களது சாதுரியமான பதிலில் அவர்களை அடக்கி வைத்து விட்டீர்களே!'' என்றார்.


இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நேருஜி விடை பெறும்போது அவருக்குப் பிரதமர் பண்டார நாயகா ஓரடி உயரமான வெள்ளியினால் செய்யப்பட்ட புத்தர் சிலையைப் பரிசளித்தார். ஒன்றரைக் கிலோ எடையுள்ள அந்த புத்தர் சிலையைச் செய்தது நானே. நேருஜி இறக்கும்வரை அவரது படுக்கை அறையில் வைக்கப்பட்டிருந்த ஒரே கலைப்பொருள் அதுதான்!

பேட்டி: **மன்னை சௌரிராஜன்**





சிலைவடிக்கார் நேருஜிக்கு...


கோமெனி


என். ரகுநாத அய்யர்


வி. வெங்கட்ராமய்யர்

ஜெயலலிதாவின் மேடைப் பேச்சு எப்படி?

○ வே. பாலசந்திரன், கல்கத்தா-26

? ஜர்னலிஸம் தான் பத்திரிகையாளனாகக் கூடிய தகுதியை அளிக்கும் படிப்பா?

! பத்திரிகை உலகில் ஜாம்பவானாக விளங்கி அண்மையில் மறைந்த ரகுநாத அய்யர் ஜர்னலிஸம் படித்ததில்லை. கல்லூரியில் அவர் படித்தது ஆங்கில இலக்கியம். இருப்பினும் அரசியல் சட்டங்களில் நிபுணராய்த் திகழ்ந்தார். பேனா ஆயுதம் தாங்கி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் வாதப் போர் தொடுத்தார். ஸைமன் கமிஷன் அறிக்கையின் நூற்றுக் கணக்கான பக்கங்களை ஒரே இரவில் படித்து மறுநாள் காலை ஹிந்து பத்திரிகையில் தலையங்கமும் ஒரு விசேஷ அனுபந்தமும் வெளியிட்டது அவரது திறமைக்கு ஒரு சான்று. அவருக்கு 'பர்ஸனாலிடி'யே கிடையாது; கையெழுத்தும் மகாமோசம் பேசும்போது நாகுழறும்; பெரும் தலைவர்களுடன் போட்டோ எடுத்துக் கொண்டது இல்லை; அயல் நாடுகள் சென்றதில்லை. இருந்தாலும் அவர் எழுத்து உலகத் தலைவர்களைக் கவர்ந்தது!

○ ஹாலித் ஷரீஃப், கோவை

? சுஜாதா ஏன் இப்போதெல்லாம் சிறுகதைகள் எழுதுவதில்லை?

! சிறுகதைகள் எழுதுவதென்றால் சுலபமா என்ன? ஒரு நாவலுக்கு அடித்தளம் அமைக்கும் அளவுக்கு இதற்கு யோசிக்க வேண்டும். நாவல் எழுதவே சுஜாதாவுக்கு நேரம் போதவில்லையே!

○ எஸ். சுஜாதா, புதுவை

? குமுதத்தில் மீண்டும் சாண்டில்யன் கதை தொடங்குவது எதைக் காட்டுகிறது?

! சண்டை முடிந்து சமாதானம் நிலவுவதைத்தான்! ஆனப்பட்ட ஜியாவே நம் தலைநகருக்கு வந்து இந்திராவைச் சந்தித்து சமரச முயற்சிகளுக்கு அடிகோலவில்லையா? இந்தியா — பாகிஸ்தான் உறவும் குமுதம் — சாண்டில்யன் நல்லுறவு போலப்பலப்பட்டால் நாட்டுக்கு நல்லது. ஆனால் குறுக்கே நிற்கும் காஷ்மீரப்பிரச்னை இங்கு நிலவிய ஒரு தன்மானப் பிரச்னை போல் அத்தனை சுலபமாகக் கரைந்து விடுமா என்ன?

○ லா. ரா. சுந்தரராஜன் சென்னை.

? ஜெயலலிதாவின் மேடைப் பேச்சு எப்படி?

! எழுதுவது வேறு பேசுவது வேறு என்பதை அவர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. பத்திரிகை வாசகர்கள் ஒரிருபக்கங்களேனும் கனமான விஷயங்களைச் சாவகாசமாகப் படித்து ஜீரணிக்க விரும்புவார்கள். ஆனால் பெரும்பாலும் பாமரர் அடங்கிய பொதுக் கூட்டங்களில் எதையும் எளிதாக்கிப் புரியும்படி ரசனையோடு கூறவேண்டும். போகப் போகச் சரியாகிவிடும்.

○ ஆர். சுரேஷ் பாபு, சென்னை 43

? உண்மையான உழைப்பாளி என்று யாரைக் கருதுகிறீர்கள்?

! எண்பதாவது வயதிலும் இன்றைக்கும் தக்கர் பாபா வித்யாலயத்துக்குத் தலைமை தாங்கி அமைதியாகக் காந்தியப் பணியாற்றி வரும் எல். என். கோபாலசாமி ஓர் உதாரணம். சுதந்திரப் போராட்டத்தியாகங்களுக்கு எவ்வித வெகுமதியும் எதிர்பாராதவர். 1942 ஆகஸ்ட் போராட்டத்தின்போது அதில் சேராமல் இருந்ததுடன் எதிர்த்ததற்காகவும் பாகிஸ்தான் பிரச்னையில் யோசனை கூறியதற்காகவும் காங்கிரஸ்காரர்கள் பலர் ராஜாஜியை 'துரோகி' என்று ஏசினர். மனம் பொறுமல் காந்திஜிக்குக் கடிதம் எழுதிப் பதில் பெற்றார் எல். என். கோபாலசாமி. காந்திஜிக்கு ராஜாஜியிடம் இருந்த பெரு மதிப்புக்கு இன்றும் பிரத்யட்ச சாட்சி கூறிக் கொண்டிருக்கிறது அக்கடிதம்.

○ பி. ஆர். பார்த்தசாரதி, மன்னார்குடி

? தன்னுடைய மக்களைத் தினசரி கொன்று குவித்துச் சந்தோஷப்படும் கோமெனி இஸ்ரேல் ஐ. நாவில் அங்கம் வகிக்கக் கூடாது என்பது எப்படி சரியாகும்?

! கொஞ்சமும் சரியல்லதான். ஈரான் மன்னரைக் கொடுங்கோலர் என்று கூறி, நாட்டை விட்டு விரட்டிச் சாக அடித்த கோமெனி இன்று 50000 ஈரானியர்களை அரசியல் கைதிகளாக்கி யுள்ளார். சென்ற ஓராண்டில் மட்டும் 20,000 ஈரானியர் இவர் ஆணையால் கொல்லப்பட்டிருக்



ராஜேஷ்குமார்



ஜெயலலிதா



ஞானி

...கிறார்கள்! எல்லாம் கடவுளின் பெயரால் நடக்கும் அக்கிரமங்கள்!

○ எஸ். மோகன், சென்னை

? காபரே சென்ற அனுபவம் உண்டா?

! வாரா வாரம் பார்க்கிறேன் பல தமிழ் சஞ்சிகைகளைப் புரட்டும்போது.

○ ஆர். நாகராஜன், பரசலூர்

? நாம் வார இதழ் கல்கி ஆசிரியரைப் பாராட்டி புள்ளதே?

! அன்று கி. ரா. தந்த ஷொட்டைக் குறிப்பிட்டவர், கொடுத்த அட்வைஸைக் கூற வில்லையே!

○ பி. சிவசுந்தர், நாமக்கல்

? இன்றைய இந்தியப் பொருளாதார நிலையை ஒரு மனோதத்துவ மேதை எப்படிக் கணிப்பான்?

! நாமே ஒரு மனநோய் மருத்துவரிடம் போக நேராமல் இருந்தால் சரி என்று.

○ வி. உமாராணி, புதுவை

? முதுமையில் ஒருவனுக்கு எப்படிப்பட்ட சுகம் தேவை?

! 'நல்லவன்' என்று நாலு பேர் சொன்னாலே போதும். ஆனால் அண்மையில் எண்பது பிராயம் கண்டஎன். வேங்கட ராம அய்யரை சென்னை நகரின் பிரமுகர்கள் நாற்பது பேர் சேர்ந்து கௌரவித்து மகிழ்ந்தார்கள். சுருக்கெழுத்தில் நிபுணராக விளங்கி அதனால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வேலைக்கு அமர்ந்து நீதித் துறையில் படிப்படியாகப் பல பதவிகளை அடைந்தார். ஓய்வு பெற்ற பின் வழக்கறிஞரானார். சுருக்கெழுத்தாளர்களுக்குச் சங்கம் அமைத்துப்போராடினார். ஹோமியோபதி சிகிச்சையிலும் சிறந்து தர்ம வைத்தியம் செய்தார். இன்னும் பல சுயநலமற்ற சேவைகள் பெற்றுத் தந்தது சத்சேவாரத்னா என்ற பட்டம். கொடுத்தவர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி.

○ வி.எஸ். வாசன், புதுச்சேரி ★

? தண்ணீருக்கு உங்கள் ஊரில் இவ்வளவு பஞ்சமா என்ன? என்ன பாவம் பண்ணினீர்கள் ஸார்?

! ஹே! என்ன புண்ணியம் செய்தீர்கள் என்று கேளுங்கள்! இங்கு நிலவும் தண்ணீர்ப் பஞ்சத்தை ஒரு வழியாக உணர்ந்து பிரதமர் விஜய பாஸ்கர ரெட்டியை முடுக்கி விட்டிருக்கிறார். அவரும் கிருஷ்ணா நதி நீர் பத்திப்பேச முதல் வரை ஹைதராபாத் வருமாறு அழைத்திருக்கிறார். போதாக் குறைக்குத் தாமிரபரணியையும் ஒரிஸ்ஸாவில் ஓடும் மகா நதியையும் இணைக்கும் திட்டத்துக்குப் பிரதமர் பச்சைக் கொடி காட்டியிருக்கிறார். கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் போலத்தான் தெரிகிறது!

○ ஏ. ஹரிதாஸ், அக்கம்பாளையம்

? யாரைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது?

! மிக இளம் வயதிலேயே பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு பிரசுரிப்பது போல் சிறுகதைகள் எழுதக் கற்றுக் கொண்டு நாவல்களும் சில படைத்து விட்ட ராஜேஷ்குமார் மீது பொறாமை கொள்ளாமல் இருப்பது சற்று சிரமம் தான். அண்மையில் பாரதி பதிப்பகம் சென்னை-17 இவரது நான்கு நூல்களை ஒரே சமயத்தில் ஒரு விழா எடுத்து வெளியிட்டது. வாழ்த்திய லேனா, சாண்டில்யன், சாவி போன்றவர்களுடன் நாமும் பெருமைப்படத்தெரிந்துகொண்டு விடுவோம்! பொறாமை எதற்கு!

○ கி. நரசிம்மன், திருவையாறு

? பொதுவாக எல்லோருடைய பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் செப்டம்பர் 11 பாரதி மறைந்த நாளைக் கொண்டாடுவது ஏன்?

! எல்லா மனிதர்களும் பிறக்கும்போது அழுது கொண்டு ஒரே மாதிரிதான் இருக்கிறார்கள். ஆனால் நம்மில் சிலர் அசாதாரண ஆற்றலும் முயற்சியும் காட்டி உன்னத நிலைக்கு உயர்கிறார்கள். எனவே தெய்வங்களின் பிறந்தநாளைக் (கிருஷ்ண ஜெயந்தி; ராம நவமி) கொண்டாடலாம் என்றும், மனிதனாய்ப் பிறந்து அமர நிலை எய்தியவர்களின் மறைந்த தினத்தைக் கொண்டாடுதல் பொருத்த மென்றும் 'கல்கி' எழுதினார். இதனால் மகான்களின் பிறந்ததினத்தைக் கொண்டாடக் கூடாது என்று அர்த்தமல்ல. கொண்டாடியும் வருகிறோம்.

○ தி. உமாபதி ராசா, புதுச்சேரி.

? விஷயமில்லாமலே நன்றாக விற்பனையாகும் பத்திரிகைகளைப் பார்க்கும்போது என்ன நினைப்பீர்கள்?

! சத்தான விஷயத்தோடு வரும் பத்திரிகைகளும் நன்கு விற்பனையாகின்றனவே என்றெண்ணி மகிழ்வேன்.

○ ஏந்தல் ஆர். இளங்கோ, திருச்சி


? யாருடைய எழுத்துக்கள் உங்களை அதிகம் சிந்திக்க வைக்கின்றன?

நீங்கள் கேட்டவை பகுதிக்குக் கேள்விகள் அனுப்பும் வாசகர்களின் எழுத்துக்கள்

★ ரூ. 10 பரிசு பெறுபவர்

வி. எஸ். வாசன்
134, புஸ்ஸி வீதி
புதுச்சேரி-1

நீங்கள் கேட்டவை


உள்நாட்டுப் பிரச்சினைகள்
என்ன இருந்தாலும் பேச்சு வார்த்தையில் இருக்கிற சுகம் எதிலேயும் இல்லே!
ஜியா
வாஸ்தவம்!.. உண்மை!
உள்நாட்டுப் பிரச்சினைகள்
அகாலி தளம்
கிளர்ச்சி
நல்லெண்ணம்
டீ.வி.யில் இந்தி செய்தி வாபஸ்
டீ.வி.யில் இந்தி செய்தி வாபஸ்

கல்கி

1982 நவம்பர் 14
துந்துபி ஐப்பசி 28
மலர் : 41 இதழ் : 16



தார்குண்டே மீது தடியடி

மதுரையில் நடந்த போலீஸ் தடியடிப் பிரயோகம் தமிழக போலீஸின் அநாகரிகப் போக்கை அடிக்கோடிட்டது என்றால் அதற்கு அவசியம் இருந்தது என்று சாதித்து அச்செயலைக் காவல் துறை நியாயப்படுத்தப் பார்த்ததில் அதன் கௌரவம் அதள பாதாளத்துக்குச் சரிந்தது. நல்ல வேளையாக முதல்வர், தார்குண்டேக்கு வருத்தம் தெரிவித்து அறிக்கை விட்டதன் மூலம் வீழ்ந்துவிட்ட காவல் துறையின் மதிப்பை முட்டுக் கொடுத்து நிறுத்தியிருக்கிறார். முதல்வரின் அளவான, கண்ணியமான, அறிக்கைக் கடிதம் தமிழகத்தின் மானம் கப்பலேறாமல் காத்தது.

மக்களின் அடிப்படை சுதந்திரங்களையும் சமுதாய உரிமைகளையும் பாதுகாத்துத் தருவதற்கென ஏற்பட்டது பி. யூ. ஸி. எல். என்ற அமைப்பு. அதன் தலைவரான தார்குண்டே சிறந்த நீதிமான். சட்டத் துறையில் மாமேதை. போலீஸார் அத்துமீறிய செயல்களில் இறங்குவதைக் கண்டிக்கும் முகமாக தார்குண்டே மதுரையில் ஒரு மௌன ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கினார். இத்தகைய ஊர்வலத்துக்கு எவ்வளவு அவசியம் இருக்கிறது என்பதை இந்த ஊர்வலத்தின் மீதே போலீஸார் நடத்திய தடியடிப் பிரயோகம் சந்தேகத்துக்கு இடமின்றி நிருபித்து விட்டது. ஊர்வலத்தை ஒருவர் புகைப்படமெடுக்க, அதைப் போலீஸ் தடுக்க, போலீஸுக்குத் தடுக்க உரிமை இல்லை என்பதனை தார்குண்டே எடுத்துக்காட்ட, விளைவு: அவருக்குத் தடியடி!

ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் மக்களின் உரிமைகளைப் பற்றி மட்டுமின்றிக் கடமைகள் குறித்தும் நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் தலைவரோ அனைத்திந்தியாவின் மரியாதைக்குரிய பெரியவர். சுமார் ஐம்பது பேர்களே அடங்கிய இந்தச் சிறிய மௌன ஊர்வலத்தால் சட்ட ஒழுங்குப் பிரச்னை தோன்றியிருக்கும் என்று நம்மை நம்ப வைக்க போலீஸார் முயன்றது நகைப்புக் கிடமாகிறது. ஒரு வேளை, 'போலீஸ் அத்துமீறல்களைக் கண்டிக்க ஓர் ஊர்வலமா?' என்று போலீஸ் அதிகாரிகள் ஆத்திரமடைந்து அந்த உள்ளக் குமுறலின் வெளிப்பாடாகத் தடியடிப் பிரயோகம் நடந்திருக்கலாம்.

'மக்களுக்கு உதவவே போலீஸ். மக்களைத் துன்புறுத்த அல்ல' என்பது போலீஸ் பயிற்சிக் கல்லூரிகளில் ஆரம்பப் பாடமாக வேண்டும். மக்களைப் பாதுகாக்கும் பணியில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தீவிரம் காட்டும்போதே அக்குற்றவாளிகளிடம் கண்டிப்புடன் கருணையும் காட்டப்படவேண்டும். பண்பாட்டின் காவலர்களாக விளங்க வேண்டிய போலீஸாரே பண்பாடு இழக்கலாமா? கடமையைச் செய்கையில் அரசியல் தலையீடுகளை அனுமதிக்கக் கூடாது. தங்கள் விசுவாசம் ஆளும் கட்சிக்கு மட்டுமல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

விசாரணை நடக்க உத்தரவிட்டிருக்கிறார் முதல்வர். அதன் விளைவாக நமது போலீஸாரின் மனப் போக்கிலும் செயல் முறையிலும் ஆரோக்கியமான மாறுதல்கள் ஏற்பட வழி பிறக்கட்டும்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

ரூபாய்க்கு மூணு கொலை!

[அப்பு, அருணு பாங்க் என்ற தனியார் பாங்கின் குமாஸ்தா. இளகிய மனமும் இரக்கமுள்ள குணமும் கொண்டசாது. அவன் மனைவி சாவித்திரி அழகி. அப்புவின் மீது மிகவும் அன்புள்ளவள். அவர்கள் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர் வக்கீல் வராகசாமி. வராகசாமிக்கும் அப்பு மனைவி சாவித்திரிக்கும் எப்போதும் எலியும் பூனையும்போல் சண்டை வரும். அந்தச் சண்டையுடன் மேடை மீது முதல் காட்சி துவங்குகிறது.]

காட்சி 1

(அப்பு வீடு. கோபமாக உள்ளே வருகிறுர் வராகசாமி)

வராகசாமி: சாவித்திரி நீங்க என்னம்மா டெனண்ட்? நீங்க பாட்டுக்கு கீழ்க் குழாயைத் திறந்து வைச்சுட்டா மாடியிலே எப்படித் தண்ணிவரும்?

சாவித்திரி: குழாயிலே தண்ணி எங்க வருது? சுவாசம் வாங்கற கிழவன் மாதிரி புஸ்ஸு புஸ்ஸுனு காத்துத்தான் வருது.

வரா: நீ சரியா குழாயைத் திறந்திருக்க மாட்டே?

சாவி: திறந்தேனே....

வரா: தண்ணி வரலே?

சாவி: குழாய்தான் வந்தது! இந்தாங்க. (குழாயை வராகசாமியிடம் கொடுக்கிறுள்)

வரா: கொடு கொடு. பேரிச்சம் பழக்காரனுக்குப் போட்டு சச்சம்பழம் வாங்கிச் சாப்பிடறேன்.

U. A. A.

அளிக்கும்

ரூபாய்க்கு மூணு கொலை!

கதை; வசனம்

வியட்நாம் வீடு சுந்தரம்

டைரக்ஷன்

ஒய். ஜீ. மகேந்திரன்

தயாரிப்பு

ஒய். ஜீ. பி.


நடிகர்கள்

ஒய். ஜீ. பி.	—	ஸ்ரீனிவாசபாகவதர்
ஒய். ஜீ. மகேந்திரா	—	அப்பு; ஆல்பர்ட்
வி. ஆர். ஆரவமுதன்	—	வக்கீல் வராகசாமி
சுப்புணி	—	கான்ஸ்டபிள் 102
ரவி	—	ரஞ்சித்
ராதாரவி	—	இன்ஸ்பெக்டர் ஸ்ரீராம்
எஸ். ஆர். சிவகாமி	—	நெல்லூர் அருந்ததி
தஞ்சை லதா	—	சாவித்திரி
நந்தகுமார்	—	சம்பத்
புருஷோத்தமன்	—	பியூன் பரந்தாமன்
செபேஸ்ராம்தாஸ்	—	உன்னிகிருஷ்ணன்
சிவா	—	சேர்மன்
வசந்த்	—	வஜ்ரதந்தி
டி. கே. எஸ்., டோபி	—	பாகவதர்கள்
பட்டாபி	—	பி.ஏ.
சங்கர்	—	மார்கபந்து

புகைப்படங்கள்: ஈ. வே. ரா. மோகன்

தொடர் நாடக அமைப்பு: திரைஞானி

※ "சாவித்திரி! ஏம்மா எப்பப் பார்த்தாலும் இவரோட சண்டை போடறே?"



சாவி: ஹூம். நூறு வருஷத்து வீடு. ராணி மங்கம்மாவோட குதிரை லாயம் மாதிரி!

வரா: இதோ பாரு. வீடு பிடிக்கலேன்னு காலி பண்ணிடு. இந்த வக்கீல் வராக சாமிக்கிட்ட சட்டம் பேசாதே!

சாவி: ஆமா! நீங்க 1940 வக்கீல். உங்களுக்கு பிரிட்டிஷ் லாதான் தெரியும். ஐ. பி. சி. தெரிய நியாயமே இல்லே.

வரா: அடிப் பாவி... அப்பாவி அப்புவுக்கு இப்படியொரு வாயாடி சம்சாரம் வந்து வாச்சியே. டேய் அப்பு!

(அழைக்கிறார்.)

சாவி: என்னங்க! (அழைக்கிறாள்.)

(அப்பு வருகிறான்.)

அப்பு: என்னசார், கூப்பிட்டீங்களா?

வரா: உனக்கு சம்ஸ்கிருதம் தெரியுமா?

அப்பு: தெரியாது சார்?

வரா: அப்பச் சொல்றேன் கேட்டுக்கோ. பார்யா ரூபவதி சத்ரு. இதுக்கு அர்த்தம் தெரியுமா?

அப்பு: தெரியும் சார். சத்ருக்கன் சின்னறா பார்யா பேரு ரூபவதி.

வரா: அதில்லேடா. பெண்டாட்டி அழகா இருந்தா கணவன் ஜாக்கிரதையா இருக்கணும்னு அர்த்தம். ஏண்டா எனக்கும் உன் பொண்டாட்டிக்கும் என்னடா சம்பந்தம் இருக்கு?

அப்பு (பதறியபடி): அய்யய்யோ... என்ன இப்பிடி?

வரா (பதறியபடி): என்ன நீ? எல்லாத்தையும் தப்பா அர்த்தம் புரிஞ்சுக்கறே? அவளுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. இத பார். உன் பொண்டாட்டிக்கு நீ வேணாப் பயப்படணும். நான் பயப்படணும்கிற அவசியமில்லே. அதனாலதான் சொல்றேன். வீட்டை முதல்ல காலி பண்ணு!

அப்பு: என்ன சார் இது. நாங்க வந்தது லேர்ந்து இதையே சொல்லிட்டிருக்கீங்க. அவ பாவம் ஏதாவது தப்பாப் பேசியிருந்தா மன்னிச்சிடுங்களேன்.

வரா: அவ பேசறது பூரா தப்புத்தான்டா. நீ அசடு. உனக்குப் போய் இப்பிடி ஒரு சம்சாரம் வந்து வாச்சுதே.

சாவி: போதும். நிறுத்துங்க. என்னே என்ன வேணு சொல்லுங்க. ஆனா என் முன்னாடி என் புருஷனே அசடு. அம்மாஞ்சி, அப்பாவி. அழுக்குன்னெல்லாம் சொன்னீங்க அப்பறம் நடக்கிறதே வேறே.

வரா: பார்த்துக்கடா. நான் உன்னே அசடுன்னுதான் சொன்னேன். அவ என்னெல்லாம் சேர்த்துச் சொல்றா பாரு! உனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும்.

அப்பு: அட சும்மா இருங்க சார். எனக்கு இதையே சமாளிக்க முடியலே. இன்னும் வேற வேணும்கிறீங்களே? (மனைவியிடம்) சாவித்திரி! ஏம்மா எப்பப் பார்த்தாலும் இவரோட சண்டை போடறே? இத பாரு. பெரியவங்க கிட்ட மரியாதைக் குறைவா நடந்துக்கவே கூடாது.

சாவி: என்னங்க நீங்க? நான் பெரியவங்க கிட்ட மரியாதைக் குறைவா நடந்துக்கறதேயில்லே.

வரா: ஊஹூம். அப்ப... நான் பெரியவன் இல்லேங்கிறியா. என் வயசு என்ன தெரியுமா? அம்பது. என் சர்வீஸ் எவ்வளவு தெரியுமா? அம்பத்தஞ்சு வருஷம்!

அப்பு: அதெப்படி சார்?

வரா: அஞ்சு வருஷம் ஓவர்டைம்டா! அம்பத்தஞ்சு வருஷமா கோர்ட்ல நின்னுண்டிருக்கேன். இன்னும் கால் கடுக்கலே.



✱ 102, ''காளி!'' என்று சாமிவந்து ஆட, சாவித்திரி கற்பூரத் தட்டுடன் ஓடிவந்து...

அப்பு: அட போங்க சார்! அடையாறு ஆலமரம்கூடத்தான் ரெண்டாயிரம் வருஷமா ஒரே இடத்தில நின்னிண்டிருக்கு.
சாவி: மொத்தத்தில ரெண்டும் மரந்தான்!
வரா: டேய், உன் பொண்டாட்டிக்கு வாய்க்கொழுப்பு ரொம்ப ஜாஸ்தி ஆறது.
சாவி: ஆமா! நீங்க வாங்கிப் போட்ட ஊறுக்குளி நெய்யி! வாய்க் கொழுப்பு ஜாஸ்தியாக்கிடிச்சு!

(இன்ஸ்பெக்டர் ஸ்ரீராம் வராகசாமியைப் பார்க்க வருகிறார்)

இன்ஸ்பெக்டர்: ஹலோ அப்பு...
அப்பு: என்ன இன்ஸ்பெக்டர் சார், என்ன காலங்காத்தால இங்க? வக்கீலைப் பார்க்கவா?
இன்ஸ்: ஒரு நியூஸன்ஸ் கேஸ். அது விஷயமா வந்தேன். மிஸ்டர் வராகசாமி...
அப்பு: கரெக்ட். இங்க இருக்கிறதிலயே பெரிய நியூஸன்ஸ் அவர்தான். தள்ளிட்டுப் போங்க. புண்ணியமாப் போகும்.
இன்ஸ்: மிஸ்டர் வராகசாமி! நீங்க சைதாப்பேட்டை கோர்ட்டுக்கு வருவீங்கள்ள?
அப்பு: சார்! யாரைப் பார்த்து என்ன கேள்வி கேக்கறீங்க? அவர் அங்கதான் வருவார். ஹைகோர்ட் பக்கம் போனதே இல்லே.
வரா: டேய்... சின்ன வயசிலே லீட் ஹவுஸ் பார்க்க ஹைகோர்ட் போயிருக்கேன் தெரியுமா உனக்கு?
சாவி: பின்னே? கேஸ்ல ஆஜராகவா போயிருப்பீங்க? உங்க கட்சிக்காரங்களே ரோடில வண்டில பழம் விக்கிறவங்கதானே?
வரா: டே... டே... பொம்பளையாடா இவ?
அப்பு: சாவித்திரி! காலங் காத்தால ஏன் அவரோட சண்டை போடறே? போய்ச் சமையலைப் பண்ணு. நான் சீக்கிரமா ஆபீஸ் போகணும். ஃபைல்ஸ் எல்லாம் எடுத்து வை.

(உள்ளே போகிறாள் சாவித்திரி)

வரா: இன்ஸ்பெக்டர் ஸ்ரீராம்... கேஸைப் பத்திச் சொல்றீங்களா?
இன்: சாதாரணக் கேஸ்தான். பக்கத்துப் பக்கத்து வீடு. ஒருத்தன் கோழி வளர்த்தான். அந்தக் கோழி இன்னொருத்தன் வீட்ல போய் முட்டை போட்டிடிச்சு. அந்தப் பக்கத்து வீட்டுக்காரன் முட்டையைத் திருப்பித் தராம ஆம்லட் போட்டு சாப்பிட்டுட்டான். இப்ப ஆம்லட் போட்டு சாப்பிட்டவன் மேலே கோழி சொந்தக்காரன் கேஸ் போட்டு நஷ்ட ஈடு கேக்கறான்.
வரா: கோழி சொந்தக்காரனுக்காக நான் வாதாடணுமா?
அப்பு: கோழிக்கெப்படி சார் மாமன் மச்சான்னு சொந்தக்காரன் இருக்க முடியும்? அது பறவை சார்.
வரா: ஒய் ஆர் யூ பாஸ்கெட்லி பாஸ்கெட்லி டாக்கிங்?
இன்: அப்பு! அதென்ன பாஸ்கெட்லி பாஸ்கெட்லி டாக்கிங்?
அப்பு: கூடை கூடையாப் பேசறியேங்கறாரு!
இன்: கான்ஸ்டபிள் 102வை இங்க வரச் சொன்னேன். இன்னும் காணமே.
அப்பு: சார் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். அவர இங்க வரச் சொல்லாதீங்க பயமாயிருக்கு.
இன்ஸ்: ஏம்பா?
அப்பு: சார்.. அவருக்கு கடவுள் பக்தி அதிகமா யிருக்கலாம். அதுக்காக நாங்க பேச்சு வாக்கில ஏதாவது சாமி பேரைச் சொல்லிட்டாப் போதும். அவருக்குச் சாமி வந்து ஆடிடறாரு. என் பொண்டாட்டியைக் கேட்டுப் பாருங்க. அவருக்குக் கற்பூரம் காமிச்சே எங்க சொத்து பூரா கரைஞ்சிடும் போலயிருக்கு.

(அப்போது போலீஸ் விசில் ஒலிக்க 102வின் 'டேய்' என்ற குரல். உள்ளே பயந்து ஓடிவரும் ஒரு ஆள் இன்ஸ்பெக்டர் பின்னால் ஒளிய அவனைத் துரத்தியபடி வந்த கான்ஸ்டபிள் 102 கம்பீரமாக நின்று அவனை ஏற இறங்கப் பார்க்கிறார். 102 மொத்தமே 3 அடி 2 அங்குல உயரம்தான்.)

102: ஏய்... என்னடா அவர் பின்னாடி ஒளிஞ்சிக்கிட்டா.... விட்டுடுவேன்னு நினைப்பா... (இன்ஸ்பெக்டரிடம்) என்ன சார் நீங்க கொஞ்சம் கூடப் பொறுப்பே இல்லாம இருக்கீங்க. நீங்க பாட்டுக்கு வீட்டை வெளிப்பக்கம் பூட்டிக்கிட்டு வந்துட்டீங்க. இதோ... இவன்... மாத்துச் சாவி போட்டு உங்க வீட்டுக் கதவைத் திறக்கப் பார்த்தான். நான் யாரு?
அப்பு: நீங்க 102.
102 (பெருமையுடன்): அ... நாலு தட்டுத் தட்டிக் கொணர்ந்துட்டேன்.
இன்: யோவ்... விடுய்யா அவனை...
102: முடியாது சார்! இவனை மட்டுமில்லே. இவன் சொந்தக்காரன் ஒவ்வொருத்தனையும் முட்டிக்கு முட்டி தட்டாம விட மாட்டேன்.


(ஆளை அடிக்க வர இன்ஸ்பெக்டர் தடுத்து)

இன்: நான் சொல்றேன், விடுய்யா!
102: ஏன் சார்?
இன்: இவன் என் மச்சான்யா. டேய் நீ போடா வீட்டுக்கு.

(ஆள் போகிறான்)

முட்டிக்கு முட்டி தட்டற மூஞ்சியைப் பாரு! இந்த மாதிரி அப்பாவிப் பயலைத் தன் வீட்டு வந்துடு. அந்தக் ''காளிய'' பிடிக்கச் சொன்னேனே, என்னய்யா ஆச்சு?

(''காளி'' என்ற பெயரைக்கேட்டதும் தன்னை மறந்து ''காளி!'' என சாமி வந்து ஆடுகிறான் 102. அப்புவின் மனைவி சாவித்திரி கற்பூரத் தட்டுடன்



பஸ்களில் பதிவுசெய்த பாடல்களை ஒலிபரப்புவது பழைய தகவல். சமீபத்தில் ஒரு பஸ்ஸில் பயணம் செய்தபோது, பாடல்களுக்கிடையே ''சரியான சில்லறை தரவும், டிக்கட் கேட்டு வாங்கவும், ஜன்னலுக்கு வெளியே கையை நீட்டவேண்டாம்'' போன்ற சில வாசகங்களையும் சேர்த்துப் பதிவு செய்திருந்தனர். அவற்றில் மிகச் சுவையான ஒரு வாசகம்: ''ஜாலியாக பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு இறங்கவேண்டிய இடத்தைக் கோட்டை விட்டுவிடாதீர்கள்!'' தகவல்: சௌம்யா

ஓடிவந்து கற்பூரம் காட்டிய பின் 102க்கு சாமி மலேயேறுகிறது.)

102: காளியக் கட்டுப்படுத்த நான் யாருங்க?

அப்பு (இன்ஸ்பெக்டரிடம்): சார், முதல்ல இவரைக் கட்டுப்படுத்தறது யாரு அதைச் சொல்லுங்க.

102: காளிங்கிற அந்த ரௌடியோட பேர் தான் அவனைப் பிடிக்க முடியாம என்னை பக்தியால தடுக்குது சார்! அவனைப் பிடிக்க ஒரு வழி வைச்சிருக்கேன்.

நம்ம ஊர் எல்லையம்மன் கோயில்ல குறிகேட்டு, மந்திரிச்சு எலுமிச்சம்பழம் வாங்கியாந்திருக்கேன். (எலுமிச்சம் பழத்தை நீட்டி) இதை வெட்டி எட்டுத் திசையிலயும் போட்டா, போன திருடன் திரும்பித் தானு வந்திடுவான்!

இன்ஸ்:யோவ் 102என்னய்யா இதெல்லாம்!

அப்பு: சார்... இது உண்மை சார். மூட நம்பிக்கைன்னு ஒதுக்கிடாதீங்க. அப்பிடி நடக்குது சார். நான் கண்கூடா பார்த்திருக்கேன். நம்ம வீட்டுப் பக்கத்துல ஒரு வயசான அம்மா. அவங்க புருஷன் இப்பிடித்தான் எங்கேயோ காணுமப் போயிட்டாரு. அந்தம்மா எல்லையம்மன் கோயில்ல போய்க் குறிகேட்டு எலுமிச்சம் பழம் மந்திரிச்சு... வெட்டி வீட்டு வாசல்ல எட்டு திசையிலயும் போட்டாங்க

102: புருஷன் வந்தானு?

அப்பு: வந்திட்டாரே! எட்டுத் திசையிலிருந்தும் எட்டுப் பேர் வந்துட்டாங்க!

இன்ஸ்: அட நீ ஒன்னு! ஏற்கனவே இந்த ஆளோட பக்தியாலே எனக்கு ஏகப்பட்ட குழப்பம். ...யோவ் 102 உனக்கு இன்னிக்கு எக்மோர் பிரசவ ஆஸ்பத்திரில டூட்டி...

102: ஸார்! ஸார்! அங்க மட்டும் அனுப்பாதீங்க சார்!

(லட்சியம் பண்ணுமல் இன்ஸ்பெக்டர் வராகசாமியுடன் வெளியேறிவிடுகிறார்.)

அப்பு: என்ன நீங்க. இன்ஸ்பெக்டர் சொல்றாரு. சரின்னு பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போறதுதானே?

102: சார்... அது பெரிய கதை சார்.

அப்பு: ஏன் என்னுச்சு?

102: இப்ப இந்தக் குழந்தைங்கள்ளாம் காணுமப் போவுதில்ல... அதைக் கண்டு பிடிக்கப் போன வாரம் என்னை அங்க அனுப்பிச்சாரு.

அப்பு: நீங்க போய்க் கண்டுபிடிச்சீங்களா?

102: எங்கங்க? என்னையே ஒருத்தன் குழந்தைன்னு நினைச்சுக்கிட்டுத் தூக்கிக்கிட்டுப் போயிட்டான்!

அப்பு: அவங்களைச் சொல்லித் தப்பில்லே. சமயத்தில எனக்கே உங்களைப் பாக்கறப்பத் தூக்கி வைச்சுக்கிட்டுக் கொஞ்சணும் போல இருக்கு. எப்படி சார் உங்களைப் போலீஸ்லே சேர்த்துக்கிட்டாங்க?

102: எங்கப்பா போலீஸ்ல இருந்தாரு. டூட்டிலே இருக்கறப்பவே செத்திட்டாரு. அவரோட சர்விஸைப் பாராட்டி டிபார்ட்மெண்ட்ல ஒரு அவார்டு குடுத்தாங்க. அதுக்கு வந்த அதிகாரியைப் பார்த்து, 'சார்! போலீஸ்ல எனக்கொரு வேலே போட்டுக் குடுங்க'ன்னு பிடிவாதமா நின்னேன். 'சில சமயம் சின்ன பொந்துல புகுந்து போகணுமே, அதுக்கெல்லாம் மினி கான்ஸ்டபிளா இரு'ன்னு ஸ்பெஷல் பர்மிஷன்ல சேத்துட்டாரு!

(ரஞ்சித் என்ற அப்புவின் நண்பன் வருகிறார்.)

ரஞ்சித்: அப்பு...

அப்பு: வா ரஞ்சித்! சாதாரணமா எனக்கு முந்தி பாங்க்ல போய் உக்காந்திருப்ப. என்ன இன்னிக்கு லேட்டு?

ரஞ்: முண்டகக்கண்ணி அம்மன் கோயில் பக்கமா...

(அம்மன் பெயரைக் கேட்டதும் அப்பு சாமி வந்து ஆடுவது போல் பாசாங்கு செய்ய 102 ஓடிவிடுகிறார்.)

ரஞ்: டே...டேய்... என்னப்பா இதெல்லாம்?

அப்பு: இந்த மாதிரி ஏதாவது செஞ்சாத்தான் அந்த ஆள் போவாரு. உனக்கு அவரைப் பத்தித் தெரியாதுப்பா.

ரஞ்: அப்பு.. நேத்திக் உங்கிட்டக் குடுத்தேனே ஆபீஸ் ஃபைல்களெல்லாம் ரெடி பண்ணிட்டியா?

அப்பு: என்ன இப்பிடிக் கேக்கற? கரெக்டா ரெடி பண்ணிட்டேன். உன் ஃபைல்களை நான்தானே பாக்கறேன் எப்பவும். சாவித்திரி! அந்தப் ஃபைல்களையெல்லாம் கொண்டா.

(சாவித்திரி கொண்டு வந்து நீட்ட அவற்றை வாங்கி ரஞ்சித்திடம் தருகிறான் அப்பு.)

அப்பு: இத பாத்தியா. இது ரகோத்தமன் ஃபைல். கணக்கு ஏதோ உதைச்சதுன்னுன். சரி பண்ணிட்டேன். இது நம்ம நரசிம்மன் ஃபைல். எல்லாம் கரெக்டா இருக்கும்.

ரஞ்: ஏம்பா எல்லார் வேலையையும் நீ. இழுத்துப் போட்டுக்கிட்டுச் செய்யறே?


அப்பு: என்னப்பா செய்யச் சொல்றே நம்ம பாங்க்ல இது வழக்கமாப் போச்சு. எல்லார் வேலையையும் எங்கிட்டச் செய்யச் சொல்றுங்க... அதனுலென்ன, பரவாயில்லே. (வெகுளியாக நிற்கிறன் அப்பு. சாவித்திரி கோபமுடன் ரஞ்சித்தைப் பார்க்கிறுன்) (தொடரும்)

எம். பி. ஏ. படிப்பை தபால் மூலம் சொல்லிக் கொடுக்கப் போவதாய் அறிவித்தது அண்ணுமலே பல்கலேக் கழகம். அப்ளிகேஷன் மற்றும் ப்ராஸ்பெக்டஸுக்கும் பத்து ரூபாய் கட்டணம். எதிர் பாராத அளவில் விண்ணப்பங்கள் குவிந்தன. சிலருக்குத்தான் அப்ளிகேஷன் மற்றும் ப்ராஸ்பெக்டஸ் அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் அதைப் பூர்த்தி செய்து முப்பது ரூபாய் கட்டணத்துடன் பல்கலேக் கழகத்துக்கு அனுப்பினர். அதே சமயம், அஞ்சல்வழி எம்.பி.ஏ. படிப்பு கைவிடப்பட்டது. விண்ணப்பதாரர்கள் அனுப்பிவைத்த பணம் திருப்பி அனுப்பிவைக்கப்படும் என்று அறிவிப்பு வந்தது. இப்படி எம்.பி.ஏ. படிப்பைச் சந்திசிரிக்க வைப்பானேன்? -ஜூலி



அக்னி சாட்சி

ஹேமா ஆனந்ததீர்த்தன்



தொலைபேசி ஒலி எழுப்பி அழைத்தது. சஷ்டி பிரதாபின் Confessions of an Indian Woman-eater ல் சுவாரஸ்யமாக மூழ்கியிருந்த சத்யனுக்கு எரிச்சல் வந்தது.

"யெஸ். சத்யன் ஹியர்"—எரிச்சலைக் குரலிலே காட்டினான்.

"நீங்க ஏதோ கோபமா இருக்கறுப்பலே தெரியுது. ஆனா உண்மையிலே கோபப்பட வேண்டியது நான்தான்."

"கோபப்படுங்களேன்" என்றுதான்பதில் சொல்ல நினைத்தான். ஆனால் மறுமுனையில் பேசிய குரல் பெண்ணின் குரலாக இருந்தது.

"ஐ எம் ஸாரி. காலையிலேருந்து ஒரு வேலையும் செய்ய விடாமே இந்த டெலிஃபோன் டிஸ்டர்ப் பண்ணிக்கிட்டே இருந்தது. அதுனாலதான் கொஞ்சம் எரிச்சலாப் பேசிட்டேன். நீங்க யாருன்னு தெரியல்லியே"

"காலையிலிருந்து உங்களுக்கு வந்த டெலிஃபோன் கால்லெல்லாம் மின்மினி'யில வந்த உங்க கதை 'இரண்டு பூச் செண்டுகள்' பத்தித்தான்னுநினைக்கிறேன்" என்றாள்தான் யார் என்பதைச் சொல்லாமலே.

"யூ ஆர் கரெக்ட். ஆனா நீங்க யாருங்கறது தெரியலியே? என் மேலே கோபமா இருக்கிறதா வேறே சொல்றீங்க"

"நான் யாருங்கறதை விட நான் என்ன சொல்லப் போறேங்கறதுதான் முக்கியம்"

"என்னமோ பயமுறுத்தறுப்பல இருக்கு. நீங்க யாரு, விஷயம் என்னங்கறதைச் சொல்லிட்டுப் பயமுறுத்தினிங்கன்னா பயப்படணுமா வேண்டாமங்கறதைத் தீர்மானிக்க எனக்குச் சௌகரியமாயிருக்கும்" என்றுசத்யன் பொறுமை இழக்காமல் சிரித்தபடியே சொன்னான்.

"சரி, கேட்டுக்குங்க. உங்க கதைகள்ல வர வர ஆபாசம் அதிகமாகிக்கிட்டே போகுது. பெண்களை இழிவு படுத்தறதுக்கு ஒரு எல்லையே இல்லாம மிதமிஞ்சிப் போயிக்கிட்டிருக்கிங்க. இரு பூச்செண்டுகள் இந்த மாதிரிக் கதைக்கெல்லாம் சிகரம் போல இருக்குது. உங்க கதைகளைப் படிச்சு இளம் பெண்கள் அவமானத்துனால கொதிக்கிறாங்க. இதுவே உங்க கடைசிக் கதையா இருக்கட்டும். ஒழுங்கா, சமுதாயத்தைச் சீர்திருத்தற மாதிரியா, மனசை உறுத்தற கதையா எழுதறதாஇருந்தா எழுதுங்க. இல்லேன்னா எழுத்துத்தொழிலுக்கே ஒரு கும்பிடு போட்டுட்டு மத்த வேலைகளைக் கவனிங்க. அதனால தமிழ் இலக்கியத்துக்கு ஒண்ணும் நஷ்டம் வந்துடாது. மாறாக, தமிழ்நாட்டின் மானமாவது மிஞ்சும்."

"பிரசங்கம் பிரமாதமாக இருந்தது. தமிழ் நாட்டுப் பெண்களெல்லாம் சேர்ந்து தங்களின் ஏகப் பிரதிநிதியாகத் தங்களைத் தேர்ந்தெடுத்து என்னுடன் போர் தொடுக்க அனுப்பியிருக்கிறார்கள் போலிருக்கிறது. கன்கிராகலேஷன்ஸ். தாங்கள் யார் என்பதை இப்போதாவது நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கோபத்தை அடக்கிக்கொண்டு கிண்டலாகக் கேட்டான்.

"தங்கள் பாராட்டுக்கு நன்றி. அது கிண்டல் என்று புரிந்துகொள்ளாத அளவுக்கு நான் முட்டாளல்ல. மேலும் நான் அப்படி ஒன்றும் தனிப்பட்டவ இல்லே. நான் ஒரு சங்கத்தின் காரியதரிசி. எங்கள் பேட்டையிலுள்ள மாதர் நல உரிமைச் சங்கம் தான் அது. அதுல நூறு அங்கத்தினர்களுக்கு மேல இருக்கோம். அந்தச் சங்கத்துல உங்க இரு பூச்செண்டுகள் கதையைக் கண்டிச்சு ஒரு தீர்மானம் நிறைவேத்திருேம். அந்தத் தீர்மானத்தின்படி என்னை உங்களுடன் இது விஷயமாகப் பேசிச் சங்கத்தின் பலத்த எதிர்ப்பை உங்க கவனத்துக்குக் கொண்டு வரும்படி எனக்கு வேண்டுகோள். நீங்க தொடர்ந்து இது மாதிரி கதை எழுதிக்கிட்டே இருந்தா உங்க கதையை வெளியிடற பத்திரிகைக் காரியாலயத்துக்கு முன்னடி

யும் உங்க வீட்டுக்கு முன்னாடியும் எங்க சங்க அங்கத்தினர்கள் ஆர்ப்பாட்டம் செய்வோம்.''

''இதுக்கெல்லாம் பயந்து நான் என் இஷ்டப்படி கதை எழுதறதை விட்டுடுவேன்னு நினைக்கிறீங்களா?''

''பயந்துக்கிட்டு அப்படிச் செய்ய வேண்டாம். எங்க டிமாண்ட்ல இருக்கிற ஞாயத்தைத் தெரிஞ்சுக்கிட்டுச் செஞ்சாப் போறும். உங்களுக்கே அது நல்லது.''

''தாங்க்ஸ். என்னுடைய நல்லது கெட்டதுல உங்களுக்கு ரொம்ப அக்கறை இருக்காப்பல இருக்கே!''

''கண்டிப்பாக. ஏன் இருக்கக் கூடாது? நீங்க ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவங்க. ஒரு உயர்ந்த பதவியிலேயும் இருக்கீங்க. இந்தச் சின்ன வயசுலேயே இவ்வளவு அருமையான எழுத்துத் திறமையும் இருக்கு. அந்தத் திறமையை இப்படித் தவறான பாதையில உபயோகப்படுத்தறீங்களேங்கற வருத்தம் எனக்கு இருக்கத்தான் இருக்கு.''

''என்னைப் பத்தி இவ்வளவு தெரிஞ்சு வச்சிருக்கீங்களே, பரவாயில்லே என்னுடைய ஃபோட்டோவை நீங்க பத்திரிகையில பார்த்திருப்பீங்க. எனக்கு உங்களைப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் தரக்கூடாதா? நீங்க ஏன் என்னைச் சந்திக்கக் கூடாது? அது உங்களுக்கு இஷ்டமில்லேன்னு, நான் வந்து உங்களைச் சந்திக்கிறேன். நாம இது விஷயமா மேற்கொண்டு பேசலாமே...''

''அதுக்கெல்லாம் ஒண்ணும் தேவை இருக்கிறதா எனக்குத் தோணல்லே.'' என்று கூறி அவள் டக்கென்று தொலை பேசியின் ஒலி வாங்கியை வைத்துவிட்டாள்

சத்யனுக்கு ஏமாற்றம் எரிச்சல் இரண்டும் எழுந்த அதே நேரத்தில் அந்த இனிமையான குரலுக்குடையவளை எப்படியும் சந்தித்துவிட வேண்டும் என்னும் ஆவலும் அதிகரித்தது.

அவளை மறுபடியும் சந்திப்பதற்கு ஒரே வழி தான். மறுபடியும் 'மலரினும் இனியது காமம்' என்ற இன்னொரு கதையை எழுதிப் பிரசுரித்து அவள் கோபத்தைக் கிளறி அவள் தன் வீட்டுக்கு முன்னால் சங்க அங்கத்தினர்களுடன் ஆர்ப்பாட்டம் செய்ய வரும்படி செய்வதுதான் என்று தோன்றியது.

அவன் எதிர்பார்த்தது வீண்போகவில்லை.

குறுநாவல் வெளியான நான்காவது நாள் அவன் எதிர்பார்த்த பெண்களின் கூட்டம் அவன் வீட்டு வாசலில் பிரசன்னமாயிற்று.

''பெண்களைக் கேவலப்படுத்தும் எழுத்து''

''ஒழிக!''

''பெண்களை அவமதிக்கும் எழுதுகோல்!''

''முறிக!''

என்ற கூச்சலைக் கேட்டுச் சத்யன் வீட்டு வாசலுக்கு வந்தான்.

சுமார் இருபத்தைந்து முப்பது பெண்கள் பெரும்பாலும் முப்பது வயதுக்குட்பட்டவர்கள் — கூட்டமாகக் கூடியிருந்தனர்.

சத்யனையே இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அவள் ''பெண்களின் மனம் புண்படும்படி எழுதுவதை நிறுத்து அல்லது...'' என்று நிறுத்தினாள்.

''எழுதுவதையே நிறுத்திவிடு'' என்று மற்ற பெண்கள்சேர்ந்து குரலெழுப்பினார்கள்.

அவள்தான் தன்னோடு தொலை பேசியில் பேசியவளாக இருக்க வேண்டும். தான் எண்ணியது போல குரல் எவ்வளவு இனிமையாக இருந்ததோ அதே அளவு இனிமையை அவளைப் பார்க்கும் தன் கண்கள் அனுபவிப்பதை அவன் உணர்ந்தான்.

''தெருவுல எல்லோரும் வேடிக்கை பார்க்கறாங்க. நீங்க



எல்லோரும் உள்ளே வந்து உட்கார்ந்து பேசலாமே'' என்றான் அமைதியாக.

''உங்களோட பேச்சு வார்த்தை நடத்தறதுக்காக நாங்க வரல்லே. பேசறதுக்கு என்ன இருக்கு? இனிமே இந்த மாதிரி கதைகளை எழுத மாட்டேங்கற உறுதிமொழி எங்களுக்கு வேணும். என்றாள் அவள்.

''அது என் இஷ்டம். நீங்க அனாவசியமா என் சுதந்திரத்தில தலையிடறீங்க.''

''வாணி, அவரோட என்னடி ஆர்குமெண்ட்? அடுத்த கதை இந்த மாதிரி எழுதினாருன்னா நாம என்ன செய்வோம்கிறதைச் சொல்லிட்டு வா, போகலாம்'' என்றாள் கூட்டத்தில் ஒருத்தி.

அவள் பெயர் வாணி என்று தெரிந்து கொண்டதில் அந்தச் சந்தர்ப்பத்திலும் அவனுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது.

''இன்னும் ஒரு கதை என்ன, எவ்வளவோ கதைகள் இந்த மாதிரி எழுதத்தான் போகிறேன். என்ன செய்ய முடியும் உங்களால?''

''சாணியைக் கரைத்துத் தலையில் ஊற்றுவோம்'' என்றாள் ஒருத்தி.

''முகத்தில் கரியைப் பூசுவோம்'' என்றாள் இன்னொருத்தி.

''இப்படியெல்லாம் கூட உங்களால் செய்ய முடியுமானால் என் அடுத்த கதையில் உங்களையெல்லாம் பாத்திரங்களாக்கி இதையெல்லாம் செய்யும் ரௌடிப் பெண்களாக உங்களைச் சித்திரிப்பேன்'' என்று கத்தினான் சத்யன்.


''அப்படியானால் இப்போதே உங்களுக்கு அந்த மரியாதையைச் செய்து விடுகிறோம்' என்று முன்னால் வந்த ஒரு பெண் மளமளவென்று தன் பேனாவின் கழுத்தைத் திருகி எடுத்துவிட்டு சத்தியனை நோக்கி உதறினாள். அவன் முகம், சட்டை, வேட்டி எல்லாம் மை வழிந்தது.

அவனின் அந்தக் கோலத்தைக் கண்டு எல்லாரும் 'கொல்'லெனச் சிரித்தனர்.

வாணியின் முகம் களையிழந்து விட்டது. அவள் சத்தியனின் அருகில் வந்து ''நான் ரொம்பவும் வருத்தப்படறேன். இதுக்காக நான் உங்க கிட்ட மன்னிப்புக் கேட்கிறேன்'' என்று கூறிவிட்டு தன் சகாக்களை நோக்கி 'திஸ் இஸ் அட்ரோஷஸ். கமான் லெட் அஸ் கோ பேக்'' என்று கத்தினாள்.

''நீட்டு சிங் தம்பி பெயர் என்ன தெரியுமா?''
''தெரியாதே!''
''மடக்கு சிங்!''

-பாரதி



வாணி அன்று மாலையே மறுபடியும் அவனை வந்து சந்தித்து மீண்டும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். தான் அந்தச் சங்கத்திலிருந்து ராஜினாமா செய்துவிட்டதாகவும் தெரிவித்தாள்.

ஆனால், சத்யன் ஆபாசமான கதைகளை எழுதுவதை நிறுத்திவிட வேண்டும் என்பதில் தான் உறுதி தளராமல் இருப்பதாகவும் அதற்காக எந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருப்பதாகவும் கூறினாள்.

''உங்களைப் பார்த்ததுமே நான் இனிமே ஆபாசமான கதைகளை எழுதறதை உடனே நிறுத்திடணும்கிற முடிவுக்கு வந்துட்டேன். ஆனா வீம்புக்காகக் கொஞ்ச நேரம் வாதம் பண்ணினேன். அதுக்குள்ள உங்க கூட்டாளிங்களுக்குப் பொறுக்க முடியாம என் மூஞ்சியில மசியைப் பூசிட்டாங்க.''

''என்னைப் பார்த்ததும் ஏன் உங்களுக்கு அப்படித் தோணித்து?''

''இவ்வளவு அழகான ஒரு பெண்ணோட விருப்பத்துக்கு எதிரா நான் நடந்துக்கக் கூடாதுங்கறதுனாலதான்!''

''இதையெல்லாம் உங்க கதையில எழுதறதோட வச்சுக்குங்க. நேரில சொல்ல வேண்டாம்'' என்று வாணி சிரித்தாள்.

''இனிமே இந்த மாதிரி கதைகளை நான் எழுத மாட்டேன்னு உங்க கையைப் பிடிச்சுக்கிட்டு சத்தியம் செய்யணும். அதுவும் சும்மா செஞ்சாப் போறாது. அக்னி சாட்சியா செய்யணும்கிறது என் ஆசை.''

''அக்னி சாட்சியா என் கையைப் பிடிக்கணும்கறீங்க.''

''ஆமாம். ஆனா அந்த அக்னி வேறே நான் சொல்ற அக்னி வேறே''என்று கூறி சத்யன் சிரித்தான்.

''புரியும் படியாத்தான் சொல்லுங்களேன்!''

''செஞ்சே காட்டிடட்டுமா?''

''உம்.''

சத்யன் எழுந்து சென்று தன் புத்தக அலமாரியைத் திறந்து ஒரு பைண்டு நோட்டுப் புத்தகத்தை எடுத்து வந்தான்.

''உங்களுக்குப் பிடிக்காத கதைகளுக்கான ப்ளாட்டுகள் இந்த நோட்டுப் புத்தகத்துல இருக்கு. இப்போதெல்லாம் எனக்கும் பிடிக்காத கதைகளாகப் போயிடுச்சு. இதோ இதுதான் நான் சொன்ன அக்னி'' என்று கூறியபடி நோட்டுப் புத்தகத்தைக் கீழே தரையின் மீது வைத்து ஒரு தீக்குச்சியைக் கிழித்து அதைப் பற்றவைத்தான். நோட்டுப் புத்தகம் பகபகவென்று எரிந்தது.

சத்யன், ''இந்த அக்னி சாட்சியாக இனிமேல் இது எரிக்கிற கதைகளைப் போலக் கதைகளை எழுத மாட்டேன். இந்தக் கை இனிமேல் பெண்களின் பெருமையையே எழுதும். இந்தக் கைக்கு ஹோம அக்கினி சாட்சியாக வாணியின் கையைப் பற்றும் அதிருஷ்டம் சீக்கிரமே கிட்டுமா?''என்று கேட்டபடி வாணியின் கையைப் பற்றினான்.

வாணியின் முகம் அக்னியின் வெளிச்சத்தில் சிவந்ததா, வெட்கத்தில் சிவந்ததா என்று சத்யன் யோசித்தான்.

முன்னேறிய மருத்துவம்:

ஓ! ஒரு நீண்ட நெடிய ஓ!

டாக்டர். இ.எஸ்.எஸ்.இராமன்



சென்னை. மத்திய அரசின் நிறுவன மொன்றின் உயர் அதிகாரி ஒருவருக்கு வித்தியாசமான போன் கால் வந்தது.

''ஸார்... நான் நீங்கள் பணியாற்றும் நிறுவனத்தின் டில்லி ஆபீஸில் பணியாற்றுகிறேன்.... இங்கு நான் மெட்ராஸில் ஒரு ஸ்பெஷல் ட்ரீட்மெண்டுக்காக வந்திருக்கிறேன். நான் கொண்டு வந்த பணம் போதவில்லை... மேற்கொண்டு இரண்டாயிரம் தேவை.... ப்ளீஸ்... உதவி செய்யுங்கள்!''

''சரி... நாளை இதே நேரத்துக்கு போன் செய்யுங்கள்.''

மறுநாள் போனில் பதில்: ''ஸாரி!''

விடவில்லை அந்த ஊழியர். நேராக அலுவலகத்துக்கே வந்து விட்டார். அந்த உயர் அதிகாரிக்குச் சந்திப்பதைத் தவிர வேறு வழியில்லை.

''ஸார்... நான் வெளிநாட்டுப் பிரஜை.''

பாஸ்போர்ட் காண்பித்தார். உண்மை தான்.

''ஒரு காண்ட்ராக்ட் பேரில் இந்தியாவுக்குப் பணியாற்ற வந்திருக்கிறேன். உங்கள் டில்லி ஆபீஸில் நானும் ஒரு ஊழியன்.''

அடையாளக் கார்டு கைவசமிருந்தது. போலியில்லை.


''எனக்கு நீண்ட நாட்களாக வயிற்று வலி 'சீக்கம்' (Çaecum) இருக்குமிடத்தில் என்று நினைக்கிறேன். டில்லி மருத்துவமனை ஒன்றில் காண்பித்தேன்.''

புதுதில்லியில் பிரபல மருத்துவமனை ஒன்றின் பெயரைச் சொன்னார்.

''அல்சர் என்றார்கள். பேரியம் மீல்..., பிளெய்ன் எக்ஸ்ரே... நேராக..., சாய்வாக.., பற்பல எக்ஸ்ரேக்கள். துணையாக ரத்தப் பரிசோதனைகள்... சாப்பிடு முன்பு, சாப்பிட்ட பின்பு... ஒரிரு மாதங்கள்... ஐந்தாறு ஸ்பெஷலிஸ்ட்கள்... ஈராயிரம் மூவாயிரம் கரைந்தது. ஆனால் 'அல்சர்' தான் குணமாகவில்லை.''

''ம்... அப்புறம்'' —ஃபைலில் தலையைக் கவிழ்த்தபடியே தலையாட்டினார் அந்த உயர் அதிகாரி.

''மனம் முறிந்துபோனேன். என்ன டாக்டர்... வாட் ட்ரீட்மெண்ட்... வலி குறைந்த பாடில்லையே. வலி நிவாரணிகள் என்ன, கடலில் கரைத்த புளிதானா? 'கவலைப்பட ஆரம்பித்துக் கவலையே என்னை ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது' என்றேன். டாக்டர் சொன்னார்: 'நோ...நோ... உங்கள் நோய் இன்னதென்று நிர்ணயிக்க இத்தனை டெஸ்ட்களும் போதவில்லை. புதிதாக ஒரு டெஸ்டிங்



எண்டோஸ்கோப்-உணவுக்குழல் மண்டலத்தைப் பார்க்க உதவும் கருவி.

முறை வந்திருக்கிறது. Total Body scanning. உடம்பையே சல்லடை போட்டு அரித்தெடுத்துச் சொல்லிவிடும்... ஆனால் அதற்கு நீங்கள் சென்னைக் குத்தான் செல்ல வேண்டும்'. 'டில்லியில் இல்லாததா?' என்றேன். 'யெஸ்... இங்கே இருக்கிற ஸ்கேன்னர்களால் ஒரு குறிப்பிட்ட பாகத்தைத்தான் சோதிக்க இயலும். ஆனால் சென்னையில் வந்திருக்கிற Total Body scanner....OK முயன்று பாருங்கள்' என்றார் டாக்டர்.''

வெறுமனே கேட்டுக் கொண்டிருந்த அந்த உயர் அதிகாரிக்கு இப்பொழுது சற்று ஆர்வம்

இந்த இதழில்

பயனுள்ள இலவச இணைப்பு:

பிரச்சினைகளைச் சமாளிப்பது எப்படி?

மத்தியில் உள்ள பின்களை நீக்கி எட்டுப் பக்கங்களைத் தனியே எடுத்து இரண்டாக மடித்துக் குண்டூசி பொருத்தினால் 16 பக்க அளவில் படித்துப் பாதுகாத்து வைக்கவேண்டிய நூல் கிடைக்கும்.

பிறந்தது: ''சென்னையில் இவ்வளவு வசதிகள் இருக்கிறதா?''

உதவி கேட்க வந்தவர் தொடர்ந்தார்: ''சொல்கிறேன்... முழுக்கக் கேளுங்கள்... ஸ்கேன்னிங் என்றால் என்னவென்ற கேள்வி என்னை அரித்தது. 'உடலில் ஊடுருவிப் பார்த்து உடல்நிலைக்கேற்பப் புள்ளிகளை ஒரு காகிதத்தில் வரையும் இயந்திரம். அப்புள்ளிகளின் அமைப்பைப் பார்த்து நோயின் தன்மை அறியப்படும்' என்றது எங்கேயோ கிடைத்த ஒரு சிறு பிரசுரம். நம்பிக்கை துளிர்த்தது. சென்னைக்குக் கடிதம் எழுதினேன். பதில் வந்தது. அந்த டெஸ்ட்டுக்கு ரூபாய் ஏழாயிரம் என்று எழுதியிருந்தார்கள்.''

கடிதத்தைக் காட்டினார். செக்ரட்டரி என்று கடிதத்தில் 40 டிகிரி சாய்வில் ஒரு நேர் கோட்டைக் கையெழுத்தாகப் போட்டிருந்தார் ஒரு பெண்மணி.

''ஜி.பி.எஃப், அட்வான்ஸ், கையிருப்பு என்று புரட்டி சென்னை வந்தேன். இங்கு வந்ததும் சென்னை டாக்டர், டில்லியில் செய்யப்பட்ட எல்லா டெஸ்ட்களையும் இங்கு செய்தால்தான் ஸ்கேன்னிங் வைத்து முடிவு சொல்ல இயலும் என்றார். எப்படியோ ஆயிற்று. இப்பொழுது அதற்காக இரண்டாயிரம் ரூபாய் அதிகமாக பில் போட்டிருக்கிறார்கள். ஸோ... எனக்கு உங்கள் உதவி தேவை. நானோ வெளிநாட்டுப் பிரஜை. எனக்கு இந்த நிறுவனத்தைத்தான் சென்னையில் தெரியும். நான் உங்களில் ஒருவன்... நீங்கள் உதவா விட்டால் வேறு யார்....''

''யெஸ் மிஸ்டர்... இது உங்கள் நிறுவனம்தான்... இதுரென்று பணம் கொடுக்க டில்லியிலேயே கூட முடியாது... சட்டம் விதிகள் இருக்கின்றன... ஒன்று வேண்டுமானால் செய்யலாம். நீங்கள் குறிப்பிடுகிற டாக்டர் இங்கு சில பேருக்குத் தெரியும். நீங்கள் கட்ட வேண்டிய பணத்தை நீங்கள் டில்லிக்குப் போய் ஏற்பாடு செய்து அனுப்புவதாக இருந்தால் ஏதாவது சமாதானம் சொல்லி டாக்டரிடம் டிஸ்சார்ஜ் செய்து கொள்ளலாம். ஓ.கே?''

''ஓ.கே!''

இவ்வளவு கதையையும் கேட்டுக் கொண்டு பக்கத்திலிருந்த எனக்கு ஆவல். இந்தச் சென்னை ஆஸ்பத்திரியில் என்ன செய்தார்கள்?

மறுநாள் அவரைச் சந்தித்து டிஸ்சார்ஜ் ரிகார்டை வாங்கிப் பார்த்தேன். வழக்கமான பெயர்... வயது... முகவரி... வரிகளுக்குப் பிறகு Diag nosis and Discussion இருந்தது:

பேரியம் மீல் எக்ஸ்ரேசிரிஸ் — அசாதாரணம்; எதுவுமில்லை.
ஸ்கேன்னிங்: அசாரதாரணம் எதுவுமில்லை
ரத்தப் பரிசோதனைகள்: அசாதாரணம் எதுவுமில்லை.
எண்டாஸ்கோப்: அசாதாரணம்; எதுவுமில்லை.
இத்யாதி இத்யாதி: அசாதாரணம் எதுவுமில்லை.

கடைசியில் அறிவுரைதான் என்ன சொன்னார்கள்?

'நீர் ஒரு மனநல மருத்துவரைக் கலந்தாலோசிப்பது நலம்.'

ஓ! 'எதுவுமில்லை' என்று சொல்ல இத்தனை பரிசோதனைகளா? மிகவும் பொறுமையாக டாக்டரே சம்பிரதாய முறையில் நோயாளியைப் பரிசோதித்து இதைச் சொல்லியிருக்க முடியாதா? 'முன்னேற்றம் முன்னேற்றம்' என்று சொல்வதெல்லாம் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஒட்டாண்டியாக்கி நோயாளியின் மேல் கையையேவைக்காமல் இயந்திரங்களைக் கொண்டு கூறுபோட்டுப் பார்க்கத்தானா? ஓ! (நீண்ட, நெடிய ஓ!)

நல்லதும் கெட்டதும்



காஞ்சி காமகோடிப் பெரியவர்களிடம் ஒரு சமயம் கவிஞர் கண்ணதாசன், உலகில் நல்லதும் கெட்டதும் கலந்திருப்பதைக் குறித்துத் தம் ஐயத்தை எழுப்பினார். கவிஞரின் ஐயத்தைத் தீர்த்து வைக்கும் வகையில் பெரியவர்கள் இப்படியொரு விளக்கத்தைத் தந்தார்கள்.

''நீங்கள் சினிமாத்துறையில் இருக்கிறீர்கள். ஸ்டுடியோவில் நல்ல வெளிச்சத்தில் படம் எடுக்கிறீர்கள். என்றாலும், நல்ல வெளிச்சத்தில் எடுத்த பிலிமை மிகவும் இருட்டான அறையில் தானே பின்னர் கழுவி எடுக்கவேண்டியிருக்கிறது? வெளிச்சத்தையும் இருட்டையும் கடந்து தானே ஒரு திரைப்படம் உருவாகிறது? அது போலத்தான் நல்லதும் கெட்டதும் கலந்தது உலகம்!''

பெரியவர்களின் இவ்வளவு நுணுக்கமான விளக்கம் கவிஞரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது!

தகவல்: 'குமரி தமிழ்ச்செல்வன்'.

வீட்டில் அனைவரின் கேசப் பராமரிப்புதானே? அதற்கு நம்பகமானது, விசேட ஃபேமிலி ஷாம்பூ பாமோலிவ்.



பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர், அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்



பாமோலிவ், எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது, வளமையான நவீன ஷாம்பூ. உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது, பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு நேசமானது-உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது

GK&E PS.7 TM

கள்வனின் காதலி



பூர்வகதை

பூங்குளம் கிராமத்தில் முத்தையனின் மனம் கவர்ந்த நங்கை கல்யாணி, செல்வந்தர் வீட்டுப் பெண். முத்தையன் பெற்றோரை இழந்ததுடன் கொள்ளிடம் வெள்ளப் பெருக்கெடுத்தபோது மணலடித்துப்போகவே மூன்று போகம் விளைந்த பூமியையும் இழக்கிறான். வறுமையில் உழலும் அவன் மீது தங்கை அபிராமி உயிரையே வைத்திருக்கிறாள்.

முத்தையனின் முறைப் பெண் கல்யாணியை ஐம்பது வயதான பணக்காரர் ஒருவருக்குக் கொடுப்பதாகப் பேச்சு வார்த்தை நடக்க, முத்தையன் பதறுகிறான். நாணல் காட்டின் மத்தியில் ஒரு பாழடைந்த கோயிலில் கல்யாணி முத்தையனைச் சந்தித்துப் பேசுகிறாள். நகைகளை அணிந்து வந்திருப்பதாகவும் இருவரும் எங்காவது கண்காணாத தேசத்துக்குப் போய்விடலாம் என்றும் சொல்கிறாள். தங்கை அபிராமியை என்னசெய்வது? அவளைவிட்டுப்பிரியமனம்வராததால் வேதனையுற்ற முத்தையன், கல்யாணியைக் கடுசொற்களால் துன்புறுத்தி அனுப்பி விட்டுத் தானும் அழுகிறான்.

வீடு திரும்பிய முத்தையனுக்கு வேலை தருவதாகக் கூறி கடிதம் வந்திருக்கிறது. வேலையை ஒப்புக்கொள்ளத் தங்கையுடன் பூங்குளத்தை விட்டே கிளம்பிவிடுகிறான். வழியில் வண்டி குடைசாய்கிறது.

அத்தியாயம் 7

செல்வப்பெண் கல்யாணி

பூங்குளத்தையடுத்த கொள்ளிடக் கரைக் காட்டில் ஒரு வனதேவதை

அமரர் கல்கி



இருக்கிறதென்று அந்தப் பிரதேசத்திலெல்லாம் ஒரு வதந்தி பரவியிருந்தது.

நதியில் வெள்ளம் சுமாராய்ப் போகும் காலத்தில் ஜில்லா கலெக்டர், எக்ஸிகியூடிவ் என்ஜினியர் முதலிய உத்தியோகஸ்தர்கள் அந்தப் பக்கம் 'காம்ப்' வரும்போது, நதிக் கரையோரமாய்ப் படகில் பிரயாணம் செய்வார்கள். அப்போது அவர்கள் சில சமயம் மேற்படி வன தேவதையைப் பார்த்து வியப்புறுவதுண்டு.

சில வேளைகளில் அந்தத் தேவதை ஜலக் கரையிலே ஓடுகிற தண்ணீரில் கால்களைத் தொங்க விட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கும். படகைக் கண்டதும் எழுந்து நாணற் காட்டுக்குள் ஓடி மறைந்து விடும். வேறுசில சமயம் அந்தத் தேவதை நாணற் காட்டிற்குள் ஒளிந்த வண்ணம் புன்னகை பூத்த தனது முகத்தை மட்டும் காட்டிக் கொண்டிருக்கும். இன்னும் சில சமயம் தூரத்தில் மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு, படகில் போகிறவர்களுக்கு அழகு காட்டும்!

ஆனால் பூங்குளம் கிராமவாசிகளிடம் இந்த வனதேவதையைப் பற்றிக் கேட்டால் மட்டும் அவர்கள் குப்பென்று சிரித்துவிட்டு, ''வனதேவதையாவது ஒன்றாவது! நம்ம நடுப்பண்ணை வீட்டுப் பெண் கல்யாணிதான் ஆற்றோரம் திரிந்து கொண்டிருப்பாள்'' என்று சொல்வார்கள்.

கல்யாணியின் குழந்தைப் பிராயத்திலேயே அவளுடைய தாயார் இறந்து போனாள். அதற்குப் பிறகு அவளுடைய தாயாரின் ஸ்தானத்தில் இருந்து அவளை வளர்த்தது அந்த நதிப் பிரதேசந்தான்.

பகலில் பெரும் பொழுதைக் கல்யாணி நதிக் கரையிலும், நதிக் கரைக் காட்டிலுமே கழிப்பது வழக்கம். உயர் குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு இவ்வளவு சுதந்திரம் கிடைத்திருந்தது அந்தப் பிரதேசத்தில் சற்று ஆச்சரியமான விஷயமே. ஆனால் அதற்குத் தக்க காரணம் இருந்தது.

கல்யாணியின் தாயார் இறந்த பிறகு அவளுடைய தகப்பனார் திருச்சிற்றம்பலம் பிள்ளை இரண்டாந்தாரம் கல்யாணம் செய்து கொண்டார். மூத்த மனைவியின் சந்ததி கல்யாணி ஒருத்தி தான். அவள் மேல் அவளுடைய தகப்பனார் உயிரையே வைத்திருந்தார் என்று சொல்ல வேண்டும். ''இம்மாதிரி, தகப்பனார் பெண்ணுக்குச் செல்லம் கொடுத்து வளர்ப்பதைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை'' என்று ஊரார் பேசிக் கொண்டார்கள்.

மூத்த தாரத்தின் பெண்ணை மாற்றாந்தாய் படுத்துவதென்னும் உலக வழக்கம் அந்த வீட்டில் கிடையாது. உண்மையில் நிலைமை அதற்கு நேர் மாறாக இருந்து வந்தது. வீட்டில் கல்யாணி வைத்ததுதான் சட்டம்; அவள் பேச்சுக்கு எதிர்ப் பேச்சு இல்லை. அவளுக்குப் பயந்துதான் அவளுடைய சிறிய தாயார் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த நிலைமைக்கு முக்கிய காரணம் திருச்சிற்றம்பலம் பிள்ளை தம் மூத்த மகளிடம் வைத்திருந்த அபிமானமே யாயினும், கல்யாணி சொந்தத்தில் சொத்துடையவளா யிருந்ததும் ஒரு காரணம் என்பதைச் சொல்ல வேண்டும்.

கல்யாணியின் தாயார் கொண்டு வந்த மஞ்சள் காணி ஆறு ஏக்கரா முதல்தர நன்செய் நிலமும், அவளுடைய ஐந்தாயிரம் ரூபாய் பெறுமான நகைகளும் கல்யாணிக்குச் சொந்தமாக இருந்தன. வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, இது அவளுக்குக் கௌரவம் அளித்தது. ஒருவாறு சுதந்திரத்துடன் நடந்து கொள்ளவும் இடம் கொடுத்தது.

● ● ●

திருச்சிற்றம்பலம் பிள்ளை இரண்டாந் தாரம் கல்யாணம் செய்து கொண்டதிலிருந்து பெரிய குடும்பஸ்தர் ஆனார். கிட்டத்தட்ட வருஷத்துக்கு ஒரு குழந்தை வீதம் வீட்டில் ஜனத்தொகை அதிகரித்து வந்தது. அதே சமயத்தில் அவருடைய பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் சுருங்கி வந்தது. நெல் விலையும் நிலத்தின் விலையும் மளமளவென்று இறங்கி வர கடனும் வட்டியும் அதி வேகமாய் ஏறி வந்தன.

போதாதற்குக் கொள்ளிடத்து உடைப்பில் அவருடைய நிலத்தின் ஒரு பகுதி நாசமாயிற்று. அதைச் சீர்திருத்துவதில் கடன் மேலும் வளர்ந்தது. கடைசியில், நிலைமை ரொம்ப நெருக்கடியானபோது, கல்யாணியின் தாயார் அவளுக்கு வைத்துவிட்டுப் போன நகைகளை விற்பதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று.

விற்ற நகைகளுக்குப் பதில் நகை கல்யாணிக்குப் பண்ணிப் போடவேண்டும் என்றுதான் திருச்சிற்றம்பலம் பிள்ளை எண்ணியிருந்தார். முடிந்தால் செய்துமிருப்பார். ஆனால், மேலும் மேலும் தரித்திரம் அதிகமாகி வருகையில், அந்தந்த வருஷத்து வரிப் பணம் கட்டிக் காலட்சேபம் செய்வதே கஷ்டமாயிருக்கையில் புதுநகை எப்படிப் பண்ணிப் போடுவது?

கடைசியில் கல்யாணிக்குக் கல்யாண வயது வந்தபோது, திருச்சிற்றம்பலம் பிள்ளையின் 'உள்ள நிறைவில் ஒரு கள்ளம் புகுந்தது' என்று சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. அவளை ரொம்பப் பணக்கார இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து விட வேண்டும், அவளுக்கு அவள் தாயார் வைத்துப் போன மஞ்சள் காணி நிலத்தையும், நகைகளையும் பொருட்படுத்திக் கேட்காத மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இந்த நோக்கத்துடனேதான், வாலிபப் பிள்ளைகளுக்குப் பெண் கேட்கவந்த அநேகம் பேரை அவர் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தார்.

கடைசியாக, தாமரை ஓடைப் பெரிய பண்ணையிலிருந்து மனுஷ்யாள் வந்து பெண் கேட்டபோது, இந்த இடந்தான் நாம் சம்பந்தம் பண்ண

ஒருவன்: ''நீங்க பெயர் போன எழுத்தாளராமே?''
எழுத்தாளர்: ''ஆமாம். என்னோட கதை எந்தப் பத்திரிகையில் வெளி வந்தாலும் கட்டிவ்ல என்னோட பெயர் போயிடும்!''
-பட்டுக்கோட்டை ரவி



எமது உளங்கனிந்த
தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

V.Y.D **தேங்காய் எண்ணெய்**
Coconut Oil



EP-VVD-1505

ஜலதோஷம் உங்கள் நாளையே கெடுக்க அனுமதிக்காதீர்கள்



ஜலதோஷத்தைப் போக்கலாம்

நல்ல ஒரு நாளையே கெடுக்கும் மூக்கு ஒழுகுதல் அல்லது மூக்கடைப்பு, தலை கனம், தொண்டைக்கட்டு மற்றும் மார்சளி போன்றவற்றுடன் உள்ள ஜலதோஷத்திலிருந்து நிவாரணம் பெற ஒரு வழி இருக்கிறது.

ஜலதோஷ மருந்து கொண்டு தாக்கிடுங்கள்

மற்ற உபாதைகளைப் போன்றே இதற்கும் சிகிச்சையளித்தால் போதாது. பாதிக்கப்பட்ட பாகங்களிலெல்லாம் ஒரே சமயத்தில் செயல் புரியவல்ல விசேட ஜலதோஷ மருந்தையே உபயோகியுங்கள்.

கோல்டரின் ஜலதோஷத்திற்கு மட்டுமே

உங்கள் சுறுசுறுப்பைக் கெடுக்கும் அறிகுறிகள் அனைத்தையும் போக்குகிறது— கோல்டரின். இதிலுள்ள விசேட மருந்துப் பொருட்கள் ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட எல்லா பாகங்களிலும் ஒருங்கிணைந்து செயல்புரிகின்றன. அதோடு, ஜலதோஷ எதிர்ப்பு சக்தியை வளர்த்திட இதில் வைட்டமின் C உள்ளது.

ஜலதோஷத்தினால் பாதிக்கப்படும் போது ஜலதோஷ மருந்தையே சாப்பிடுங்கள்.

கோல்டரின்

விசேட ஜலதோஷ மருந்து

CASBC-64-172 TM

வேண்டிய இடம் என்று திருச்சிற்றம் பலம் பிள்ளை உடனே தீர்மானித்து விட்டார்.

• • •


கல்யாணியிடம் அவளுடைய தகப்பனார் அளவில்லாத பிரியம் வைத்திருந்தார் அல்லவா?

ஏறக்குறைய ஐம்பது வயதான தாமரை ஓடைப் பண்ணையாருக்கு அவளைக் கல்யாணம் செய்து கொடுக்கத் தீர்மானித்த போது, பெண்ணைக் கொடுத்துத் தாம் சௌக்கியமாயிருக்க வேண்டும் என்னும் எண்ணம் அவருக்குக் கிஞ்சித்தும் இல்லை. அவ்வளவு பெரிய இடத்தில் வாழ்க்கைப்படுவதில் அவளுக்கு ஏற்படக் கூடிய நன்மைகளைப் பற்றியே அவர் அதிகமாய் எண்ணி, அதிலுள்ள பிரதிகூலத்தை அலட்சியம் செய்தார்.

கல்யாணியின் விவாகம் சம்பந்தமாகக் கேவலம் முத்தையனைப் பற்றி அவர் ஒரு கணமும் சிந்திக்கவில்லை. ஊரிலே சிலர் பிரஸ்தாபித்தார்கள். ஆனால், அவர் அந்தப் பேச்சை ஒரேயடியாய் அடித்துப் போட்டு விட்டார். நன்றாயிருக்கிறது! தாமரை ஓடைப் பண்ணைக்கு வாழ்க்கைப்பட்டால் முத்தையனைப் போல் நூறு பேர் 'ஏவல் கூவல் பணி' செய்யக் காத்திருப்பார்களே!

வயதைப் பற்றி அவர் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. என்ன பிரமாதம்? தாமே நாற்பது வயதுக்கு மேல் இரண்டாந் தாரம் கல்யாணம் செய்து கொள்ளவில்லையா? தமது இரண்டாவது மனைவியிடத்தில் தாம் உயிருக்குயிராய் இல்லையா? வாலிப வயதுள்ளவர்களுக்கு வாழ்க்கைப் பட்டவர்கள் தான் சுகப்படுகிறார்கள் என்று எந்தச் சட்டத்தில் எழுதி வைத்திருக்கிறது?

இப்படியெல்லாம் அவர் தம்முடைய மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டிருந்தாலும், ''கல்யாணி பிடிவாதக் காரப் பெண் ஆயிற்றே? அவள் என்ன சொல்வாளோ?'' என்று மட்டும் அவருக்குத் திக்குத் திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. ஏற்பாடுகள் என்னமோ நடந்து கொண்டிருந்தன. கல்யாணிக்கு எல்லாம் தெரிந்துதானே இருக்கும். அப்படி ஆட்சேபிக்கிறதாயிருந்தால் அவளே வந்து சொல்லட்டுமே என்று அவர் முதலில் எல்லாம் சும்மா இருந்தார். அவள் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல் இருக்கவே, சமயத்தில் ஏதாவது முரட்டுத்தனம் செய்து விடப் போகிறாளே என்ற பயம் உண்



ஆசிரியர்: ராமு, ஏன் பறவைகள் குளிர் காலத்தில் வடக்கே இருந்து தெற்கே பறந்து வருகின்றன?''
பையன்: ''நடந்து வருவதை விடப் பறந்து வருவது தேவலாமென்றுதான்!''
-ஆர். ராஜகோபாலன்

டாயிற்று. ஆகவே, கல்யாணத்துக்கு நாலு நாளைக்கு முன்பு அவளைத் தனியாகக் கூப்பிட்டு, விஷயத்தைப் பிரஸ்தாபித்தார். அப்போது கல்யாணி அவர் சற்றும் எதிர்பாராத உற்சாகத்துடனே, ''பூரண சம்மதம் அப்பா! இவ்வளவு பெரிய இடமாகப் பார்த்து நீங்கள் எனக்குக் கல்யாணம் நிச்சயம் செய்கிறபோது எனக்கென்ன குறைவந்திருக்கிறது! நான் நன்றாயிருக்க வேண்டும் என்பதில் உங்களுக்குக் கவலை இல்லையா? நீங்கள் பார்த்துச் செய்வதற்கு நான் மறு வார்த்தை சொல்வேனா?'' என்று கூறவும் திருச்சிற்றம்பலம்பிள்ளை உண்மையில் திடுக்கிட்டே போனார். அச்சமயம் அவருடைய மனச்சாட்சி சற்று உறுத்திய போதிலும், உடனே அதை மறந்து விட்டு, கல்யாணத்துக்குரிய ஏற்பாடுகளைப் பலமாகச் செய்யத் தொடங்கினார்.

அவர் அப்பால் போனவுடனே, கல்யாணி காமிரா உள்ளுக்குள்ளே போய்க் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு தரையில் புரண்டு விசித்து விசித்து அழுதாள் என்பது அவருக்கு எப்படித் தெரியும்? நேற்று வரையில் அவள், முத்தையனைத் தவிர வேறொருவருக்கு வாழ்க்கைப்படுவதைக் காட்டிலும் கொள்ளிடத்து மடுவில் விழுந்து உயிரை விடத் தீர்மானித்திருந்தாள் என்பதும் இன்று மத்தியானம் முத்தையனுக்கு முன்னால் செய்து விட்டு வந்த சபதத்தின் காரணமாகவே அவள் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தாள் என்பதும் அவருக்கு என்ன தெரியும்? முத்தையனுடைய ஆத்திரமான மொழிகளால் தானும் ஆத்திரம் கொண்டு, கல்யாணத்துக்குச் சம்மதம் கொடுத்து விட்ட பின்னர் இப்

பொழுது அவள் நெஞ்சம் பிளந்து விடும் போன்ற கொடிய வேதனையினால் துடித்துக் கொண்டிருந்தாள் என்பதைத் தான் திருச்சிற்றம்பலம் பிள்ளை எவ்வாறு அறிவார்?

அத்தியாயம் 8

மணப் பந்தலில் அமளி

தாமரை ஓடைக் கிராமத்தில் வீதியை அடைத்துக் கொட்டாரப் பந்தல் போட்டிருந்தது. பந்தல் அலங்காரத்துக்கு மட்டும் குறைந்தது ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கும்.

அந்தப் பெரிய பந்தல் இடம் கொள்ளாதபடி ஜனங்கள் நெருங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். பந்தலுக்கு வெளியே குடியானவர்களும், குடியானவ ஸ்திரீகளும் தெருவை அடைத்துக்கொண்டு நின்றார்கள்.

இரண்டு கோஷ்டி தங்க நாயனமும் இரண்டு கோஷ்டி வெள்ளி நாயனமும் சில சமயம் தனித் தனியாகவும் சில சமயம் சேர்ந்தும் ஊதிக் காதைத் துளைத்துக் கொண்டிருந்தன. தவுல்காரர்கள் தங்கள் கையில் பலம் கொண்ட மட்டும் அடித்து, காது செவிடுபடச் செய்தார்கள். சில சமயம் பாண்டு வாத்தியங்களும் நடுவில் கிளம்பி அலறின.

பந்தலுக்குள்ளே, சந்தன மழையும், பன்னீர் மழையும், பூமாரியும் மாறி மாறிப் பொழிந்து கொண்டிருந்தன.

புரோகிதர் மந்திரங்களைப் பொழிந்தார்.

திருமாங்கல்யதாரணம் செய்யவேண்டிய சமயம் வந்தது.

''ஊது, ஊது'' என்று புரோகிதர் கூவினார். உடனே ஏக காலத்தில் நாலு நாயனக்காரர்கள் வாயில் வைத்தவாத்தியத்தை எடுக்காமல் ஊதினார்கள். தவுல்காரர்கள் அடி அடியென்று அடித்தார்கள்.

மாப்பிள்ளை தாலியை எடுத்து மணப்பெண்ணின் கழுத்தில் கட்டினார்.

தாலி கட்டிய அடுத்த நிமிஷத்தில் ஸ்திரீகள் கோஷ்டியிலிருந்து ''ஐயோ! கல்யாணிக்கு என்ன?'' என்று ஒரு குரல் எழுந்தது. அப்படிச் சொன்ன ஸ்திரீயின் வாயை இன்னொருத்தி பொத்தி ''அசடே! அபசகுனம் போல் என்ன சொல்கிறாய்?'' என்றாள்.

ஆனால் வாஸ்தவத்திலேயே கல்யாணிக்கு என்ன?

அவளுடைய கண்ணைக் கொண்டு போய்அப்படிச் சொருகுகிறதே! ஐயோ! அவளுடைய தலை அப்படி சாய்கிறதே!

''கொண்டு போங்கள்! உள்ளே கொண்டு போங்கள்!''

நாலு பேராகப் பிடித்து மெதுவாய் அவளை ஓர் அறைக்குள்ளே கொண்டு போனார்கள். பாயில் படுக்க வைத்தார்கள்.

கல்யாணி பிரக்ஞை இழந்தாள்.

''கல்யாணிக்கு என்ன?'' ''கல்யாணிக்கு என்ன?'' என்ற கேள்வி எங்கும் பரவியிருந்தது. பந்தலிலும் வீட்டுக்குள்ளும் புருஷர் களிடையிலும் ஸ்திரீகளிடையிலும் இதே கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''கிளம்பும்போது சகுனம் சரியாக ஆகவில்லை'' என்றார்கள் சிலர்.

''இந்தப் பெண்தான் உச்சி வேளையிலே கொள்ளிடக்கரை அரச மரத்தடியில் போய் நிற்குமே? எந்தப் பேயோ, பிசாசோ, என்ன கண்றாவியோ?'' என்றார்கள் வேறு சிலர்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. இராத்திரியிலிருந்து பெண் சாப்பிடவில்லையாம்! பசி மயக்கம்!'' என்றார்கள் சிலர்.

கல்யாணி நினைவற்றுக் கிடந்தாள்?

டாக்டர் வந்து எல்லாரையும் விலகச் சொல்லிக் கொஞ்சம் காற்றோட்டம் உண்டு பண்ணினார்.

''ஒன்றும் அபாயமில்லை'' என்று உறுதி சொல்லி, முகத்திலே கொஞ்சம் ஜலம் தெளித்து, மூக்கில் மருந்துப் புட்டியைக் காட்டினார்.

கல்யாணிக்கு ஸ்மரணை வரத் தொடங்கியது. அவளுடைய இதழ்கள் அசைந்தன. அவை ஏதோ முணுமுணுத்தன.

அந்த முணு முணுப்பு யார் காதிலும் விழவில்லை; விழுந்திருந்தாலும் அவர்களுக்குப் புரிந்திராது.

ஆமாம்; கல்யாணியின் இதழ்கள் முணு முணுத்த வார்த்தைகள் இவை தான்:''வண்டி குடை சாய்ந்து விட்டது! வண்டி குடை சாய்ந்துவிட்டது! வண்டி குடை சாய்ந்து விட்டது!''

(தொடரும்)

திரைக்கதைகள் அல்ல!

இவ்விதழில் இடம்பெறும் சிறுகதைகள் சினிமாக் கதைகள் அல்ல! தலைப்புக்கள் மட்டுமே கடன் வாங்கப்பட்டவை. கதைகளின் முதல் சில வரிகளைக் கதாசிரியர் கையெழுத்திலேயே காண்கிறீர்கள்.

கருத்து : ப்ரியன்

இதோ! "சாக்லேட் சுவையோ, சாக்லேட் மிட்டாயோ" என மலைக்கவைக்கும்...



பால் மிக்கது, வெண்ணெ சொக்குது,
சாக்லேட் சுரங்கமாய்,
மெத்தென மயக்குது.



மிருதுவான, மனோகரமான
சாக்லேட் தீஞ்சுவை. இனிமை-
யிலும் புதுமை. ரசனையிலும்
ஓர் புதுமை. நியூட்ரின்
சாக்லேட் எக்லேர்ஸ்

CAS NC 2 82 F TAM



நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி
பிரைவேட் லிமிடெட்
சித்தூர் 517 002 (ஆ.பி.)

nutrine

காவிரி நதிநீர் நமக்கு

வருஷா வருஷம் தஞ்சை விவசாயப் பாசனத்துக்குக் காவிரிநீரைத் திறந்து விடும்படி கர்நாடக அரசைக் கெஞ்சுவதும், அவர்கள் நாள், நட்சத்திரம் பார்த்து 'ஏதோ பாவம், போகட்டும்' என்று திறந்து விடுவதும், செப்டம்பர், அக்டோபர் மாதங்களின் வழக்கமான சடங்குகளில் ஒன்றாகி விட்டது.

மேட்டூர் அணை மூடப்படுவது புதுசு அல்ல. 1977ல், 1965ல், அதற்கு முன் சில தடவைகளில் மூடப்பட்டிருக்கிறது என்று 'குறை'க்குச் சமாதானம் கூறலாம்.

இந்த மாதிரி சமயங்களில் பேச்சுவார்த்தை நடத்துவதும், கடிதப் போக்குவரத்து, அவசரத் தந்திகள் முதலானவையும் சகஜமாக இருந்திருக்கின்றன.

தண்ணீர்ப் போராட்டம் 1974க்குப் பிறகு அதிகமாகியுள்ளது. அதற்குக் காரணம் 1924ல் செய்துகொண்ட அரை நூற்றாண்டு ஒப்பந்தம் காலாவதியாகிப் போய்விட்டது தான்! 1974க்கு முன்னால் மட்டும் என்ன வாழ்ந்தது? 1962ல் காமராஜ் முதல்வராக இருந்த காலத்திலும், பக்தவத்சலம் முதல்வராக இருந்த காலத்திலும் கூட கர்நாடகா நம் கால்களை வாரி விட்டிருக்கிறது. இருந்தாலும் ஒரே கட்சி இரண்டு மாநிலங்களிலும் ஆட்சி செய்ததால் பிரச்னை பெரிதாக வெடிக்கவில்லை. ஆனால் இன்று ஆட்சியிலிருப்பது மாற்றுக் கட்சி.

இதிலே சங்கடம் என்னவென்றால் தமிழக அமைச்சர்களில் பேசத் தெரிந்தவர்கள், பேச உரிமை பெற்றவர்கள் சிலர் வாய்க்குவந்தபடி பேசிப் பிரச்னையை வளர்த்து விட்டார்கள்.

ஒரு அமைச்சர் காவிரியில் தண்ணீர் விடவில்லை என்றால் புரட்சி வெடிக்கும் என்று கூறியிருக்கிறார்.

ஒரு அமைச்சர், ''காவிரியில் தண்ணீர் விடாவிட்டால் மத்திய அரசு திமிரை அடக்குவோம். கதவு திறக்காவிட்டால் உடைத்தெறிவோம்'' என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.


''பெரியகுளம் இடைத்தேர்தல் முடிவை வைத்து மத்திய அரசின் ஆசியுடன் குண்டுராவ் காவிரி நீரில் பழிவாங்குகிறார்'' என்று ஒரு அமைச்சர்.

இன்னும் சில அமைச்சர்கள் ''இவ்வளவுக்கும் காரணம் முன்னாள் முதல்வர் கருணாநிதிதான்'' என்று பல்லவி பாடியுள்ளனர்.

பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுதான் என்ன?

மத்திய அரசு நினைத்தால் நமது அரசியல் சட்டப்படி மாநிலங்களுக்கிடையே பாயும் நதி நீர்ப் பங்கீட்டைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும். மாநில அரசுகளும் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவையே. இந்திய அரசியல் சட்டம் 262ம் பிரிவின்படி, பாராளு மன்றத்துக்கு மாநிலங்களில் உள்ள நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்னைகள் மீது சட்டம் இயற்றும் அதிகாரம் உள்ளது. ஆனால் இதுவரை மாநில நதி நீர்ப் பங்கீடுகளை நிர்ணயிக்கும் சட்டம் இயற்றப்படாமல் நேரத்துக்கேற்பப் பேச்சு வார்த்தைகளையே நடத்தித் தீர்வு காணாமல் ஒரு மாமாங்க

✖ மேட்டூர் நீர்த்தேக்கமும் நீர்மின் நிலையமும்



இல்லையா?

விசிட்டர் அனந்த்

மாய்க் காவிரி நீர்ப் பிரச்னையை வளர்த்து வந்திருக்கிறார்கள்.

இப்படி யெல்லாம் தகராறுகளும் பிரச்னைகளும் வரலாமென்றுதான் 1924ல் மைசூர் சமஸ்தானத்துக்கும் ஒன்றுபட்ட சென்னை ராஜதானிக்கும் காவிரி நீர்ப் பொறுத்தவரை ஓர் உடன்பாடு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி வேண்டிய குறைந்த அளவு நீர் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டு அது கட்டாயமாகத் தமிழ் நாட்டுக்கு விடப்பட வேண்டும். இந்த உடன்பாட்டின் நிபந்தனைக் குட்பட்டு மைசூர் தன் மாநிலத்தில் நீர்ப் பாசனத் தேவைக்கேற்றபடி சில திட்டங்களையும் முடித்துக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.


1974ம் வருஷத்தோடு முடிந்துபோன இந்த ஐம்பதாண்டு கால உடன்பாடு ஏற்படக் காரணமா யிருந்த பெருமை சர் கே. சீனிவாச ஐயங்கார் அவர்களையே சேரும். ஒன்றுபட்ட சென்னை மாகாணத்தில் துங்க பத்ரா, கோதாவரி, கிருஷ்ணா, தாமிரபரணி முதலிய நதிகள் இருந்தன. மைசூர் சமஸ்தானத்தில் குடகிலிருக்கும் மெர்க்காராவில் காவிரி நதி உற்பத்தியாகி மைசூரில் சுமார் 200 மைல் பாய்ந்துபின் சென்னை மாகாண எல்லைக்குள் ஓடிக் கொண்டிருந்தது. ஆகையால் சென்னை ராஜதானியில் மாண்டேகு அரசியல் சட்ட அடிப்படையில் நிறுவப்பட்ட முதல் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பணி புரிந்த சர் கே. சீனிவாச ஐயங்கார் அவர்கள் ஒரு திட்டம் தீட்டினார்.

அப்போது காவிரி வீணாகக் கடலில் சங்கமமாகும் ஒரு புனலாறுதான். அவரது திட்டத்தின்படி சென்னை ராஜதானியில் ஓடிக் கொண்டிருந்த நதிகளுடன் தமிழ் நாட்டின் வழியாகப் பாயும் காவிரி நதியையும் இணைக்க வேண்டும். இதற்கு மைசூர் சமஸ்தானத்துடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தென்னிந்தியாவில் ஓடும் நதிகளின் அனைத்து நீரையும் ஒன்று படுத்தி விவசாய பாசனம், குடிநீர் இவை தென்னாடு பூராவிலும் கிடைக்க வகை செய்யலாம். ஆங்காங்கே அணைகளைக் கட்டி நதி நீரைப் பயன்படுத்தலாம். இப்படி ஒரு திட்டத்தை 1921ல் சட்ட சபையில் நீர்ப் பாசன மசோதாவாகக் கொண்டு வரும் போது நிராகரிக்கப்படவே அவர் பதவியைக் கூட ராஜினாமாச் செய்து விட்டார்.

அப்போது ஆட்சிப் பொறுப்பிலிருந்த வெலிங்டன் பிரபுவுக்குக்கூட இந்தத் திட்டம் தோல்வி யடைந்தது குறித்து மிகவும் வருத்தமாம். அன்றே எல்லா நதிகளையும் இணைத்திருந்தால்....!?

அவருக்குப் பின் சட்ட அமைச்சராக வந்த சர் சி. பி. ராமசாமி ஐயர் காலத்தில்தான் மைசூர் சமஸ்தானத்துடன் 50 வருட உடன்பாடு கையெழுத்தாகியது. உடனே சட்ட சபையில் மசோதா எதுவும் கொண்டு வராமலேயே சேலம் மாவட்டத்தில் காவிரி யாற்றின் மீது மேட்டூர் நீர்த் தேக்கம் அமைத்தார். மைசூரில் கிருஷ்ணராஜ சாகர் அணையும் கட்டப்பட்டது. இந்த இரண்டு அணைகளால் மைசூருக்குப் பாசன பலன்

✖ இடப்பக்கம் தமிழகப்பகுதி வலப்பக்கம் மைசூர்மாநிலம். ஹொகனேகல் நீர்வீழ்ச்சியின் தோற்றம்



மூன்று லட்சம் ஏக்கர் நிலம். தமிழ் நாட்டுக்கோ 21 லட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசன பலன்.

சர் ஸி. பி. ராமசாமி ஐயர்தான் பிற்காலத்தில் கங்கை - காவிரி இணைப்பு திட்டத்தைப் பிரஸ்தாபித்தார். இன்றுவரை பேச்சளவிலேயே அது இருக்கிறது. இது இப்படியே விட்டாலும் கூட அன்று பிரஸ்தாபிக்கப்பட்ட தென் மண்டல நதி நீர்த் திட்டத்தை இப்போது நிறைவேற்றினால் கூடப்போதும். அதை விடச் சிறந்த திட்டம் ஒன்று இருப்பதாகத் தோன்றவில்லை என்றே நான் சந்தித்த ஒரு ரிடையர்டு நீர்ப்பாசன இன்ஜினியர் (பெயரைக் கூற விரும்பாதவர்) சொன்னார்.

விவசாயத்தில் மைசூர் கவனம் செலுத்த ஆரம்பித்தவுடன் 1968ல் ஹேமாவதி அணைத் திட்டம் உருவாக்கினார்கள். தமிழ் நாட்டுக்குச் சிறிதேனும் தண்ணீர் அளிக்க உறுதியளித்ததன் பேரில் இதை அப்போதைய முதல்வர் திரு கருணாநிதி ஒத்துக்கொண்டார். 70லும் கூட ஹேமாவதி அணையால் ஏற்படப் போகும் விளைவுகள் உணரப்படவில்லை. 1971ல்தான் தஞ்சை விவசாயம் பாதிக்கப்பட்டபோது, உடனடியாக, தமிழ் நாட்டைப் பாதிக்கின்ற ஹேமாவதி அணை கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று தஞ்சை விவசாயிகளைப் பிரதமர் இந்திரா காந்திக்குத் தந்தி அனுப்பும்படி கேட்டுக் கொண்டதுடன் டெல்லியில் தமிழ் நாட்டைச் சேர்ந்த சர்வகட்சி எம். பி.க்களையும் ஊர்வலமாகச் சென்று மகஜரும் கொடுக்கச் செய்தார்.

அந்தச் சமயம் உணர்ச்சி வேகத்தில், சுப்ரீம் கோர்ட்டில் வழக்கும் போடப்பட்டது. பின்னால் வாபஸூம் பெற்றுக் கொண்டனர். அதிலிருந்து பேச்சுவார்த்தைகள்தான். அதற்குள் ஹேமாவதி அணையே கட்டி முடிந்தாகி விட்டது.

அதற்குள் தேசத்தில் பிரச்னைகள் பல உருவெடுக்க, காவிரி நீர்ப் பிரச்னை மறக்கப்பட்டது. இப்போது அதே பிரச்னை பூதாகாரமாகத் தெரிகிறது. கர்நாடகா விவசாயப் பாசனத்துக்கே தேவையான நீர் இல்லாதபோது நாங்கள் எப்படித் தர முடியும் என்று கர்நாடக அரசு கேட்பதும், அவர்கள் வாதப்படி நியாயம்தான்.

நெருக்கடியான இந்தச் சமயத்தில் மத்திய அரசு மௌனம் சாதிப்பது சரியானதல்ல. காவிரிப் பிரச்னை இருக்கட்டும். ஒரு பக்கம் பருவ மழை தவறியதால் வறட்சியால் விளைச்சல் பாதிப்பு. இன்னொரு பக்கம் அளவுக்கு மீறி வெள்ளம் திரண்டோடி விளைச்சலையே பாதித்துக் கடலில் சங்கமமாகும் காட்டு நதிகள். சுதந்திரம் அடைந்து 35 வருடங்களாகின்றன. இன்னமும் கூட இந்த நாட்டின் ஜீவநாடியான விவசாயத்துக்குத் தேவையான நதி நீர்த் திட்டத்தைப் பற்றி உ.தட்டளவில் பேசிக் கொண்டிருந்தால் பசுமைப் புரட்சி வந்து விடுமா? வறுமை வெளியேறிவிடுமா?

ஒரு தேசத்துக்கு ஒரு தேசம் இடையே பாயும் நதி நீர்ப் பிரச்னைகளிலேயே உடன்பாடு ஏற்படும்போது ஒரே தேசத்திலுள்ள மாநிலங்கள் இரண்டில் இப்படி ஒரு 'தசரா' தகராறு?

மத்திய அரசு தலையிட்டுத் தன் அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம், நடுவர் தீர்ப்புக்கு விடலாம். டிரிபியூனல் அமைத்துத் தீர்வு காணலாம்.

நதி நீர்ப் பிரச்னையை இந்திய ஒருமைப்பாட்டுப் பிரச்னையாக, தேசியப் பிரச்னையாக எடுத்துக் கொள்ள வேண்டும். ராணுவம், ரயில்வே, எரிபொருள், அணுசக்தி முதலான துறைகளை மத்திய அரசாங்கமே எடுத்துக் கொண்டது. நதி நீர்ப் பங்கீடு நிர்வாகத்தையும் மத்திய அமைச்சர் பராமரிப்பிலேயே நடத்த முன்வர வேண்டும். தேசமளாவிய திட்டங்களைப் போட வேண்டும். கங்கை காவிரி இணைப்புத் திட்டம் இப்போது நடக்கிற காரியமல்ல. தற்சமயம் தென் மண்டலம், வட மண்டலம் என்று பிரித்துச் செயல்படலாம்.

1952ல் ராஜாஜி சென்னை ராஜதானியின் முதல்வராக இருந்தபோது இந்தத் தென் மண்டல நதி நீர்த் திட்டத்தை அமல்படுத்த முயன்றார். அப்போது இந்தத் திட்டத்துக்கு இன்டர்நேஷனல் மானிட்டரி ஃபண்ட் கூட உதவி செய்ய முன் வந்தது.

இப்போதே இத்திட்டத்தை ஆரம்பித்தால் கூட முடிய பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் ஆகலாம்.

இந்தத் திட்டத்துக்கு ஆகும் செலவில் மத்திய அரசோடு மாநில அரசுகளும் பங்கேற்கலாம். செலவினங்கள் அதிகமாகாமல் திறந்த வெளிக் கால்வாய் இணைப்புக்களையே திட்டமிடலாம். இதற்கு உலக பாங்குகூட உதவி செய்ய முன்வரும். ஆனால் நமது அரசியல்வாதிகள் முன்வர வேண்டுமே!

''கூலி'' படத்தின் வில்லன் 'புனித் இஸ்ஸார்' (அமிதாப் பச்சனுக்கு அடி வயிற்றில் அடிபட்டதே!) பற்றிய சில சுவையான செய்திகள்:

ரிஷிகபூர், ராஜேஷ் கன்னா, சத்ருகன் சின்ஹா, சஞ்சீவ் குமார் ஆகியோர் இவருடன் நடிக்க மறுத்து விட்டனர். இவர் ஒரு பிளாக் பெல்ட் கராத்தே வீரர். ''5 விநாடிகளில் 36 முறை அடித்தவரை என்னால் அறைய முடியும்; தினமும் 5 மணி நேரம் உடற் பயிற்சி செய்கிறேன்; 10 கி. மீ. நடக்கிறேன்'' என்கிறார்.

—மாலா வில்லவன்



டார்லிங்... டார்லிங்... டார்லிங்...

[illegible]



எங்கும் மெல்லிய பூங்காற்றுப் பரவி வருகிறது.

கல்லூரிகளில் பல மாணவிகள் மெட்டியணிந்து வருவது ஒரு சிலாகிக்கத் தக்க செய்தி மாதிரி...ஃபேஷன் மாதிரி..... ஸ்டைல் மாதிரி...

வரவேற்போ வரவேற்பு!

ஆ! மகா கவி பாரதியின் நூற்றுண்டில் இப்படி ஒரு புதுமைப் புரட்சி! அதுவும் புதுமைப் பெண்கள் நடத்தும் புதிய நாகரிகம்.... மெட்டிப் புரட்சி...

சீ!

அது பழங்காலக் குப்பை நாகரிகம்.

அம்மியாவது? அருந்ததியாவது?

அம்மிக்கும் அருந்ததிக்கும் என்ன சம்பந்தம்? மொட்டைத் தலேக்கும் முழங்காலுக்கும் மாதிரி...

''டார்லிங்! நீ ஏன் மெட்டி அணியறதில்லே? எல்லா ஸ்டூடண்டுஸ்களும் இப்பகால்லே மெட்டியணியற ஃபேஷனுயிட்ட

''குமார்! இன்னிக்குக் காலேஜிலே ரகளேயே இருக்கு. நான் மெட்டி போடாவிட்டால் என்னே ஏதோ செய்யப் போகிருர்களாம்.''

''ஏதோ என்ருல்....''

அவள் தலே குனிகிருள்.

''மாணவிகள் தானே?''

''ச்!''

''பயந்தே போயிட்டேன்! மரியாதையா மெட்டி போட்டுக்கோ கமலா!''

''இன்னிக்கு நான் காலேஜுக்கே போகப் போறதில்லே!''

''நாளேக்குப் போய்த்தானே ஆகணும்?''

''நாளேக்கு நான் ஒரு புரட்சி பண்ணப் போறேன். அது எப்படிப் பரவப் போறதுன்றதைப் பொறுத்திருந்துதான் பார்க்கணும்.''

''என்ன புரட்சி?''

''கதாநாயகனே நீங்கதானே! சொல்றேன், வாங்க! நேரா இப்பக் 'கல்யாணப் பரிசு' படம் பார்க்கறேம்.''

''ஓல்ட் பிக்சர்!''

''ஓல்ட் இஸ் கோல்ட்!''

''அப்ப நீ என்னேக் காதலிக்க இருக்கக் கூடாது. ஒரு கிழவனைப் பார்த்துக் காதலிச்சு இருக்கணும்.''

''ஜோக்கா! ரொம்பப் புளிச்சுப்போனது புறப்படுங்க!''


பிறகு நீ கட்டுப் பெட்டியா இருக்கிறது கேவலம்.''

குமார் விளேயாட்டாக அல்லாமல் சற்று வேகமாகத்தான் விமரிசித்தான்.

'லோட்டஸ்' என்று மாணவர்களால் குறும்பாக அழைக்கப்பெறும் கமலா தாமரையாகச் சிரிக்கிருள்.

''என்ன டார்லிங்! நான் சொன்னதற்குப் பதிலேக் காணும்?''

அவள் மீண்டும் தாமரையாகச் சிரிக்கிருள்.



கோவி. மணிசேகரன்

இருவரும் அந்த விசாலமான தர்மமிகு சென்னை வீதியில் ஓர் அதர்மத்தை நோக்கி நடக்கிறார்கள்.

நாகரிகம் படுவேகமாக முன்னேறிவிட்டது என்பது மாதிரி வாகனங்கள் சத்தமிட்டு ஓடுகின்றன.

''குமார்! நம்ம காதல் விஷயமா என் அம்மா கிட்டே மெல்லச் சொல்லிப் பார்த்தேன்.''

அவள் தயங்கி நிற்கிறாள்.

''டார்லிங்!''

அவள் கண்களில் நீர்க் கவிதைகள் புதிய பாணியில் வசந்த கால கும்பாபிஷேகங்களையும், விடியல்கால மேக தூதங்களையும், ரோஜா சாலையில் ரோஷமற்ற நெருப்பு முட்களையும் எடுத்துக் காட்டுகின்றன.

''என்ன சொன்னார்கள் டார்லிங்?''

''இந்த ஜன்மத்திலே அது முடியாதாம். மாப்பிள்ளை நூறு சவரனுடன் தயாராக இருக்கிறானாம்!''

''மாப்பிள்ளை நூறு சவரனுடன்? வாட் நான்ஸென்ஸ்!''

''நிஜம்தான் குமார்! அவன் எனக்கு வரதட்சிணை தர்றானாம்.''

''என்னாலே நூறு ரூபாய் கூடக் கொடுக்க முடியாது. நான் எம். ஏ. படிக்கிறதே 'பிச்சை புகினும் கற்கை நன்றே' பாணி! ஏதோ நீ காதலிச்சிட்டே! தெரியாத்தனமா நானும் காதலிச்சுட்டேன்.''

''அமைதி குமார்! அமைதி! இப்ப எல்லாப் பெண் மாணவிகளும் என் மெட்டி

போடத் தொடங்கிட்டாங்க தெரியுமா? நமக்கு எவன் போடப் போறான்? அவனவன் ஸ்கூட்டர், கார் கேக்கறான். அதனால நாமே போட்டுக்குவோம்னு போட்டுக் கிறாங்க. இதுக்கு ஒரு புரட்சித் திட்டம் தயாரிச்சு இருக்கேன். நாளைக்கு நல்ல முகூர்த்த நாள்!''

''நீ என்ன சொல்றே கமலா?''

கமலா மெல்லக் குமார் காதுகளில் காற்றுச் சொற்களை ரகசியமாக ஊதுகிறாள். சீ! ஓதுகிறாள்.

அந்தத் திட்டத்தைக் கேட்ட குமார்...

டார்லிங், டார்லிங், டார்லிங்... என்று மெல்ல — அவனும் காற்றுச் சொற்களில் ராகமாகப் பாடுகிறான்.

ஓ....! வாட் எ ஃபெண்டாஸ்டிக் ஐடியா!

அடுத்த நாள் அந்தக் கல்லூரியில் ஒரு யுகப் புரட்சியே நடந்து விட்டமாதிரி...

மாணவர்களும் மாணவிகளும் ''லோட்டஸ் ஜிந்தாபாத்!'' என்று கோஷமெழுப்புகிறார்கள்.

ஆசிரியர்களும் பேராசிரியர்களும் ஆச்சரியத்தில் குளித்துத் துவட்டிக் கொள்ளத் துண்டில்லாமல் தவிக்கிறார்கள்.

கமலமோ—

''நீங்க என்னடி மெட்டியணிந்துநாகரிகப் புரட்சி செய்வது? இதோ நான் தாலியே அணிந்து கொண்டு வந்து விட்டேன்! ஃபாலோ பண்ணுங்க!'' என்கிற மாதிரி கம்பீரமாகச் சிரிக்கிறாள்.

''ஏண்டி, நிஜமாகவே எவனாவது தாலி கட்டினானா?''

''சீ!''

''அப்ப இதுவும் சீ!''

அவளை அந்தக் கல்லூரி 'அப்ஜக்ட்' செய்யவில்லை.மெட்டிக்குச் செய்திருக்கவேண்டுமே!

இந்தப் புதுமையான — புரட்சியான செய்தி, சென்னைக் கல்லூரிகளுக்கு மட்டுமல்லாது அதனைத் தாண்டித் தமிழகக் கல்லூரிகளுக்கே பரவுகிறது.

ஓ...பாரதி கண்ட புதுமைப் பெண்!

இதற்கென்று கடச் கடச் செய்தி பரப்பும் பத்திரிகைகள் பேனாக்களின் இங்கியை நெருப்பில் கொதிக்க வைத்து ஊற்றிக் கொண்டு பேட்டி காணுகின்றன.

இதன் எதிரொலி.....

கமலத்தின்குடும்பம் கண்ணீரில் கூம்பியது.

''கமலத்தை எவனும் கல்யாணம் பண்ணிக்க மாட்டான். அவ பேருதான் பேப்பர் பேப்பரா அடிபட்டுச் சிரிக்குதே!''

குமுறி அழுகிறார் தந்தை.

''நான் அப்பவே சொன்னேன். ஏதோ பத்தாவது படிச்சா! அந்த மட்டோடு போதும்னு! சொன்னாக் கேட்டாத்தானே!''

கமலம் கல்லூரியிலிருந்து கடைசிப் பரீட்சையை எழுதிவிட்டு வீட்டுக்குள் நுழைகிற போது—

எரிமலை வெடித்துப் பூகம்பம் புறப்பட்டது.

கமலம் வெளியேற்றப்பட்டாள்.

அவளும் கமலப் புன்னகையுடன் வெளியேறினாள். அவளுக்குச் சொத்து எதற்கு? அவளுக்குப் பின்னால்தான் எம். ஏ. ஒட்டிக் கொண்டிருக்கிறதே!

திட்டமிட்டுச் செய்த தீர்மானம் அல்லவா?

குமார் அவளை மிகுந்த குதூகலத்துடன் வரவேற்கிறான்.

செய்தி அறிந்த மாணவிகள் துக்கம் விசாரிக்க வருபவர்களைப் போல அங்கு வர—

மிகுந்த குதூகலமாக இருந்த கமலம் சொன்னாள்:

''அடி, புதுமைப் பெண்களா! நீங்க ஃபேஷனுக்காக மெட்டி அணிந்தீங்க. நான் இதையே சாக்காக வெச்சு என் காதலை நிறைவேற்றிக் கொள்ள, குமாரை விட்டுத் தாலியே கட்ட வச்சி, அதை ஒரு பரபரப்பு மிக்க சூடான செய்தியாகப் பரவ விட்டு, ஊரறிய, உலகமறியக் குடும்பம் நடத்தப் போறேன். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றனவோ இல்லையோ, பத்திரிகைகளில் நிச்சயிக்கப்படுகின்றன.''

முதலில் ஆச்சரியத்தால் மாணவிகள் மலங்க மலங்க விழித்தாலும் அவர்களுக்கும் ஒரு மார்க்கம் கிடைத்த மாதிரி ஒரு புதுமை ஃபேஷன் அரும்புகிறது.

நாளை முதல் இதனை அரங்கேற்றினால் என்ன?

மாணவிகள் வாழ்த்துத் தெரிவித்துப் புறப்படுகிறார்கள்.

ஆனால் குமார்?

தனது காதலியின் அதி அற்புதமான சிந்தனையைப் பாராட்டிய வண்ணம் அருகே நெருங்கி, இறுக அணைத்து...

''டார்லிங்....''

''டார்லிங்....''

மூன்றாவது டார்லிங்
ஒலிக்க அவசிய மிருக்கவில்லை!

பறக்காத பட்டம்!

''எனக்கு எவ்வளவோ பட்டங்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் எதையும் நான் என் பெயருக்குப் பின்னால் போட்டுக்கொள்வதில்லை. பட்டத்தை நான் பறக்க விடாமல் பெட்டியில் வைத்து விடுவேன். தம்பட்டம் அடித்துக் கொள்வதில் எனக்கு இஷ்டமில்லை.'' டீ.வி.பேட்டியில் கி.வா.ஜ. சொன்னது

அனுப்பியது வி. மகாலிங்கம்



சமைத்து 4 மணி நேரங்கழித்துக்கூட மணம் கமழும் சூடான உணவை பரிமாற இக்லூ ஹாட் பேக் இப்பொழுது உங்களுக்கு உதவுகிறது



மறுபடியும் சூடவைக்கும் வேலையே இல்லை

சாதமானாலும் சரி, குழம்பு, கறி வகைகளானாலும் சரி, சமையலை சீக்கிரமே முடித்து இக்லூ ஹாட்பேக்கில் வைத்து மூடிவிடுங்கள். 4 மணி நேரம் கழித்து பரிமாறினாலும் உணவு சமைத்த சூட்டோடு, ருசியாகவும், சத்து மிக்கதாகவும் இருக்கும்.

நேரமும் எரிபொருளும் மிச்சம்...

ஏனெனில் உணவை மீண்டும் சூடாக்குவதை தவிர்க்கிறது. மேலும் உணவுச்சத்து இழப்பையும் இது தடுக்கிறது.

ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் கடைகளில் இக்லூ ஹாட்பேக் பல சைஸ்களில் கிடைக்கும்.
இன்றே ஒரு இக்லூ ஹாட்பேக் வாங்குங்கள்.
அதனால் பல விதத்திலும் லாபம்.
மேலும் அதிக ஓய்வு நேரம் கிடைக்கிறது

இக்லூ ஹாட்பேக்கின் திறமைக்கு ஒரு சான்று

தொடர்ந்து இரண்டு மாதம் இந்த ஹாட் பேக்கை சோதித்து பார்த்து சென்னை கேடரிங் இன்ஸ்டிட்யூட் கீழ்க்கண்ட சான்றுரையை வழங்கியுள்ளது.


"இது உஷ்ணத்தை நன்கு பாதுகாக்கிறது. அதே சமயம் உணவில் ருசிக் குறைவு ஒன்றுமில்லை. 8 மணி நேரத்திற்கு பிறகு கூட உணவின் மணத்தில் ஒரு குறைவும் ஏற்படவில்லை... இப்பெட்டிகள் திறன் மிக்கவை!"

iGLOO hotpack

மேட்டூர் பியர்ட்ஸெல் லிமிடெட்டின்
தரமான தயாரிப்பு

OBM 4897 TM

வேலைக்கு அலையாத இளைஞர்கள்!





※ இரவு கண்காணிப்புக்குச் செல்லும் 'ஹோப்ஸ்' அங்கத்தினர்கள்

※ எம். சிங்காரவேலு - 3வது வருஷம் அடையாறு ஹோட்டல் மானேஜ்மெண்ட், காட்டரிங் டெக்னலஜி அண்ட் அப்ளைட் நியூட்ரிஷன்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இன்று நிறைய இளைஞர்களிடம் காணப்படுகிறது. படித்துவிட்டுப் பட்டத்தைத் தூக்கிக் கொண்டு கம்பெனி கம்பெனியாக ஏறி இறங்குவதை விட சுயமாகச் சிந்தித்து சுய வேலை வாய்ப்புக்களை அவர்களே உருவாக்கிக் கொள்வதில் நாட்டம் காட்டுகிறார்கள். ஒரு பட்டதாரி இந்த மாதிரி வேலைகளைப் பார்ப்பதா என்ற போலி கௌரவங்கள் இவர்களிடம் விடை பெற்றுவிட்டன.





சிங்காரவேலு: ஹோட்டல் மானேஜ்மென்ட் அண்ட் கேட்டரிங் டெக்னலஜியில் மூன்றாமாண்டு மாணவர்:

சமையல் வேலை செய்வதையும் ஹோட்டல்களில் சப்ளையர்களாக வேலை பார்ப்பதையும் சிலர் கேவலம் என்று நினைக்கின்றனர். என்னைப் பொறுத்தவரையில் எந்த வேலையும் கேவலம் கிடையாது. உழைக்கிறோம் என்ற திருப்தி முதலில் தேவை. நாம் செய்யும் வேலையின் மூலம் அது கிடைக்க வேண்டும்.

வீட்டை எப்படிச் சுத்தமாக வைத்துக் கொள்வது, கேக், ரைஸ் வெரைட்டிகளை எப்படிச் சமைப்பது, நான்-வெஜிடேரியன் பதார்த்தங்களை எப்படித் தயார் பண்ணினால் சுவையாக இருக்கும் என இவைகளை மூன்று வருட காலமாக நான் கற்று வருகிறேன்.

''போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் வெறும் பி. ஏ.யும் பி.எஸ்ஸியும் படிக்கப் புண்ணியம் இல்லை என்று நினைத்தேன். சமையல் துறையில் ஆசை இருந்ததால் இப்படி ஒரு படிப்புப் படிக்க முற்பட்டேன். சமையல்கார உத்தியோகமாக இருந்தாலும் சம்பளம் என்னவோ கைநிறையத்தான் கிடைக்கப் போகிறது.

ராகவன்: டீ ஸ்டால் வைத்திருக்கும் பட்டதாரி இளைஞர்.

''நீ ஏன் ஒரு டீ ஸ்டால் ஓப்பன் பண்ணக் கூடாது?நாஸெ வேண்டிய உதவிகளைச் செய்கிறதே!'' என்றார் அதன் தலைவர் தர்மராஜன். வீட்டில் வந்து விஷயத்தைச் சொன்னதும் ஒரே சண்டை. ''ஏன்டா ஆயிரம் ஆயிரமாய்ச் செலவழிச்சுப் படிக்க வெச்சிருக்கோம். காப்பியை ஆத்தப் போறியா?'' என்றனர் ஆத்திரத்தோடு. ''ஒரு டீ ஸ்டால் வைக்க நாம் பணம் ஏதும் போட வேண்டாம். வேலையில்லாதவர்களுக்கு பேங்க் கடன்தரும். டீ ஆத்தறது கேவலம் ஒண்ணுமில்லே! கை நிறையக் காசு வரக்கூடிய தொழில்''என்று அவர்களைச் சமாதானப்படுத்தினேன்.

''அவர்களின் சம்மதத்தோடு டீ ஸ்டால் வைத்தேன். இன்றைய தேதிவரை எனக்கு ஒரு குறையும் இல்லை. சென்னை நகரில் சுமார் 80 நாஸெ பார்கள் இருக்கின்றன.


'நாஸெ த்ரிப்ட் அண்ட் கிரெடிட் சொஸைட்டி பேங்' என்னும் பேங்க் ஒன்றையே நாஸெ ஆரம்பித்திருக்கிறது. ஆசியாவிலே ஒரு அசோசியேஷன் ஆரம்பித்திருக்கும் முதல் பேங் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மோகன்: 'ஹோப்ஸ்' என்னும் மற்றொரு சுய வேலை வாய்ப்பு சங்கத்தின் தலைவர்.

''சுமார் மூன்று வருட காலமாக எங்களுடைய பட்டதாரிகளின் சங்கத்தை நடத்தி வருகிறோம். பி. ஆர். பாலசுப்பிரமணியம் சேர்மனாகவும் கே. நாகராஜ் செயலாளராகவும் பின்னை பொருளாளராகவும் இருக்கிறார். எங்களிடம் 250 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய முக்கிய பணி இரவு நேரங்களில் ரோடுகளைச் சுற்றி பொது ஜனங்களுக்குப் பாதுகாப்புகொடுப்பதுதான். எங்கள் இயக்கத்துக்குப் போலீஸ் துறை போதிய ஆதரவு கொடுத்து வருகிறது. எங்கள் அங்கத்தினர்களை செக்யூரிட்டி கார்டு செக்யூரிட்டி ஆபீசர் என்று இரண்டு வகையினராகப் பிரித்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறோம். செக்யூரிட்டி கார்டுகளுக்கு 175 ரூபாய் சம்பளமும் செக்யூரிட்டி ஆபீசர்களுக்கு ரூ. 600 சம்பளமும் கிடைக்கிறது. இந்தச் சம்பளம் அனுபவத்தை வைத்துக் கூடவும் செய்யும்.

சென்னையைப் பலடிவிஷன்களாகப்பிரித்து ஒவ்வொரு டிவிஷனுக்கும் செக்யூரிட்டி கார்டுகளை நியமிக்கிறோம். அந்தந்த ஏரியாக்களில் உள்ள வீடுகளுக்குப் போய் மாதம் ஒன்றுக்கு வீடு ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதம் வசூல் செய்கிறோம். இந்தத் தொகையை வைத்துத்தான் எங்களுடைய சம்பளமும்' பிற தேவைகளும் பூர்த்தியாகின்றன.

''பெரிய கேடி லிஸ்ட்டுகளை எங்கள் செக்யூரிட்டி ஆபீசர்களிடம் போலீஸ்அதிகாரிகள் காண்பிக்கின்றனர். புகைப்பட ஆல்பங்களையும் தந்து ஸ்டடி பண்ணச் சொல்கின்றனர். ஒரு நாள் சினிமா மோகத்தில் ஆந்திராவிலிருந்து ஒரு பெண் வீட்டுக்குத் தெரியாமல் சென்னை வந்து ஒரு ஆட்டோக்காரனிடம் சிக்கி, சுத்த ஆரம்பித்து விட்டான். அப்போது அந்த வழியே பீட்டுக்கு வந்த




✖ நாஸெ ராகவன்

எங்கள் ஹோப்ஸ் இளைஞர்கள் அந்தப் பெண்ணைவிடுவித்து இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. அந்தப் பெண்ணுக்கு நல்ல புத்திமதி சொல்லி ஆந்திராவுக்கு ரயில் டிக்கெட்டும் எடுத்துக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள்.

''சுபாஷ் போஸ் ரோடில் நிறைய மதிப்புள்ள மருந்துகள் கடத்திய டாக்ஸியைப் போலீஸ்காரர்களிடம் எங்கள் ஹோப்ஸைச் சேர்ந்த பாண்டியன் என்பவர் பிடித்துக் கொடுத்தார். அவருக்கு விரைவில் அவார்டு கொடுக்கப் போகிறார்கள்'' என்று பெருமையோடு சொல்கிறார் ஹோப்ஸின் தலைவர் மோகன்.

இவர்கள் பெருமைப்படக் கூடிய மற்றொரு அம்சம் – சென்னை முழுவதும் கொசுவை ஒழிக்கும் திட்டத்தை இவர்கள் வசம் கார்ப்பொரேஷன் ஒப்படைத்திருக்கிறது. விரைவில் இவர்கள் இதைத் தொடங்க இருக்கிறார்கள்.

பதவி அந்தஸ்து இல்லாதது என்று சமூகம் நினைக்கும் இந்த மாதிரி வேலைகள் கல்யாணத்துக்கு ஒரு தடைக் கல்லே. ''நீங்கள் மேரேஜ் விஷயமாக எப்படி ஃபீல் பண்ணுகிறீர்கள்?'' என்று இந்த மூன்று பேரிடமும் கேட்டபோது சொன்ன ஒரே பதில்: ''தன்னம்பிக்கை, தைரியம், நிறையச் சம்பாதிக்க முடியும் என்ற உறுதி எல்லாம் எங்களுக்கு இருக்கிறது. எங்களுக்கும் அந்தஸ்து இருக்கிறது. செக்யூரிட்டி ஆபீசர், ஸ்டால் ஓனர், பேக்கரி இன்சார்ஜ் இப்படி எங்களை எண்ணிப்பாருங்கள்.''வாஸ்தவம்தான். இவர்கள் முன்னேறத் துடிக்கிறார்கள். அதற்குக்கடுமையான உழைப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இந்தப் பட்டதாரி இளைஞர்களின் வாழ்க்கை நம்பிக்கை யூட்டுவன.

பேட்டி: தாமிரபரணி


சினிமா நட்சத்திரங்கள்

சினிமா நட்சத்திரங்கள் தீபாவளி கொண்டாடினால் எத்தகைய செய்திகள் பேப்பரில் வரும் எனக் கற்பனைசெய்து பார்த்தேன். அவற்றில் சில:

சிலுக்கு கண்ணில் சீயக்காய் தூள்!

...இன்று காலையில் சிலுக்கு கங்கா ஸ்நானம் செய்து கொண்டிருந்தபொழுது அவரது இடது கண்ணில் சீயக்காய்த்தூள் விழுந்தது. எரிச்சல் தாங்காமல் அவர் அலற அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஓடிவந்து அவருக்கு முதலுதவி செய்தார்கள். முதல் உதவி: புடவை கட்டி விட்டதுதான். ஐ ஸ்பெஷலிஸ்ட் ரகுராமனை அவசர அவசரமாகப் போன் செய்து வரவழைத்தார்கள்.

இச்செய்தியைக் கேள்விப்பட்ட பட உலகப் பிரமுகர்கள் பலரும் தயாரிப்பாளர்களும் ஓடோடி வந்துஅனுதாபம் தெரிவித்தார்கள். 'சில்க் சில்க் சில்க்' படத்தயாரிப்பாளர் கோபாலகிருஷ்ணன் அவரை உடனடியாக ராயப்பேட்டை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு அனுமதித்தார். பத்திரிகை புகைப்படக்காரர்கள் அவரது



பாதிக்கப்பட்ட கண்ணைப் பலகோணங்களில் படம் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

சிலுக்கு ரசிகர்கள் மருத்துவ மனையை முற்றுகையிட்ட வண்ணமே உள்ளனர். கூட்டத்தைக் கலைக்கப் போலீஸ் கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று.

சிலுக்கு கண் திறந்து பார்க்க வேண்டும் எனத் துலுக்காணியம்மன் கோவிலில் விசேஷ பூஜைகள் நடைபெற்றன.

நாளைய நமது நாளிதழின் ஞாயிறு மடல் ஸ்பெஷலாக மலரும்.

கமலஹாசன் விட்ட ராக்கெட் பம்பாய்க்குப் பறந்தது!

எல்டாம்ஸ் ரோடில் உள்ள தமது வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டு கமலஹாசன் விட்ட ராக்கெட் ஒன்று பம்பாய் வரை பறந்து சென்று பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

''உலகத்திலேயே இத்தனை நீளமான ராக்கெட்டை யாரும் இதுவரை பார்த்த தில்லை. இதை எனக்காகவே என் மனைவி வாணி ஸ்பெஷலாகத் தயாரித்தாள்'' எனக் கமலஹாசன் பெருமையுடன் நமது நிருபரிடம் கூறினார்.

ராக்கெட் பறப்பதைச் சென்னை டெலிவிஷனில் இன்று ஒளிபரப்பவிருக்கிறார்கள்.

'எண்ணெய்தேய்த்து குளிக்கமாட்டேன்' ரஜினிகாந்த் அடம் பிடித்தது உண்மையா?

''நான் இன்று எண்ணெய் தேய்த்துக் குளிக்க மாட்டேன், எனக்கு இந்த மாதிரி சம்பிரதாயங்களில் நம்பிக்கை இல்லை'' எனக் கூறிக் கொண்டே ரஜினிகாந்த் அடம்பிடிக்க ஆரம்பித்ததாகவும், எண்ணெய்க் கிண்ணத்துடன் லதா அவரைத் துரத்த ரஜினி ஓட ஒரே தமாஷாக இருந்ததாகவும் வெளிவந்த செகிசுகளை ரஜினிகாந்த் மறுத்தார்.


''நான் கங்கா ஸ்நானம் செய்ய மறுத்தது உண்மை. அதற்கு எந்த விதக் காரணமும் இல்லை. சமீபத்தில் எனது தந்தை இறந்து போனார். அந்தத் துக்கத்தைக் கொண்டாடவே முதலில் மறுத்தேன்.''

''இது தெரிந்துபோய் பாலசந்தரே என் வீட்டுக்கு வந்து எனக்கு எண்ணெய்தேய்க்க

12. பிரச்னை என்ற பெயரில் நாமே பிறருக்குப் பிரச்னையாகிவிடக் கூடாது.

13. சில பிரச்சினைகளோடு வாழ்ந்தே தீரவேண்டும் என்றிருந்தால் நம் மனப் போக்கை மாற்றிக்கொண்டு, பிரச்னையுடன் அனுசரித்து வாழத்தான் வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வோம்.

14. நல்ல நண்பர்களை அடையாளம் கண்டுகொள்வோம். நம் கஷ்டங்களை நாம் சொல்வதற்கு முன்பாகவே புரிந்துகொண்டு உதவுபவர்களும் உண்டு.



இங்கே மடிக்கவும்.

பிரச்சினைகளை சமாளிப்பது எப்படி?

கே. சந்திரா



அழுத முகமும் சிந்திய மூக்குமாக வந்தாள் ஒரு பெண்மணி, அந்த டாக்டரிடம். ''ஒரு வாரமாக ஜலதோஷம் தாங்க முடியவில்லை'' என்றாள் அவள். ''மூக்கு என்று ஒன்று இருக்கும்வரை ஜலதோஷம் வந்து கொண்டுதானிருக்கும். இது பெரிய வியாதியல்ல. கவலைப்படாதீர்கள்'' என்றார் டாக்டர். பிரச்னை என்று சொல்லுகிறவர்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு மூக்கும், ஜலதோஷமும் ஞாபகத்திற்கு வருகின்றன. வாழ்க்கை என்று ஒன்று இருக்கும்வரை, பிரச்னை என்பது இல்லாமல் எப்படி ஒருவர் வாழ முடியும்?

இப்போது நாம் மூன்று வருடங்கள் பின்னுக்குச் சென்று உமா-சந்திரசேகர் தம்பதியர் வீட்டில் ஒரு நாள் காலை 9 மணியளவில் நடந்த வாக்குவாதத்தைக் கவனிப்போம்.

''சாப்பாடு ரெடியா?''

''எல்லாம் எப்பவோ ரெடி.''

''சீக்கிரம் போடு. ஆபீஸுக்கு நேரமாயிட்டது. எங்க ஜெனரல் மானேஜர் இன்னைக்கு வரார்.'' சந்திரசேகர் சாப்பிட உட்கார்ந்தான்.

''ஏன் இன்னிக்கு வாழைக்காய் வறுவல் பண்ணலே?''

'' 'கேஸ்' தீர்ந்து போச்சு.''

''ஸ்டவ்வில் வறுக்க வேண்டியதுதானே?''

''கெரோஸின் இல்லை.''

''முன்னாடியே ஸ்டாக் வச்சுக்க வேண்டியதுதானே?''

''ஏதோ மறந்துபோச்சு. வாழைக்காய் வறுவல் இல்லேன்னா பண்ண கறிகாயைச் சாப்பிடறது. எத்தனை கேள்வி கோர்ட்டு மாதிரி?''

''ஆமாண்டி. கேப்பேன். நான் வாங்கிப் போடறேன். கேப்பேன். எனக்கு இஷ்டப்பட்டதைச் சமைச்சுப் போடற

7. தன்னிரக்கத்தைத் தப்பித தவறிக்கூடப் பக்கத்தில் சேர்க்க வேண்டாம்.

8. மற்றவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும்போது நம்முடைய பிரச்னைகளைப் பற்றியே பேசிக்கொண்டிருக்க வேண்டாம்.

9. பிரச்னைகளைப் பெரிது படுத்திச் சொல்லுவதில் நம் கற்பனை சக்தியைச் செலவழிக்க வேண்டாம்.

10. நாளைக்காகத் திட்டம் போடுவோம். இன்றைய வாழ்க்கையை அனுபவிப்போம்.



11. எந்தப் பிரச்னையாக இருந்தாலும், நாம் ஓடிப்போக முயல வேண்டாம். நாம் ஓட ஓட பிரச்னையும் நிழலாக நம் பின்னால் ஓடிவரும். பதிலாகத் தைரியமாக எதிர்நோக்குவோம். உள்ளத்தில் நம்பிக்கை தானாகச் சுரக்கும்.

''பையனை என்ஜினீயரிங் சேர்த்திருக்கிறேன். இவன் உருப்படியா அஞ்சு வருஷம் படிச்சுப் பாஸ் பண்ணணு மேன்னு நினைச்சாத்தான் கவலையா யிருக்கு.''

''பெண்ணுக்கு இது மூன்றும் மாசம். அவள் நல்ல படியாப் பிரசவிச்சு, பிழைச்சு எழுந்திருக்கணுமேன்னு தான் கவலை'' என்று சொல்லும் பெற்றோர்களைத் தினமும் பார்க் கிறோம். இவர்கள் வாசலில் போகும் பிரச்னையை வலிய அழைத்து விலை பேசி வாங்குபவர்கள். நாளைக்கு திட்டங்கள் போடுவோம். நாளையக் கடமைகளை எண்ணி, இன்றைக்குத் தயார் செய்து கொள்ளுவோம். ஆனால் நாளைய பாரத்தை இன்றே மனசில் ஏற்றிக் கொள்வது அவசியமா?

பிரச்னைகளை அணுகும் பதினன்கு முறைகள்:

1. எந்தப் பிரச்னையாக இருந்தாலும், அது முதலில் எங்கே எப்படி ஆரம்பித்தது என்று ஆராய்வோம்.
2. அந்தப் பிரச்னை உருவாக நம் பங்கு எவ்வளவு என் பதைப் பாரபட்சம் பார்க்காமல் கணக்கிடுவோம்.
3. அந்தப் பிரச்னையின் தீர்வுக்கு ஏற்ற பல வழிகளையும் தீர ஆலோசிப்போம்.
4. அதில் ஒரு வழியைத் தேர்ந்தெடுத்த பின், மறுபடியும் பின்னல் திரும்பிப் பார்க்க வேண்டாம்.
5. ஒரு பிரச்னை தீர எந்த முடிவு எடுத்தாலும், அந்த முடிவின் விளைவுகளையும் எண்ணிப் பார்த்து, நம்மைத் தயார் செய்து கொள்ளுவோம்.
6. பிற நண்பர்கள், உறவினர்கள் இது போன்ற பிரச் னையை எப்படி அணுகியிருக்கிறார்கள்? அந்த முறை நமக்கு ஒத்து வருமா என்று எண்ணிப் பார்ப்போம்.



துக்கில்லாம நீ எதுக்குப் பெண்டாட்டின்னு? மறந்து போச் சாம் மறந்துபோச்சு. தேனியில என்ன சினிமா, சாந்தியிலே எப்ப ஷோன்னு லிஸ்ட் படிப்பே. இருபது வருஷத்துக்கு முன்னடி வந்த பாட்டை ஒளியும் ஒலியும்லே போட்டாலே போறும். அதனுடைய சினிமா சரித்திரத்தையே ஒப்பிப்பே. ஒரு குடும்பப் பெண்ணுக்கு வீட்டுச் சாமான் எது இல்லை, எது வாங்கணும்னுகூடவா தெரியாது?''

''ஆபீஸுக்கு நேரமாச்சு. பெரிய ஆபீஸர் வரப்போறார்ங் கிற சமயத்திலே கூட வாழைக்காவறுவலுக்காக என் ஊரைக் கூட்டறீங்க. மறக்கிறதுங்கறது எல்லாருக்கும் சகஜம். உங் களுக்குச்சாப்பாட்டிலேஇஷ்டம்,எனக்கு சினிமாவிலேஇஷ்டம்! அதுக்கு எதுக்கு இவ்வளவு வாய் வார்த்தை? சேச்சே, எப்பப் பார்த்தாலும் அதைப் பண்ணலே, இதைப் பண்ணலேங்கற குத்தமே கண்டு பிடிச்சுண்டு. எனக்கும் எவ்வளவோ பேசத் தெரியும். நீங்க ஆபீஸுக்குக் கிளம்பற சமயத்திலே வேணு மேன்னுதான் பார்க்கறேன்.''

''என்னடி பேசுவே? பேசேன். ஆபீஸ் கெடக்கிறது. இன்னைக்கு ரெண்டிலே ஒண்ணு முடிவு கட்டிடறேன். புருஷ

னுக்கு வாய்க்கு ருசியா போடத் துப்பில்லே. பதிலுக்குப் பதிலடி கொடுப்பாளாமே?''

இது போன்ற சம்பாஷணை சேகருக்கும் உமாவுக்கும் மேலும் ஒரு அரை மணி தொடர்ந்து, முடிவில் பாதி சாப்பாட்டிலேயே தட்டைத் தூக்கி எறிந்துவிட்டு, அவன் ஆபீஸுக்குப் பறந்தான்.

மாலையில் *அவன் வீடு திரும்பியபோது மணி ஏழு. முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, ஒரு தட்டு நிறைய வறுவலைக் கொண்டு வந்து 'டங்'கென்று அவன் முன்னால் வைத்தாள் உமா. அவளுக்கு இருந்த ஆத்திரத்தில் பக்கத்து வீட்டுக்காரியிடமிருந்து 'ஸ்ரோஸின்' கடன் வாங்கி, அத்தனை நேந்திரங்காய்களையும் வறுத்துத் தள்ளிவிட்டிருந்தாள்.

ஏற்கனவே ஆபீஸுக்கு நேரம் கழித்துப் போய் மானேஜரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டு, எரிச்சலுடனும், பசியுடனும் வீட்டுக்கு வந்த சேகருக்கு 'மாயா பஜார்' கல்யாண சமையல் சாதம்' போல, ஒரு பெரிய தட்டுநிறைய இருந்த வறுவலைப் பார்த்ததும் கோபம் அளவுக்கதிகமாகப் போய் விட்டது.

'பளார்' என்று ஒரு அறை. ''கலெக்டருக்கு வாழ்க்கைப்பட்டோம்னு நெனைப்பா, சாமான்களை வாரி இறைக்கிறதுக்கு. நான் என்ன மலை முழுங்கி மகாதேவனா,எவ்வளோ கொழுப்பு இருந்தா நீ இப்படி ஒரு காரியம் பண்ணுவே.''

அதற்கு மேலே அவர்களுக்குள்ளே நடந்த வாக்கு வாதத்தை வாசகர்களின் ஊகத்துக்கே விட்டு விடுகிறேன். ஆக மொத்தம், அன்றைய சண்டையின் முடிவு — அன்று இரவு 8.30 மணிக்கு, ''ஜன்மத்துக்கும் சேர மாட்டேன்'' என்று வெறுப்பை உமிழ்ந்துவிட்டு, உமா தன் அண்ணன் வீட்டுக்குச் சென்றுவிட்டாள்.

சேகர் 'அவள் வந்தால் வரட்டும், வராவிட்டால் போகட்டும். பெத்த தாய் தகப்பனே இல்லாமல் வளர்ந்தேன். நடுவிலே வந்த ஒருத்தி நடுவிலே விட்டுவிட்டுப் போனா நான் பின்னாலேயே போய்க் கெஞ்சணுமா என்ன?' என்று ஆக்

வயதுப் பெண். மூளை வளர்ச்சி குறைவு. ஆனால் உடலில் நல்ல வளர்ச்சி. பருவ உணர்ச்சிகளினால் பாதிக்கப்பட்டு, ஏதேனும் நடந்து அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகாமல் இருக்க, தினமும் கர்ப்பத் தடை மாத்திரைகளைக் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறாள் தாய்.

''அவளை ஏதேனும் ஹாஸ்டலில் சேர்த்துவிட வேண்டியதுதானே'' என்று கேட்டேன். ''எனக்கு இப்போது இருக்கும் ஒரே உறவு அவள்தான். அவளையும் நான் ஹாஸ்டலில் விட்டு விட்டு, யாருக்காக வாழ வேண்டும்? என் குழந்தையைப் புறக்கணித்துவிட்டுப் பிறருக்குச் சேவை செய்வதில் என்ன பயன்'' என்றாள் டாரதி.

''உங்களுக்குப் பின்னால், அவள் எதிர்காலம் பற்றிய பிரச்னை உங்களுக்குத் தோன்றவில்லையா?''

''அவளுடையது என்ன? நான் நடத்தி வரும் இந்த முதியோர் விடுதி, படிக்காமல் எவளுடனோ வாழ்ந்துகொண்டு தத்தாரியாகத் திரியும் என் மகன், எல்லோரைப் பற்றியும் தான் பிரச்னை எழுகிறது. ஆனால் நான் கவலைப்படுவதால் இந்தப் பிரச்னைகள் தீரப் போவதில்லை. இந்தக் கஷ்டங்களை எதிர்நோக்கிப் போராடிக் கொண்டிருப்பதுதான் இந்தப் பிரச்சினைகளின் தீர்வு. **When a problem cannot be cured, it has to be endured** நான் நாளையைப்பற்றி நினைப்பதில்லை. நேற்றைய துக்கங்களை நினைத்தும் அசை போடுவதில்லை. நான் இன்றைக்காக வாழ்கிறேன், இந்த மணிக்காக, இந்த நிமிடத்துக்காக வாழ்கிறேன். சந்தோஷமோ, துக்கமோ, அவ்வப்போது கணக்குத் தீர்ந்து விடுகிறது. இன்றைக்குக் கிடைக்கவிருக்கும் மன நிம்மதியையும் மகிழ்ச்சியையும் புறக்கணித்து விட்டு நாளைய சுமையை இன்றையிலிருந்தே ஏன் சுமக்க வேண்டும்?'' என்று கேட்டார் அவர்.


நாளைய சுமையை இன்றைக்கென்ன, நேற்றையிலிருந்தே சுமந்து கொண்டிருப்பவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

அரண்டு போய்விட்டாள் கமலா. அவன் பேச்சின் திசையை மாற்றிக் கொண்டு விட்டாள்.

வெளி நாடு சென்று பல வருடங்கள் இருக்கும் பிள்ளைகள் எல்லோரும் அந்த நாட்டுப் பெண்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்; அவர்கள் செய்வதில் தவறே இல்லை என்று இங்கே குதர்க்கமாக வாதாட விரும்பவில்லை. 'அந்த மகன் ஒரு பிரச்னையை எப்படி அளவெடுத்து, முடிவு எடுக்கிறான்' என்பதைப் புரிந்து கொள்வதுதான் முக்கியம். பணத்தின் பிரச்னையைத் தீர்க்கப் போய், கௌரவப் பிரச்னை தலைதூக்கி யிருக்கிறது கமலாவுக்கு. இது போன்ற கமலாக்களை நீங்கள் யாரும் இதுவரை பார்த்ததில்லை என்று சொன்னால் நான் நம்பத் தயாராக இல்லை.

சில வருடங்களுக்கு முன்னால் 'டாரதி உல்லகாங்' (Dorothy Wollogong) என்ற ஆஸ்திரேலிய மாதுவைச் சந்தித்தேன். டாரதிக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். ஒரு முதியோர் விடுதியை நடத்திக் கொண்டிருந்தாள். டாரதியின் கதை ஒரு சோகக் கதை.

இரண்டாவது உலகப் போரின்போது, பெற்றோரிடமிருந்து பிரிந்துபோய், ஒரு ஆஸ்திரேலியக் குடிமகனைத் திருமணம் செய்து கொண்டாள். வயதான தாய், தந்தை இங்கிலாந்தில் எங்கோ இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தாள். முதலில் திருமணம் செய்துகொண்ட ஆஸ்திரேலியன் கேன்ஸரில் இறந்துவிட, வேறு ஒருவனை மணந்து கொண்டு அவனும் ஒரு கார் விபத்தில் மாண்டு போனான். முதல் கணவன் மூலம் மூன்று குழந்தைகள். இரண்டாவது கணவன் மூலம் ஒரு பெண். பெரிய பெண் திருமணமாகி, எங்கோ ஒரு தீவில் வசித்துக் கொண்டிருக்கிறாள். அதற்கடுத்த பையன், படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு வீட்டைவிட்டுப் போய், ஒரு ஆதிவாசிப் பெண்ணுடன் வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுடைய இருபது வயது மகன்; மீன் பிடிக்கப் போகும்போது ஏதோ விஷ ஜந்து கடித்து இறந்து விட்டான். அவளுடன் இருப்பது ஒரு பதினாறு



ரோஷத்துடன் இருந்தான். பிறகு ஒரு மாதத்தில் அவனுக்கு வடக்கில் மாற்றல் ஆகியது. மறுக்காமல் ஒப்புக்கொண்டான். "நான் இருக்கிற இடம் தெரியாமல் அவள் கஷ்டப் படட்டும்" என்று கறுவினான்.

அந்தத் தம்பதி சமீபத்தில் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். அவள் உறவினரும், அவன் நண்பர்களும் கொஞ்சம் கொஞ்சமாக அறிவுரை சொல்லி ஒரு வழியாக ஒன்று சேர்த்து விட்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்று, மூன்று வருடங்களாகச் சண்டை போட்டுப் பிரிந்த தினத்திலிருந்து இருவருமே வாழைக்காய் சாப்பிடுவதை விட்டு விட்டார்கள்!


இங்கே ஒன்று நமக்குப் புரிபட வேண்டும். பிரச்னை வாழைக்காய் அல்ல. அந்தத் தம்பதியரின் மனப்பான்மை தான். இதே மனப்பான்மையை அவர்கள் கொண்டிருக்கும் பட்சத்தில் இன்னும் சிறிது நாளில் அவர்களுக்கு எல்லாக் காய்கறிகளின் மீதும் கோபம் வரலாம்.

கணவன், தாய் தந்தையைச் சிறு வயதிலேயே இழந்து விட்டு யார் ஆதரவிலோ வளர்ந்து வந்த காரணத்தால்

அதீத அன்பையும் பணிவிடையையும் எதிர்பார்க்கிறவன்; முன்கோபி; சாப்பாட்டுப் பிரியன்; கொஞ்சம் அதிகாரப் போக்கு உடையவன் என்பதை யெல்லாம் மனைவியான உமா உணராமல் இருந்திருக்க முடியாது. மறதி அவனுடைய தவறு. மேலும் ஒருவர் ஆத்திரத்தில் பேசும்போது இன்னும் ஆத்திரத்தைத் தூண்டி விடக் கூடிய பதிலடிகளையோ, கோபமான செய்கைகளையோ அவள் கட்டுப்படுத்தியிருக்க லாம். அப்படியே வாக்குவாதம் முற்றியிருந்தாலும் கணவன் மனைவியின் ஆயுட்கால பந்தத்தை நினைவில் இருத்தி, பிறந் தகம் போவதைத் தவிர்த்திருக்கலாம். ஒவ்வொரு மனைவியும் கணவனுடன் கோபித்துக் கொண்டு ஒரு வீறுப்புடன் பிறந் தகம் போகும்போது அங்கே அவளால் வீசப் போகிற புயலை யும் சற்று நினைத்துப் பார்க்கவேண்டும். உமா போயிருந்தது அண்ணன் வீடு. அவனுக்கு மனைவி, குழந்தைகள் உண்டு. அவர்கள் குடும்பத்தில் ஆயிரம் தொல்லைகள்! மேலும் கண வனிடம் சண்டை போட்டுக் கொண்டு பல நாள் பிறந்தகத்தில் தங்க வரும் நாத்தனாருக்கு எந்தப் பெண்ணிடமிருந்தும் மரியாதை ஒரு மாற்று குறைவாகத்தான் கிடைக்கும். அதன் விளைவாக, உமாவின் தாய்க்கும், அண்ணன் மனைவிக்கும் தகராறு வர, அண்ணனுக்கும் அவன் மனைவிக்கும் சண்டை கிளம்ப, வீடே போர்க் களமாகிக் கொண்டிருந்தது.

அழுத முகத்துடன் வளைய வரும் உமாவைப் போன்ற பெண்கள் ''ஐயோ என்னுடைய பிரச்னைக்கு முடிவே இல்லையா? கடவுளே உனக்குக் கண்ணில்லையா? எங்கேயாவது விழுந்து தற்கொலை செய்து கொள்ளலாம் போலிருக்கே'' என்று அரற்றிக் கொண்டிருப்பார்கள். தன்னிரக்கம் தாளாக மிருந்து ''நயாகரா நீர்வீழ்ச்சி'' போலக் கண்ணீராகப் பொங்கி வரும்.

இப்போது சேகரைப் பற்றிக் கவனிப்போம். மறதி என்பது தவறு என்றாலும், அது எல்லோருக்கும் சகஜமான ஒன்று. நகை, புடவை, சினிமா போன்ற ஆசைகள் பெண் களுக்கென்றே பொதுவான ஒன்று. ஆபீஸ் அவசரத்தில் கூட, எளிதில் கிடைக்கும் ஒரு சாதாரண வஸ்து அன்று இல்லை என்பதற்காக எத்தனை குத்தல் பேச்சுக்கள்? ஒரு



வேற தேசத்தில இருந்துண்டு வேலை பார்த்துண்டிருக்கேன். எதுக்காக? அங்க நெறையச் சம்பளம், அந்தஸ்து. இதுக் காகத்தான். ஃபாரின்லேருந்து அனுப்பிச்ச பணத்தை வச்சு வீடு கட்டினே. 'ஃபாரின் மிக்ஸி' யிலே அரைக்கிறே. ஃபாரின் டீ. வியிலே படம் பார்க்கறே. அதெல்லாம் வேண்டி யிருக்கு. ஆனா, அந்த ஃபாரின் பொண்ணு மட்டும் உனக்கு ஏன் வேண்டாதவளாய்ப் போயிட்டா? நியாயம்னு இருந்தா எல்லாத்திலேயும் நியாயப்படி நடந்துக்க வேண்டாமா? முன்னே உன் பெண்களுக்கு நல்ல இடத்திலே கல்யாணம் ஆகணும்னா பணம், காசு நெறையச் சேர்க்கணும்னு சொன்னே. நானும் என் தங்கைகள் கல்யாணத்துக்காக, பத்து வருஷமாப் பணம் சேர்த்துண்டு வரேன். அந்தப் பணம் அவாளைக் கரையேத்தும். 'ட்ரெய்ன்'லே பத்து மணி நேரம் சேர்ந்து போனாலே, ஜாதி, மதம் பார்க்காம, நண்பர்களாயிடறோம். அப்படியிருக்கச்சே, பத்து வருஷமா ஒரு நாட்டிலே இருந்துட்டு அவுங்களோ ஒருத்தனா இருந்து பழகிட்டு, அங்கே ஒரு பெண்ணை எனக்கேத்தவளா நான் தேர்ந்தெடுத்ததாலே உன்னுடைய குடும்ப கௌரவமே பாதிக்கப்பட்டுடுத்துன்னா, எனக்கு அந்தக் குடும்பத்து உறவே வேண்டாம்'' என்று ஆணித்தரமாகச் சொன்னான்.

பிரச்னை என்று ஒன்று தோன்றினால், அதற்கு முடிவு என்று ஒன்று இருக்கத்தான் இருக்கிறது. சந்தர்ப்பம், சூழ்நிலை இவற்றை மனத்திலிருத்தி 'எது போன்ற முடிவு நல்லது' என்று தீர ஆராய்ந்து செய்வது முக்கியம். அந்த முடிவு எடுக்கும்போது அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் எண்ணிப் பார்க்க வேண்டிய அவசியம் உண்டாகிறது. ஒரு பிரச்னையின் தீர்வில் வேறு பல பிரச்னைகள் பிரசவம் ஆகின்றன. அந்தப் பிரச்னைகளை எதிர்நோக்கவும், நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

இளம் வயதிலேயே கணவனை இழந்த கமலாவுக்கு மூன்று குழந்தைகள். பெரியவன் பிள்ளை; மற்றவர் பெண்கள். பிள்ளை மிகவும் புத்திசாலி. 'இன்சினியரிங்' படித்து முடித்த பின் அமெரிக்கா சென்றான். சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த கமலாவுக்குத் தன் உழைப்பால் உயர்ந்த மகனைப் பற்றி மகாப் பெருமை. உறவினர் மத்தியில் தன்னுடைய அந்தஸ்தைக் காட்டிக் கொள்ள விரும்பினாள். ஒவ்வொரு முறையும் பிள்ளை 'ஃபாரினிலிருந்து' வரும்போது ரிஸ்ட் வாட்ச், கேமரா, குடை, டேப் ரிக்கார்டர் என்று எல்லாம் வாங்கிக்கொண்டு வரச் சொன்னாள்.

வீடு நிறைய வெளி நாட்டுப் பொருட்களாகவே இருந்தன. நான்காம் முறையாகப் பிள்ளை வந்தான். இன்னொரு 'ஃபாரின் பொருளோடு!' அமெரிக்கப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு வந்திருந்தான். கமலாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.


''இந்த மாதிரிக் கல்லைப் போட்டு விட்டானே, அவனை இவ்வளவு கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தேனே, தங்கைகளோட எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாம இப்படி ஒரு காரியம் பண்ணி விட்டானே'' என்று அரற்றிக்கொண்டே இருந்தாள். பிள்ளை பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். ஒரு நாள் படீரென்று வெடித்தான்.

''அம்மா, எனக்கும் முப்பது வயசாறது. பத்து வருஷமா நான் நம்ம ஜாதி, பாஷை, கலாசாரம் இல்லாத ஒரு பெண், உற்றாரையும், உறவினரையும் விட்டு விட்டுக் கணவனே எல்லாம் என்று வந்தபோது, அந்த இரவில் அவள் மனக் கசப்புடன் பிறந்தகம் செல்வதைக் கண்டிப்பாகத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். மனைவியின் கடமைகள் என்னென்ன என்பதை அவன் பட்டியல் படிக்கும்போது, ஒரு கணவன், மனைவி மனம் கசந்து வீட்டை விட்டு வெளியேறும் வரையில், சண்டையை வளர்த்திருக்கலாமா? இந்த இரண்டு பேரில் யாராவது ஒருவர் 'தன்முனைப்பை' (Ego) விட்டுக் கொடுத்திருந்தால், பிரச்னை இவ்வளவு தூரம் முற்றியிருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது.

உமா-சேகர் தம்பதியைப் போலவே நம்மில் பெரும்பாலோர், நமக்கு ஒரு பிரச்னை ஏற்பட்டால், அதன் பொறுப்பைப் பிறர்மேல் சுமத்தி விடுகிறோம்.

மூன்று குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண் மிகவும் சிரத்தையாகக் குடும்பக் கட்டுப்பாட்டு முறை ஒன்றை அனுசரித்துக் கொண்டு வந்திருந்தாள். திடீரென்று அவள் மைத்துனர் திருமணம் நிச்சயமாகியது. திருமணம் வெளியூரில். அந்தக் குழப்பத்திலும் அலைச்சலிலும், 'கட்டுப்பாடு' பறந்து போய் விட்டது. நான்காவது கர்ப்பம் பிரச்னையைக் கிளப்பியது. அந்தக் குழந்தை வேண்டாம் என்று முடிவெடுத்தாள். டாக்டரிடம் போனபோது ''மூன்று மாதத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஆப்பரேஷன்தான் செய்ய வேண்டும்'' என்று சொல்லி விட்டார். ஆபரேஷன் செய்து கொள்வதற்குப் பயந்து கொண்டு, நான்காவது குழந்தையையும் வருத்தத்துடன் பெற்றெடுத்தாள். குழந்தை பிறக்கும் வரை ''என் மைத்துனரால் வந்த வினை'' என்று புலம்பிக் கொண்டே இருந்தாள். ''இதன் அர்த்தம் அனர்த்தமாகத் தெரிகிறது. யார் யார் இதைக் கேட்டுப் பின்னால் சிரித்துக் கொண்டிருப்பார்களோ, இனிமேலாவது இப்படிப் பேசிக் கொண்டிருக்காதீர்கள்'' என்று சொன்னவுடன்தான், அந்தப் பெண்ணுக்கு மூளையில் உறைத்தது.

''பரீட்சையில் பிள்ளை 'ஃபெயில்' என்றால், நண்பர்களால் கெட்டழிகிறான், சினிமாவால் அழிகிறான்''



பெண் வீட்டை விட்டு ஓடிப்போய்க் கல்யாணம் பண்ணிக் கொண்டால், ''அறியாப் பெண்ணைப் படுபாவி மயக்கிப் போட்டு விட்டான்''

வீட்டுக்காரருக்கு வேலை போய் விட்டதா? ''கூட வேலை பார்க்கிறவனை நம்பி மோசம் போனார், பணத்தை அவன் எடுத்துக்கொள்ள, இவர் மேல் பழியைப் போட்டு விட்டார்கள்.''

''குடியால் குடி கெட்டுப் போனான். குதிரையை நம்பிச் சொத்தை யெல்லாம் தொலைத்தான். சிகரெட் பிடித்துச் சீரழிந்து போனான்.''

இப்படித்தான் ஒவ்வொருவரும் தங்களைச் சேர்ந்தவருக்கு ஏற்பட்ட துன்பங்களை அலசுகிறார்களே தவிர, ''அவனால் அவனே அழிந்தான்'' என்று யாருமே சொல்வதில்லை.

இந்தக் கட்டுரையைப் படிக்கும் ஒவ்வொருவரும் படிப்பதை நிறுத்திவிட்டு, சில நிமிடங்கள், இறந்த காலத்தில் நீங்கள் கடந்து வந்த பிரச்னைகளை நினைவுகூருங்கள். நம்மில் எத்தனை பேர் எத்தனை முறை ''இந்தப் பிரச்னையை நானே உண்டாக்கி யிருக்கிறேன். ஆகவே இதன் விளைவுகளை நான் அனுபவித்துத்தான்தீரவேண்டும்'' என்ற எண்ணத்தில் செயல் பட்டிருக்கிறோம்? அந்த எண்ணம் நமக்கு வந்தாலே, நம் மேல் பழியைப் போட்டுக் கொண்டாலே, அந்தப் பிரச்னையின் பளு குறைந்துவிடும். அப்போது ஏற்படும் குற்ற உணர்வில், பிரச்னையின் வீரியம் அடங்கி விடுகிறது.

ஒரு பிரச்னை என்று வந்தால், அதனை உருவாக்கியதில் நம்முடைய பங்கு என்னவென்று பார்க்க வேண்டும். பிரச்னை சிறியதா, பெரியதா என்பது இங்கே பொருட்டல்ல. சிறிய பிரச்னை என்று நாம் நினைப்பவை உலகப் போர்களையே உண்டு பண்ணலாம். இது மிகவும் சாத்தியம். புராணங்கள், இதிகாசங்கள், சரித்திரங்கள் எல்லாவற்றிலுமே எக்கச் சக்கச் சான்றுகள் உண்டு. பகடைக்காய்கள்தான் பாரதப் போரைத் தொடங்கி வைத்தன. கூனியின் உள்ளத்தில் எழுந்த ஒரு சிறிய பொறாமைப் பொறி கடல் கடந்து இலங்கையையே எரித்தது.

ஆகவே, திரும்பவும் சொல்கிறேன். பிரச்னையில் எது சிறியது, எது பெரியது என்பது முக்கியம் அல்ல. அந்தந்த நேரத்தில் அந்தந்தப் பிரச்னைகள் மிகவும் முக்கியமாகத்தான் படும். அந்தப் பிரச்னையை எதிர் நோக்கிய சில விநாடிகளில், வாழ்க்கையே திசை மாறிச் செல்லக் கூடிய முடிவுகளை நம்மில் பல பேர் எடுத்திருக்கிறோம். பிறகு அந்த முடிவை நினைத்து வருந்தியும் இருக்கிறோம்.

வீட்டுக்காரன் வீட்டைக் காலி பண்ணச் சொல்லிக் கோபமாகப் பேசி விட்டான் என்று, பெண்ணின் திருமணத்துக்கு வைத்திருந்த பணத்தை எடுத்து ஒரு வீட்டை எங்கேயோ வாங்கிப் போட்டு விட்டு, 'கல்யாணம் முடியவில்லையே' என்று அங்கலாய்த்தவர்கள் உண்டு. வசித்துக் கொண்டிருந்த ஒரே வீட்டையும் விற்று, பெண்ணை வசதிக்கு மேற்பட்ட இடத்தில் கொடுத்துவிட்டு, பிறகு மற்றக் குழந்தைகளின் எதிர்காலம் பிரச்னையாக உருவெடுத்தபோது அதிலிருந்து மீள முடியாமல் அவதிப்பட்டவர்களும் உண்டு.



முன் வந்ததும் பேசாமல் ஒப்புக் கொண்டேன். இதுதான் நடந்த உண்மை'' என்றார் ரஜினி.

ஒய். ஜி. மகேந்திரன் வீட்டில் சிரிப்பு வெடி

ஒய். ஜி. மகேந்திரன் வீட்டு மொட்டை மாடியில் காயவைத்திருந்த அத்தனை பட்டாசுகளும் மழையில் நனைந்தன. நமத்துப் போன பட்டாசுகளைத் தூக்கி வீசிவிட்டுச் சிரிப்பு வெடிகளை வெடித்தே தீபாவளியைக் கொண்டாடினார் அவர்.

அவர் வெடித்த சிரிப்பு வெடிகளைப் பொறுக்கி அடுத்த இதழில் வெளியிடவிருக்கிறோம்.



தீபா தம் நாய்க்கு மாலை அணிவித்தார்

''தாங்கள் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவராயிற்றே. எப்படி தீபாவளிகொண்டாடுகிறீர்கள்?'' எனத் தீபாவிடம் கேட்டதற்கு அவர் சொன்ன பதில்:

''தீபாவளியில் பாதி என் பெயரில் இருக்கிறது. நான்கொண்டாடாமல் இருப்பேனா?''

கொண்டாடிய தீபாவளி




''எந்த விழா நடந்தாலும் யாருக்காவது மாலை அணிவிக்காமல் இருக்க மாட்டீர்கள். இன்று யாருக்கு மாலை அணிவித்தீர்கள்?''

''எங்கள் வீட்டு நாய்க்குச் சரவெடி மாலை சூட்டி அதற்குப் பக்கத்தில் நின்று படம் எடுத்துக் கொண்டுள்ளேன். உங்கள் பத்திரிகையில் போடுங்களேன்'' என்றார்.

ரவீந்தர் - உஷா மோதல்

நடிகர் ரவீந்தர் பறக்கவிட்ட ஏரோப்ளேன் கோணல் மாணலாகப் பறந்து நடிகை உஷா வீட்டில் விழுந்ததாகவும், உடனே டி.ராஜேந்தர் ஓடிவந்து, அவர் தலையில் விழாமல் அதைத் தடுத்ததாகவும் தெரிகிறது.

இது பற்றி ராஜேந்தரிடம் நமது நிருபர் விசாரித்தபோது, ''உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும்அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!'' என ராகம் போட்டுப் பாடிக் காட்டினார்.



சுந்தரராஜன் அடுத்த படம்
'இனி பட்டாசு சுடுவதில்லை'

பயணங்கள் முடிவதில்லை, அந்த ராத்திரிக்குச் சாட்சியில்லை ஆகிய படங்களை இயக்கிய சுந்தரராஜன் தீபாவளிப் பட்டாசு வெடித்துக் கைகளைச் சுட்டுக் கொண்டதால் அடுத்து இவர் டைரக்ட் செய்யும் படத்துக்கு 'இனி பட்டாசு சுடுவதில்லை' எனப் பெயர் சூட்டியுள்ளார்.

– திரைஞானி

அட்டைப்படக் கட்டுரை:

யாரை வதைக்கும் தீபாவளி?



இந்த வருடம் தலை தீபாவளி கொண்டாடும் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வாழ்த்துக்கள். தனக்கே தனக்கு மட்டும் சொந்தம் என்ற ஒரே உறவுடன் ஒட்டி உரசிக் கொண்டாடும் பண்டிகைகளில்தான் எத்தனை சந்தோஷம், குதூகலம்?

வாழ்வின் பயனே சந்தோஷமாக வாழ்ந்து, குதூகலித்து மகிழ்வதுதானே? இதிலே இடையிலே வந்த பணமும், பொருட்களும் என்ன சாகவதம்?

நாலு வருடங்களுக்கு முன்பே கல்லூரிப் படிப்பை முடித்து வேலைக்காகப் படாத பாடு பட்டு, ஒரு வேலையில் அமர்ந்து, விலைமதிக்க முடியாத ஒரு பெண்மையை மணந்திருக்கும் இளைஞர்களே, நீங்கள் ஏன் திடீரென்று இப்படி மாறிப்போய்விட்டீர்கள்?

சமூகத்தின் அக்கிரமங்களை, நாடு போகும் போக்கை, அரசியல்வாதிகளின் அலட்சியப்



போக்கை யெல்லாம் கல்லூரியில் காம்பவுண்டுச் சுவரின் மேல் ஏறிக்கொண்டு எத்தனை காரசாரமாக விவாதித்தீர்கள்? இப்போது மட்டும் என்ன? ஆபீசின் லஞ்ச் டைமில் கான்டீனே கலகலப்பாகிவிடுமே உங்கள் பேச்சால்...

''தவிச்ச வாய்க்குத் தண்ணி கொடுத்தா கோடி புண்யம்பாங்க, நாம ஆடிப் பெருக்கெல்லாம் கொண்டாடி ஆராதிச்ச காவிரி — அத வுடமாட்டங்கறாரே இந்தக் குண்டு ராவ்...''

''சார், இந்த அரசியல் வாதிங்களை மொதல்ல ஒழிக்கணும் சார். அப்பத்தான் நம்ப நாடே உருப்படும். ஒண்ணுமில்ல இந்த வாட்டர் பிராப்ளத்தை நல்ல இன்ஜினியர்ங்க கிட்ட வுட்டுட்டு இவங்கள்ளாம் தள்ளி நிக்கட்டும், தானா சால்வ் ஆகுதா இல்லையா பாருங்க'' என்று முழங்கினீர்களே!

எல்லாம் ஊருக்குத்தான் உபதேசமா? நாட்டைப் பற்றித்தான் கவலையா? உங்கள் ஒரு மனுஷனை நம்பி, தான் இத்தனை நாள் வாழ்ந்த குடும்பம், கலாசாரம், சுற்றம், நட்பு எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்த அந்தப் பெண்ணை எப்படி நடத்துகிறீர்கள்?

எனக்குத் தெரிந்த ஒரு மாமனார் கண்ணில் நீரோடு சொன்னார்,

''தலைதீபாவளிக்கு அஞ்சாயிரத்தைஅனுப்பிச்சுட்டேன். நாம எடுத்துக் கொடுத்தா பேண்ட் நல்லா இல்லேங்கறான். அவனே இவ்வளவு பணத்தை எதிர்பார்த்திருக்க மாட்டான். இதைப் பார்த்தாவது என் பெண்ணை நல்லா வச்சுக்க மாட்டானான்னு ஆசைப்படறேன்!''

அந்தச் சமயத்தில் நெஞ்சைப் பிழிந்தது துக்கம். இருக்கும் அப்பா அனுப்புகிறார். இல்லாதவர் பெண்ணைப் பெற்ற பாவத்துக்குப் பிச்சை யெடுக்கவா? அந்தப் பாவப் பட்ட ஜென்மத்துக்குப் பிறந்ததற்காகப் புகுந்த வீட்டாரிடம் பெண் இடிபடவா?

தலை தீபாவளிக்கு வெந்நீர் விளாவ அண்டாவிலிருந்து, குடத்திலிருந்து, கட்டிக் கொள்ளப் பட்டுப் புடவை வேஷ்டியிலிருந்து வெடிக்கப் பட்டாசிலிருந்து... அப்பப்பா... எத்தனை சீர் வரிசைகளை எதிர்பார்க்கிறார்கள்!

இது நரகாசுரனை வதைத்ததற்காகக் கொண்டாடப்படும் தீபாவளியா? பெண்ணைப் பெற்றவரைக் காசுக்காக வதைத்துத் திருப்திப்படும் தீபாவளியா?

இளைஞர்களே, ஒரே ஒரு நிமிடம், சில ஆண்டுகள் பின்நோக்கிச் சென்று யோசனை செய்து பாருங்கள்—

''லட்சுமி, என்ன பாவம் பண்ணேனோமோ போ! 'குழந்தைக்கு ஆண்டு நிறைவுக்குப் போடற சங்கிலியா இது? ரெண்டு பவுன் இருக்காது போலிருக்கே'ன்னு சம்பந்தியம்மா பேசறா. இவாளுக்கு எவ்வளவு பண்ணாலும் திருப்தியில்லே. நான் பணத்தை பார்க்கலே. எப்படியோ நம்ப பொண்ணு சௌகரியமா இருந்தாப் போறும்னு பார்க்கறேன். அங்க என்ன இடிபடறாளோன்னு நினைக்கறப்போ....''



மனைவி: ''என்னங்க பிச்சைக்காரனுக்கு நூறு ரூபாய் பிச்சை போடுறீங்களே! காசோட அருமை தெரியுமா உங்களுக்கு?''

நடிகர்: ''சும்மா இருடி! என்னைத் தொடர்ந்து தன் பத்துப் படத்துலேயும் ஹீரோவா போட்டவர் இவர்தாண்டி!''

-பி. கலைமாறன்

எதற்கும் கலங்காத அப்பா துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டபோது—

முந்தானையால் வாயைப் பொத்திக் கொண்டு அம்மா அழுதபோது—

பி. யூ. சி. பரீட்சைக்காகப் படிக்கவும் முடியாமல், உங்கள் அக்காவின் அவல நிலையை நினைத்துக் கதறவும் முடியாமல் அந்த நாளில் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பீர்கள்.

செல்லமாக வளர்ந்த கடைக்குட்டி தங்கையைப் புருஷன் கையில் ஒப்படைத்த போது எப்படிப் பேசினீர்கள்?

''ஸ்ரீதர், சாந்தி இல்லாம நான் எப்படித் தான் இருக்கப் போகிறேனோ அண்ணா அண்ணான்னு காலையே சுத்தி வருவா...!''

அக்காவை ஒரு பாழும் கிணற்றில் தள்ளி விட்டோமோ என்ற மனப் பிரமையிலேயே அப்பா போய்விட்ட பிறகு தந்தைக்குத் தந்தையாக அண்ணாவுக்கு அண்ணாவாக இருந்து போன வருஷம்தானே கல்யாணத்தை முடித்தீர்கள்? அவளும், மாப்பிள்ளையும் நன்றாக இருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டவுடன் எத்தனை சந்தோஷம்!

ஆமாம் சார், அவர்களும் பெண்கள்தான் நாலு மாசத்துக்கு முன் எட்டாயிரம் வரதட்சணை கொடுத்து உங்களைக் கைப்பிடித்த மனைவியும் ஒரு பெண்தான். நீங்கள் அவளை நன்றாக வைத்துக் கொண்டு இருந்தால் அவளைப் பெற்றவர்கள் வயிற்றில் பாலை வார்க்காதா?

உங்கள் வீட்டில் பிறந்த பெண்களுக்கு ஒரு நியாயம், உங்கள் இல்லத்தரசியாகப் புகுந்த பெண்ணுக்கு ஒரு நியாயமா?

ஏன் இந்த வேஷம்?

''சொல்லச் சொல்ல ஏன் மரமாட்டம் நிக்கறே, அந்த ஃபேனையாவது போட்டுத் தொலை. பெரிசா உங்கப்பன் வீட்டுலேந்து கொண்டு வந்த ஆஸ்தி யொண்ணும் குறைஞ்சுடாது....''

அடக்கமாக வளர்ந்த அந்தப் பெண் கொஞ்ச நாள் சும்மா இருப்பாள், கொட்டக் கொட்டப் புழுவும் ஒரு நாள் குளவியாகும் என்ற இயற்கை நியதியே இருக்கும் போது பெண் எம்மாத்திரம்? அவளும் உங்களைப் போலப் படித்து, சுயமாகச் சிந்தித்து, தோழிகளுடன் உலக ஞானத்தை விரித்துக் கொண்டவள்தானே, அவளுக்கு மட்டும் வாயிருக்காதா என்ன? அப்புறம் என்ன?

குடும்பம் ஒரு குருக்ஷேத்திரம்தான்.

வார்த்தை அம்புகளால் கிழித்து, கோபத்தால் வெட்டி, 'ஈகோ'வால் பிளந்து பெரிய அகழி ஒன்றை உருவாக்கி விடுகிறீர்கள்.

போர் செய்ய உங்களை இணைக்கவில்லை!

குடும்பத்தை ஒருகோயிலாக்க, மணமாலை கொடுத்து இருக்கிறார்கள். வாழ்வின் அர்த்தம் அன்பே தவிர பணமில்லை.

கல்யாணம் என்று வரும்போது மட்டும் ஏன் இந்தப் பேராசை வந்து விடுகிறது? பணம் பணம் என்று அலைந்து தன்னைப் பெற்றவனைச் சக்கையாகப் பிழிந்து, சாறைக் குடிக்கும் உங்களை அவள் நாயகனாகவா நினைப்பாள்? ஓநாயாகத்தான் கற்பனை செய்வாள்.

கல்யாணத்தன்று அவள் மண மேடையில் அமர்ந்த நீங்கள், தலை தீபாவளி கொண்டாடும் இந்தச் சமயத்தில் எங்கு இருப்பீர்கள்? அதைக் கொஞ்சம் யோசியுங்கள். இதற்குக் கிடைக்கும் விடையிலேயே உங்கள் இல்லறப் படகின் ஓட்டம் புரிந்துவிடும்.

—மஞ்சுளா ரமேஷ்

மேலட்டை வண்ணப்படம்:
நரசிம்மன்

''ஆம், ஒப்புக்கொள்கிறோம் பரிசுப் பொருள் தேர்ந்தெடுப்பது (மனைவியைத் தேர்ந்தெடுப்பதை விடவும்) கடினம்தான் ...''

ஆனால் நாங்கள் தீர்மானமாய்ச் சிபாரிசு செய்கிறோம் ... எங்களது ''ரொக்கப் பத்திரங்கள்'' எந்த விழாக் காலத்திற்கும் - விழாச் சந்தோஷத்தைவிட பெரிய சந்தோஷம் வழங்கக் கூடியது. ரூபாய், 50/- முதல் (உங்கள் பிரியத்திற்கு ஈடு கொடுக்கக்-கூடிய அதிக விலைகளிலும்) கிடைக்கிறது. ரூ. 81/95 முதல் பிரமிக்கத்தக்க விதமாய் திரும்பப் பெறும் தொகை அமைகிறது.




82 கிளைகள் மூலம்
நண்பனாய், மந்திரியாய் நற்பணிபுரியும்

பாங்க் ஆப் தமிழ்நாடு லிட்..
(ஒரு ஷெட்யூல்ட் பாங்க், ஸ்தாபிதம் 1903)
62, கீழரத வீதி, திருநெல்வேலி டவுன்.

EP-BT-104.-82

உங்களுக்காகவே நாங்கள்


டாக்டர் சார்,
உங்களுக்கென்ன ?
சோகம் புடிச்சமாதிரி
டல்லா இருக்கீங்களே !
ராத்திரி-
யெல்லாம்
கொசுக்கடி 'SUCK-
O-MANIA'விலே
கஷ்டப்படுறேன் !
ஒரு அறையிலே 2000 கொசுக்கள் இருக்-
கின்றன... அதிலே 1000 பறந்துவிடுகின்றன...
அப்புறம் 500 ஓடிவிடுகின்றன, பின்பு 500
பறந்து விடுகின்றன... மீதி என்ன இருக்கும்?
2000
-1000
500-500
ஒரே ஒரு
டார்டாய்ஸ்
கொசுவர்த்திச்
சுருள் இருக்கும்
சார் !
சார்... எனக்கு பீடிகூட வேணாம்,
வேண்டியதெல்லாம் ஒரு டார்டாய்ஸ்
கொசுவர்த்தி சுருள்தான் !
புத்தம் புதுக் காலை,
நீ வரும் வேளை...
கொசு மறைந்திடும்
வாழ்வு மகிழ்ந்திடும்...



'அதர்ம யுத்தம்' என்ற தங்கள் தலையங்கம் வேடிக்கையாக இருந்தது. ஆங்கிலேயர்கள் நாட்டை நம் கையில் ஒப்புவித்த நாளிலேயே அதர்ம யுத்தம் துவங்கிவிட்டது. இந்த அதர்ம யுத்தத்தில் நேர்மை, நியாயம், வாய்மை, நாணயம், தேசப் பற்று அனைத்தும் தோற்று விட்டன. என்ன பேசி என்ன பயன்?

தேனி ச. புவனேந்திரன்

பாரதியின் பாடலைக் கோடிட்டுக் காட்டி சீக்கியரைச் சாடினீர், மெத்தச் சரி! பாரதி பிறந்த தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த ஒரு தமிழ்ப் பெண், நடிகை 'எம். ஜி. ஆரால் தான் தமிழகம் விடுதலை பெற்றது' என்று பேசுவதை என்ன செய்வது? எங்கே போய் முட்டிக் கொள்வது?

செங்கவல்லி இ. முருகவேள்

அந்த ராத்திரிக்குச் சாட்சி இல்லை படத்தில் கலக்கணுவைச்சவுக்கால்அடிக்கும்போது தாய்க்குலம் கண்ணீர் விடுவதை திரைஞானி கவனிக்க'வில்லை'. கெடுத்தவளே மணக்க முடிய'வில்லை'யே என சிவசந்திரன் தன் மனத்தை ஆற்ற முடியாமல் தவிக்கிறபோது அவரின் நடிப்பில் இருக்கும் நயத்தைப் பற்றி விமர்சகர் ஒன்றும் சொல்ல'வில்லை'. மொத்தத்தில் இப்படத்தின் விமரிசனத்தில் வழக்கமான திரைஞானியைக் காண'வில்லை'. விமரிசனத்தில் நிறைவு 'இல்லை'!

தண்டையார்பேட்டை எம். எட்வர்ட் ராஜப்பா

பூங்குளம் கிராமத்திற்கு நாமும் கல்கி அவர்களுடன் போய்விட்டோமோ என்று நினைத்துக் கொண்டிருக்கையில் என் 15 வயது மகனும், 12 வயதுப் பெண்ணும் பூங்குளம் கிராமத்தை பாலு மகேந்திராவின் காமிராவில் பார்ப்பது போல் இருக்கிறது என்றார்கள்.

நிலக்கோட்டை வனிதா முருகன்

'இவர்தான் இர்ஃபான் கட்டாலா' என்ற ஒரு பக்க வேஸ்ட் அவசியந்தானா?

காட்பாடி எம். சி. திலகவதி

போட்டிக் கதை (குயிலம்மா)வுக்குப் போட்டிருந்த படம், போட்டி போடுபவர்களைப் போட்டது மிக மிகப் பொருத்தமே! குயிலம்மாவின் சிலம்பாட்டம் சிலிர்க்க வைத்தது. முத்துப்பட்டனை மட்டுமல்ல, என்னையும்தான்!

செம்பியம் ச. சக்திவடிவேல்

கல்கி வாசகர்கள் என்ன காதிலே பூ வைத்துக் கொண்டா அலைகிறார்கள்? இலங்கையில் வசந்த மாளிகை இரண்டு வருடங்கள் ஓடியதாக 'கப்ஸா' அடித்ததை அப்படியே பிரசுரித்து விட்டீர்களே!

இராஜபாளையம் கே.எஸ். முருகேஷ்

வெறும் ஒரு ரூபாய்தானே... இதனால் என்ன கெட்டுப் போகிறது? ஆனால் கிடைத்தால் ஒரு லட்சம் கிடைக்குமே' என்ற நம்பிக்கையில் மக்கள் வாங்கும் லாட்டரிச் சீட்டின் மறு பக்கத்தில் உள்ள மோசடிகளையும், குற்றங்களையும் மிகத் தெளிவாக நீங்கள் விளக்கிக் காட்டியுள்ளீர்கள். இனிமேலாவது இதை மக்கள் உணருவார்களா?

குளச்சல் எம். முகம்மது இப்ராஹிம்

'மணம் நெகிழ்ந்தது' என்ற தலைப்பில் திருமதி லலிதா செல்லப்பா அவர்கள் எழுதிய துணுக்கைக் கண்டு துணுக்குற்றேன்.

'ரெஜினா' என்ற பெயர் கிறிஸ்துவ மதத்திலும் உண்டு. இப்பொழுது நடிகைகள் கூட பர்தா அணிந்துதான் வெளியில் வருகிறார்கள். இஸ்லாமியர்கள் உருவ வழிபாடு செய்ய மாட்டார்கள்.

அப்படி யாராவது மேற்கொள்வார்களேயானால், அவர்கள் இஸ்லாம் மதத்தை விட்டு அப்பாற்பட்டவர்களாகவே கருதப்படுவர். அவர்களுக்கு இஸ்லாம் மதத்தில் இடமே இல்லை.

சென்னை-1 நாகை ஜி. அஹ்மது

தண்ணீர் தண்ணீர் மாதிரி இன்னொரு படம் பாரா (பஞ்சம்). முழுக்க முழுக்க அரசியல் அவலங்களையும் செல்வாக்கிற்காக தமது அமைச்சரையே பலிவாங்கி பஞ்சப் பிரதேசமான பிதார் மாவட்டத்தில் தம் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்ளும் முதல் அமைச்சரையும் பற்றிய கதை இது. இந்தப் படத்தை இரு குண்டு ராவ் கண்டு களித்து படத்திற்கு 100 சத வரி விலக்குக் கொடுத்திருக்கிறார். -தி.க. இளஞ்செழியன்



விஞ்ஞானப் பக்கங்கள்

நளினி சாஸ்திரி



✖ வௌவால் தலைகீழாக

"**வௌ**வால் இறைச்சி சுவையானதாம்" என்றான் சீனிவாசன்.

"எங்க கிராமத்தில் கூட சாயங்காலங்களில் பலர் முள் வலையால் வௌவால் பிடிப்பார்கள்" என்றான் விஜயகுமார்.

இறைச்சி என்றதுமே கண் மூடி முகம் சுளித்தான் வெங்கட்ரமணி.

"குட்டி போட்டுப் பால் தரும் வௌவால் பறவைக்கு(?) இரவில்கூட கண் தெரியும்" வரதராஜன் மூக்கை நுழைத்தான்.

"அப்படியில்லை. வௌவாலுக்கு இரவில் காதால் பார்க்க முடியும்" வெங்கட்ரமணி விஷய ஞானத்தைக் காட்டினான். மற்ற மூவரும் ஏக காலத்தில் முகத்தில் கேள்விக் குறி காட்டினார்கள்.


"ரேடார் எப்படி இயங்குகிறது தெரியுமா?" வெ. ரமணி எதிர்க் கேள்வி போட்டான்.

"அல்ட்ராசானிக் ரேடியோ அலைகளை அனுப்பி அது விமானம் அல்லது வேறு தடைகளில் மோதித்திரும்பி வர ஆகும் நேரத்தை வைத்து விமானத்தின் அல்லது தடையின் இருப்பிடத்தை அறிவார்கள்" விஜயகுமார் எலெக்ட்ரானிக்ஸ் அறிவை விளம்பரம் செய்தான்.

"அதே ரேடார் தத்துவம்தான். கடவுள் எல்லாவற்றையும் முன்பே செய்துவிட்டார். வௌவால் ஒரு ரேடார். ஆனால் வௌவால் ரேடியோ அலைகளுக்குப் பதிலாக அல்ட்ராசானிக் ஒலியலைகளை உபயோகித்துத் தனது தடைகளையும் இரைகளையும் தெரிந்து கொள்கிறது. இவை வெளிப்படுத்தும் அல்ட்ராசானிக் ஒலியலைகளின் துடிப்புநீளம் சுமார் 2 மில்லி செகண்ட் அதாவது நொடியின் ஐந்நூறில் ஒரு பங்கு. இந்தத் துடிப்பை நொடிக்கு பத்து முதல் இருபதுவரை வெளிப்படுத்தும். மனிதனால் இதைக் கேட்க முடியாது. பறக்கையில், 50, 60 முறையும், ஏதாவது தடை வந்தால் 250 முறை கூட அதிகமாகும். இந்தத் துடிப்புக்கள் தடையில் மோதி எதிரொலித்துத் திரும்ப வரும். அதை ரேடாரின் ஏரியல் போன்ற வௌவாலின் காதுகள் திரும்பப் பெற்று விஷயத்தை அறிந்துகொள்ளும். இதற்கு Echo Location என்று பெயர். காதை அடைத்துவிட்டால் எங்காவது போய் மோதிக் கொள்ளும். வௌவால் 10 செமீ. அருகில் உள்ள பொருளைக்கூட உணர வல்லது. 0.08 மில்லி மீட்டர் பருமனுள்ள பூச்சிகளைக்கூட இந்த அபூர்வ சக்தியால் அறிந்துகொள்ளும். ஆனால் ரேடார் கூட பக்கத்துப் பொருள்களைக் காணத் தானம் போடும்."

"ஆமாம் வௌவால் ஏன் தலைகீழாகத் தொங்குகிறது?" — வரதராஜன்.

"அதன் மிகமெல்லிய கால் எலும்புகளால் அதன் எடையைத் தாங்க முடியாததால்



✖ 50 செ.மீ வௌவால் 15 செ. மீட்டர் துவாரத்தில் செல்லுதல்

அது தொங்குகிறது. ஒரு வௌவாலைக் கீழே தரையில் போட்டால் அதனால் கால்கள் உதவியால் எழுந்து பறக்க முடியாது. ஊரத்தான் செய்யும். நிற்க முயன்றால் கால்கள் உடைந்துவிடும். வௌவால்களின் பரந்த இறக்கையை விரிக்க மட்டும்தான் மெல்லிய கால்கள் உதவும். கால் எலும்புகளால் அழுத்த விசைகளைத் தாங்க முடியாததால் சுவர்களில் கூடப் பின்புறமாகத் தவழ்ந்து தான் ஏறும். மேலும் தலை கீழ் அமைப்பு நினைத்தவுடன் பறக்க வசதியாக இருக்கும்."

"கோவில்களில் நிறைய வௌவால்கள் இருக்கே ஒண்ணோட சப்தம் மற்றதைக் குழப்பாதா?" — வரதராஜன் திரும்ப.

''ஒவ்வொன்றுக்கும் அதன் சிக்னல்களின் தனித் தன்மை புரிந்திருக்கும். அதனால் குழப்பமேற்படாது. நாம் நூற்றுக் கணக்கானவரின் குரலைப் புரிந்துகொள்வதில்லையா? இருந்தும் சில சமயம் வௌவால்கள் ஏமாந்து போவதும் உண்டு. அம்மா வௌவால் குட்டி வௌவாலின் குரலைக் கொண்டு அதைப் பின்தொடரும் சக்தி பெற்றது. இறக்கையை 50 செ. மீ. அகலத்துக்கு விரிக்கும் ஒரு வௌவால் 15 செ. மீ. அகல துவாரத்துக்குள் இறக்கையைக் குறுக்கிக் கொண்டு இடித்துக் கொள்ளாமல் போய்விடும்''— வெங்கட் ரமணி.

''வௌவாலுக்குக் கண் எதற்கு?''

''எல்லா வௌவாலும் இந்த எக்கோலொகேஷன் முறையைப் பின்பற்றுவதில்லை. பழந் தின்னி வௌவால்களின் கண்கள் இரவில் கூடப் பார்க்கும் சக்தி வாய்ந்தவை. பெரும்பாலான வௌவால்கள் குறிப்பிட்ட பாதையை உபயோகிக்கையில் ஒலியலைகளை வெளிப்படுத்துவதில்லை. காற்றில் ஞாபக சக்தியைக் கொண்டே(Spatial memory) பறக்கும் திறன் கொண்டவை. உதாரணமாக குகை வௌவால்களை எடுத்துக்கொண்டால் வெளியே செல்லும் வழியில் பல மரங்களைச் சுற்றிச் சுற்றிப் பறந்து வெளியே போகும். இருப்பிடம் திரும்பும்போது வேறு குறிப்பிட்ட பாதையில் திரும்ப வரும். ஒரு நாள் மரத்தை வெட்டிவிட்டார்கள். அப்போதும் வௌவால்கள் மரம் இருப்பதாகப் பாவித்துக்கொண்டு வழக்கமான சுற்றுப் பாதையிலேயே பறந்தனவாம். இதிலிருந்து வௌவால்கள் எல்லா நேரத்திலும் தனது ரேடார் சாதனத்தை 'ஆன்' செய்வதில்லை என்று கண்டு பிடித்துள்ளார்கள். புதுப் பாதையில் போகும்போதும் இரை தேடும் போதும் தவிர மற்ற நேரத்தில் தனது ரேடாரை ஆஃப் செய்து விடுகின்றன.''

''அதானே பார்த்தேன். வௌவால் .08 மி. மீ. அளவுப் பொருளைக் கூடத் தெரிந்து கொள்ளும் என்றால் அதனைப்பிடிப்பது என்பது முடியாத காரியமே! எங்க ஊர்ல முள்வலையாலசாயந்திரங்களில் பிடிக்க முயலுகையில் தூரத்திலேயே முள்ளை உணர்ந்து திசையை மாற்றிக் கொள்ளுமேன்னு பார்த்தேன். அது வழக்கமான பாதையில் ரேடார் சாதனத்தை ஆஃப் செய்துவிட்டு வர சமயத்தில முள்ல மாட்டிக்கும் போலிருக்கு'' — விஜயகுமார்.

''வௌவால் இறைச்சி சுவையானதாம்'' -சீனிவாசன் திரும்ப நினைவூட்டினான்.

வெ. ரமணி கண் மூடி, மூக்கைப் பிடித்து முகம் சுளித்தான்.

படம்: **சயன்ஸ் டுடே**

அருள் வாக்கு...



பெண்கள் பகலில் ஒழிவு இருக்கிற போது சேர்ந்து நல்ல மத நூல்களைப் படித்து மற்ற ஸ்திரீகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் நமக்கு இருக்கிற ஸ்தோத்திரங்கள் யதேஷ்டம். பெண்கள் ஒன்று சேர்ந்து இவற்றைப் பாடம் பண்ணலாம். மடம், கோயில் மாதிரியானவற்றுக்கு சுத்தமான மஞ்சள் குங்குமம் பண்ணிக் கொடுக்கலாம்.

(குங்குமம் எப்படிச் செய்வது என்பதற்கு ஒரு முறை ஸ்ரீ பெரியவர்களே கொடுத்த குறிப்பு: முப்பது தோலா கெட்டியான உருண்டை மஞ்சள் எடுத்துச் சிறு சிறு துண்டங்களாக நறுக்கிக் கொள்க. இதற்குச் சம எடை எலுமிச்சம் பழச்சாறு விதை இல்லாமல் வடிகட்டி எடுத்துக் கொள்க. (16 அவுன்ஸ்) இந்தப் பழச் சாற்றில் நன்றாகப் பொடித்த வெங்காரமும் படிக்காரமும் ஒவ்வொன்றும் மூன்றுதோலா போட்டுக் கரைக்கவும். மஞ்சள் துண்டங்களை இதில் போட்டுக் கலக்கி வைக்கவும். வாயகன்ற ஈயம் பூசிய பாத்திரத்தில் வைப்பது உத்தமம். இதை ஒரு நாளில் மூன்று தடவை நன்றாகக் கிளறவும். பழச் சாறு மஞ்சளில் சேர்ந்து கண்டிய பிறகு நிழலிலேயே நன்றாகக் காயவைக்கவும். அப்புறம் உரலில் இடித்து வஸ்திராயணம் செய்யவும். (அதாவது மெல்லிய துணியில் பொடியை வடிகட்டுவது.)

ஸ்வாமி தீபத்துக்கு அகத்திலேயே சுத்தமாக வெண்ணெய் காய்ச்சி பசும் நெய் எடுத்துத் தரலாம். முனை முறியாத அக்ஷதை பொறுக்கி அனுப்பி வைக்கலாம். 'அக்ஷதை' என்றாலே 'முறியாதது' என்று அர்த்தம். ஆனால் இப்போது மந்திராக்ஷதை என்றுபோடுவதில் பாதி நொய் மாதிரி தானாகத் தானே இருக்கிறது. மந்த்ராக்ஷதை முழுசாக இருந்தால்தான் அதனால் மங்களம் கிடைக்கும். எங்கிருந்தோ டின்னில் அடைத்து வருகிற நெய்யில் ஏதாவது கொழுப்புக் கலந்திருந்தால் அதை ஸ்வாமி தீபத்துக்குப் போடும்போது உத்தேசித்த க்ஷேமம் உண்டாகாமலே போய்விடும்.

மற்ற ஸோஷல் ஸர்வீஸ்களை விட தெய்வஸம்பந்தமான, மத ஸம்பந்தமான இப்படிப்பட்ட பணிகளைப் பெண்கள் முக்யமாகச் செய்யலாம்.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்



ஏதாவதொரு மிக்ஸரை வாங்கிவிடாதீர்கள்
... உங்கள் தேவைக்கேற்றது ஸுமீத்

OBM/8969/TM

அற்புதமான ஸுமீத் ! இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவது. நாடெங்கிலும் மேன்மேலும் அதிக இல்லத்தரசிகளுக்கு வியப்பூட்டி வருகிறது.


ஸுமீத்தில் மட்டுமே, எல்லா வேலைகளுக்கும் பயனுறும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட, பல-பயனுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. அதன் மீது உள்ளே பார்க்கக் கூடிய அக்ரிலிக் மூடி. எனவே ஸுமீத் இயங்குவதைக் கண்ணெதிரில் காணலாம்.

பல்வேறு வேலைகளை விரைவிலும் எளிதிலும் செய்து முடிக்க, இப்போது இதில் 4 அலகு அமைப்பு பாகங்கள் :

ஈரப் பண்ட அரைவைக்காக,
உலர் பண்ட அரைவைக்காக,
கடைய, கலக்க, சாறு பிழிய,
மாமிசத்தை அரிக்க,
காய்கறிகளை நறுக்க.

இவை மட்டுமா? ஸுமீத்தில் 30 நிமிடங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய ஹெவி ட்யூட்டி மோட்டார்.


அற்புதமான ஸுமீத் ஒன்றுதான் முழுமையான கிட்சன் மெஷின். இதை அடைய எத்தனை நாள் வேண்டுமானாலும் காத்திருக்கலாம்.



ஈர அரவை— வடை, இட்லி, தோசைக்காக உளுத்தம் பருப்பு மற்றும் அரிசியை அரைக்க 3½ நிமிடங்களில்.

உலர் அரவை— எல்லாவித மசாலாக்கள், மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விதை ஆகியவற்றை அரைக்க.





பொடிக்க— 1 நிமிடத்தில் மாமிசத்தை பொடிக்க, காரெட், வெங்காயம், தேங்காய் மற்றும் கொட்டைகளை நறுக்க— விநாடிகளில்.


அரைக்க— 2 நிமிடங்களில் தேங்காய் சட்னி அரைக்கலாம் அல்லது விநாடிகளில் கொத்துமல்லிச் சட்னி அரைக்கலாம்.






கடைய— லஸ்ஸி, மில்க் ஷேக் ஆகியவற்றை ஓர் நிமி-டத்தில் தயாரிக்க அல்லது நிமிடங்களில் மயோன்னைஸ் தயாரிக்க. வீட்டிலேயே வெண்ணெய் கடையலாம்.

விருப்பத் தேர்வு : ஒப்பற்ற கீடிங் இணைப்பு





மாவு பிசைய— சப்பாத்தி, பூரி, [illegible] தயாரிக்க 2 நிமிடங்களில் மாவு பிசையலாம். கேக் மாவை மிகவும் சன்னமாகப் பிசையலாம்— 3½ நிமிடங்களில்.

ஸுமீத்®

உங்கள் முழுமையான கிட்சன் மெஷின்

அற்புதமான ஸுமீத் பலவகைப் பல்வேறு பணிகளைச் செய்கிறது – மற்ற எல்லா வீட்டுபயோக மிக்ஸர்களைவிடச் சிறப்பாக. எப்போது நாங்கள் இயல்பாக இயக்கிக் காட்டுகிறோம் என்பதைக் கவனித்து வாருங்கள், உங்களுக்கெனவே ஸுமீத் சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்!

தயாரிப்பாளர்கள் : பவர் கண்ட்ரோல் அண்ட் அப்ளையன்ஸஸ் கம்பெனி
F/11 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600 058 இந்தியா, ஃபோன் : 633340

சர்வீஸ் சென்டர்கள் :
சென்னை : மெட்ரோபாலிடன் & என்ஜினியர்ஸ், டெலிபோன் : 445700/442055 • விவேக் எஜென்ஸிஸ், டெலிபோன் : 76923/75661 • விவேக் & கம்பெனி, டெலிபோன் 444129 • விவேக் & கம்பெனி, டெலிபோன் : 663545 • வி. டி. பன்னீர்தாஸ் & கம்பெனி டெலிபோன் : 812121/88184.
மதுரை : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், டெலிபோன் : 24028.
கோயம்புத்தூர் : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், டெலிபோன் : 24579/25566.
திருச்சி : ஸ்டாண்டர்ட் எலெக்ட்ரிக் கம்பெனி, டெலிபோன் : 24343.

"அப்பா, பார்த்தீங்களா, பரீட்சை வருதாம்!" என்றாள் மித்ரா, பேப்பரை மடக்கிப் போட்டபடி.

"ஆமாம், தேர்தல், தாத்தா!" காறித் துப்பினார் ராமநாதன்:

"ஓட்டுப் போகிற ஆளை தமிழ்நாட்டுலதான் செலக்ட் பண்ணப் போறாங்களாம்."

பிரஜைக்கு மரியாதை

மாலன்

"அதெல்லாம் சும்மா, நம்பாதே" என்றான் ரிஷி.

"இல்லே டியர், பேப்பரிலே போட்டிருக்கான்."

"கொஞ்சம் லாஜிக்கலா யோசித்துப்பாரு. இன்னிக்குத் தேதியில இந்தியாவின் ஜனத்தொகை நூறு கோடி. இந்த நூறு கோடியிலே ஒர்த்தன். அவன் யாரு, எந்த ஊரு, என்ன பேரு, கறுப்பா, சிகப்பா, வடக்கா, தெற்கான்னு தலைவருக்குக் கூடத் தெரியாது. தெரிஞ்சா பாலிடிஷியன்ஸ், பத்திரிகைக்காரன் அத்தனை பேரும் அவனை மொச்சிட மாட்டாங்களா? அவனுக்கு ஏகப்பட்ட சலுகைகளை அரசாங்கம் அறிவிச்சுடாதா? பணம், பிரசாரம், அதிகாரம், அத்தனைக்கும் அப்பாற்பட்டு, நம்ம தேர்தல்கள் நடக்கணும். ஜனநாயகம் பிழைக்கணும்னுதானே இந்த ஏற்பாடு. இத்தனை ரகசியம். இந்த செலக்ஷன்லே மனுஷ வாசனையே கூடாதுன்னுதானே அதைக் கம்ப்யூட்டர் கையில விட்டிருக்கு. அதுவும் எப்படியாப்பட்ட கம்ப்யூட்டர்! இந்தியாவின் உயர்ந்த மூளைகள் சேர்ந்து உருவாக்கிய 'நசிகேதன்'!

"அது உங்களை செலக்ட் பண்ணினா நீங்க யாருக்கு ஓட்டுப் போடுவீங்க?" கேட்டாள் ப்ரீதம்.

"இதெல்லாம் என்னம்மா தேர்தல். ஐ மீன் பரீட்சை. நானெல்லாம் நிஜமான தேர்தலில் நிஜமான வோட்டுப் போட்டவன்"

"நிஜமான ஓட்டா?"

"ஆமாம். அது அந்தக் காலம். ஜனங்கள் எல்லோரும் ஓட்டுச் சாவடிக்குப் போய் வரிசையில் நின்று, சீட்டு வாங்கி, முத்திரை குத்தி, பெட்டியில் போட்டு வருவோம்."

"எல்லோருமா?"

"ஆமாம். ஒவ்வொரு ஊரிலும் தேர்தல் – அதாவது பரீட்சை. அதில் ஒருவரைத் தேர்ந்தெடுப்போம். அவர்கள் கூடித் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்."

"எல்லோரும் ஓட்டுப் போட்டால் யார் ஜெயித்தவர் என்று எப்படித் தெரியும்?"

"எல்லாச் சீட்டையும் கொட்டி எண்ணுவார்கள். யாருக்கு அதிக சீட்டோ அவர்தான் ஜெயித்தவர்!"

"சரி, யாருக்கு ஓட்டுப் போடணும்னு உங்களுக்கு எப்படித் தாத்தா தெரியும்?"

"அவனவனுக்குப் புத்தி இல்லே?"

"அந்த லட்சணத்தைத்தான் சரித்திரத்தில் குறிச்சி வைச்சிருக்காங்களே! எத்தனை நிலையில்லாத அரசாங்கங்கள்! அதனால் ஐந்து வருஷத்துக்குள் எத்தனை தேர்தல்கள்! அதற்கு எவ்வளவு செலவு? செலவு மட்டுமா? எத்தனை நேரம் வெட்டியாய்ப் போயிற்று? பிரசாரத்தில், வோட்டுப் போடுகிற க்யூவில், அதை எண்ணுகிற இடத்தில், அதற்குப் பின் முடிவு சொல்கிற ஆபீசில்! காட்! ஹௌ மெனி மேன் அவர்ஸ்! அதையெல்லாம் உருப்படியாய்ப் பயன்படுத்தி யிருந்தால் நாம் இன்னும் பத்து வருஷத்துக்கு முன்னாடியே இந்த வல்லரசு ஸ்தானத்தை அடைந்திருப்போம்."

"இப்போது இருக்கிற சிஸ்டத்துக்கு அது ஒன்றும் குறைந்து போய்விடவில்லை."

"ஏன் இப்போது இருப்பதில் என்ன தப்பு?"

"ஆறு கோடி பேருக்கும் ஒர்த்தன் போய் ஓட்டுப் போடுகிறான். அதுவும் மிஷின் மூலம். பேஷ்!"

"அந்த ஒருவனை எத்தனை கவனமாகத் தேர்ந்தெடுக்கிறார்கள் அதை நினைத்துப் பாருங்கள். இந்தத் தேசத்து பிரஜை அத்தனை பேர் ஜாதகமும் அதன் கையில் இருக்கிறது எந்த ஊரில், எந்த வீட்டில் யார் இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள், எத்தனை சம்பளம், என்ன படிப்பு, எதில் ஈடுபாடு, எப்படி உடல்நிலை, மன ஆரோக்கியம் எல்லாம் அவர்களுக்கு அத்துப்படி. அதைக் கம்ப்யூட்டர் கையில் கொடுக்கிறார்கள். அது கவனமாய் ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறது. ரெப்ரசென்டேட்டிவ் சாம்ப்ளிங். அவன் ஓட்டு சரியாகத்தான் இருக்



கும். இத்தனை நாள் இருந்து வந்திருக்கிறது.''

''அத்தனை சாமர்த்தியமான மிஷின் நேரே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துவிடலாமே? எதற்கு ஒரு பிரஜையைத் தேர்ந்தெடுத்து அவன் மூலம் ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?''

''செய்துவிடலாம். வெகு சுலபம். ஆனால் நம் கொள்கை? நாம் ஜனநாயகத்தைத் தீவிரமாக நம்புகிறவர்கள். இந்தத் தேசத்துக்குக் கடுமையான சோதனைகள் ஏற்பட்ட காலத்தில்கூட நாம் ஜனநாயகத்தைக் கைவிட்டுவிடவில்லை. குடிமக்களுடைய கருத்திற்கு, உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்காமல், முழுக்க முழுக்க மிஷின் மூலம் ஒரு தேர்தல் எப்படி ஜனநாயகத்தில் சாத்தியம்?''

''**ப**ரீட்சைக்கமிஷனர் வந்திருக்கிறேன்.''

குழைவான குரல் கேட்டு நிமிர்ந்தார் தலைவர். எதிரே பணிவாய் நின்றுகொண்டிருந்த மனிதரைப் பார்த்தார். முகம் இறுகிற்று.

''எந்தக் காரணம் கொண்டும் என்னை அலுவலகத்தில் சந்திக்கக் கூடாது என்று சொல்லியிருந்தேனே?''

''என்னிடம் யாரும் அப்படிச் சொல்லவில்லை. தலைவர் அவசரமாகப் பார்க்க விரும்புவதாக மட்டும் செய்தி வந்தது.''

''இதை யெல்லாம் விரிவாகச் சொல்லிக் கொண்டிருப்பார்களா? தேர்தல் – சட்!– பரீட்சை வரப்போகிறது. இந்த நேரத்தில் நீங்கள் என்னைத் தனியாகச்சந்திப்பது தெரிந்தால் எதிர்க் கட்சிகள் கதை கட்டிவிடாதா? 'சுத்தமான ஜனநாயகவாதி' என்ற என் இமேஜ் என்ன ஆகும்?''


''.....''

''இத்தனை சிறிய விஷயத்தில் கூட புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள முடியாத நீங்கள், இத்தனை முக்கியமான பரீட்சையை எப்படி நடத்தப் போகிறீர்கள்?''

''தலைவர் அது பற்றிக் கவலைப்பட வேண்டாம். கவனமாக ஏற்பாடு செய்திருக்கிறேன்.''

''எங்கே?''

''தமிழ் நாட்டில். அங்கு தலைவரைப் பற்றிய உயர்ந்த அபிப்பிராயம் நிலவுவது போனமாதக் கணக்கெடுப்பின் மூலம் தெரிகிறது.''



''தமிழ்நாடு? குட்! தலைநகருக்கு வெகு தொலைவில். பிரச்னைகள் குறைந்த மாநிலம். வீடு, உணவு, கல்வி, மின்சாரம், போக்கு வரத்து வசதிகள் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது பரவாயில்லை. விலைவாசி தான் பிரச்னை. சமாளித்து விடலாம். எதற்கும் பரீட்சையின்போது விலைவாசி பற்றிய கேள்விகளைத் தவிர்த்து விடுங்கள்.''

''சரி.''

''யார்?''

''படித்தவர். நடுத்தர வர்க்கம். நகரத்து இளைஞர்.''

''படித்தவரா?''

''இந்த முறை அது அவசியமாகிறது. போனதரம் ஹரியானாவின் விவசாயி. அதற்கு முன்னால் பீகாரின் ஆதிவாசி. அப்படியே தொடர்ந்து கொண்டு இருந்தால் படித்தவர்களுக்கு இந்த சிஸ்டத்தில் நம் பிக்கை போய்விடும்.''

''அதுவும் சரிதான். ஆனால் ஜாக்கிரதை யாக இருங்கள்.''

''கவலைப்பட ஒன்றுமில்லை. ஒரு முறைக்கு இரண்டு முறை செக் செய்து கொண்டு விட்டேன். இன்று படித்தவர்களுக்கு என்று சொந்தக் கருத்துக்கள் இல்லை. அவர்களின் அபிப்பிராயங்களை மாஸ் மீடியாக்கள் உரு வாக்குகின்றன. இது தமிழ் நாட்டில் மிக அதிகம். இந்தியாவில் மிக அதிகம் விற்பனை யாகும் தினசரி, வாரப் பத்திரிகை எல்லாம் தமிழில் இருக்கின்றன. அவை தலைவரை ஆதரிக்கின்றன. இந்த இளைஞர் உங்கள் மீது அபிமானம் கொண்டவர்.''

''எதற்கும் 'நசிகேதன்' கேட்க வேண்டிய கேள்விகள் தயாரானதும் என்னிடம் காண் பித்து விடுங்கள். நான் இன்னும் ஐந்து வருடமாவது தேசத்துக்குப் பணி புரிய விரும் புகிறேன்.''

''உங்கள் விருப்பப்படியே ஆகட்டும்.''

''ஆனால் என்னை அலுவலகத்தில் சந்திக்க வேண்டாம்.''

பரீட்சைக்கு இரண்டு நாள் இருக்கும். வாயில் மணி கூப்பிட்டது. ரிஷிபோய்க் கதவைத் திறந்தான். கோதுமைப் பொன் நிறம். குறிப்பிடும்படியான உயரம். முகத்தில் சின்ன முறுவல். அது எந்த நேரமும் உறுமலாக மாறலாம் என்பது போலத் தோற்றம்.

''இது அஸ்ட்ரா காலனி?''

''யெஸ்.''

''503வது கட்டிடம், 27வது ப்ளாட்?''

''ஆமாம். யார் வேண்டும் உங்களுக்கு?''

''மிஸ்டர் ரிஷி.''

''நான்தான்.''

''வாழ்த்துக்கள்.'' வந்தவர் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

''நான் கௌடல்யா. பரீட்சைக் கமிஷன் அதிகாரி. நூறு கோடி இந்திய மக்களின் பிரதிநிதியாக, இந்தியாவின் ஏழாவது பொதுப் பரீட்சையில் தலைவரைத் தேர்ந் தெடுக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத் திருக்கிறது.''

''காட்! எனக்கா!'' ரிஷி திகைத்துப் போனான்.

''வாவ்!'' என்று கூறினாள் மித்ரா.

''உட்காருங்கள்.''

''மித்ரா, எனக்குத் தண்ணி கொண்டு வா. மார்பு படபடவென்று அடைக்கிறது.''

''ரிலாக்ஸ் மிஸ்டர் ரிஷி.'' என்று அவனை சோபாவில் அமர்த்தினார் அதிகாரி. சட்டைப் பித்தான்களைத் தளர்த்தினாள் மித்ரா. இரண்டு பேருக்கும்ஆரஞ்சு ஜூஸ் கொண்டு வந்தாள். இவன் காதருகே குனிந்து, ''மயக்கம் கியக்கம் போட்டுடாதீங்க. உடல் நிலை சரியில்லாத ஆள்னு வேற யாரை யாவது செலக்ட் பண்ணிடப் போறாங்க'' என்று பல்லைக் கடித்தாள்.

''மிஸ்டர் ரிஷி, நீங்க கொஞ்சம் எங்க கூட ஒத்துழைக்கணும். இரண்டு நாளைக்கு எங்கேயும் வெளியே போகக் கூடாது. மேடம், நீங்க போன் பண்ணி ஆபீசுக்கு நியூஸ் சொல்லிடுங்க. நியூஸ் பேப்பர், பத்திரிகை யெல்லாம் இரண்டு நாளைக்குப் போட வேண்டாம்னு சொல்லி யிருக்கேன். இப்போ டெலிவிஷனை சீல் பண்ணிடப் போறேன். டெலிபோனைக் கட் பண்ணிடு வாங்க. மேடம், வெளியே போக அவசியக் காரணம் 'என்றால் மட்டும் போங்க. அவ சியம் இருந்தால் மட்டும் பேசுங்க. நீங்க வெளியே போகும்போது உங்களை எங்க ஆளுங்க பின்தொடர்வாங்க. பயப்பட வேண்டாம். ஒரு சின்ன 'பக்' (Bug) கொடுக்கிறோம். உங்க கம்மலிலேயோ, மோதிரத்திலேயோ வைச்சுக்குங்க. இந்த இரண்டு நாளும் நான் உங்க வீட்டிலேயே தங்கப் போறேன். எனக்காகும் செலவைப் பத்திக் கவலைப்படாதீங்க. அரசாங்கம் கொடுத்திடும். அப்புறம் உங்க குழந்தை எங்கே?''

''தூங்கறு.''


''நல்லதாப் போச்சு. எழுந்து என்னை யாருன்னு கேட்டா, மாமா, பெரியப்பா இப்படி ஏதாவது சொல்லிச் சமாளிங்க.''

''சார், இந்தக் கெடுபிடி யெல்லாம் அவ சியம்தானா?''

''கெடுபிடி இல்லை மிஸ்டர் ரிஷி. ஒரு முன்னெச்சரிக்கை. உங்களுடையது எத்தனை பெரிய பொறுப்பு!''

காதலி: முதன் முதல் நாம் சந்தித்துக்கொள் கிறோம். ஏதாவது இனிப்பான விஷயமாகப் பேசுங்களேன்.
காதலன்: எனக்குச் சர்க்கரை வியாதி.
-எஸ். விஜயா சீனிவாசன்





புலரும் இன்றைய
என் பொழுது
மகிழ்வாய்
மலருமே
பொங்கும்
மகிழ்வைக் கூட்டுமே
மஃபத்லால்
துணிகள்
மட்டுமே
மஃபத்லால் துணிமணிகள்
மென்மையானவை, உடலுக்கு இனிய
உணர்வைத் தருபவை, பாலியெஸ்டர்
பாலியெஸ்டர் பிளெண்ட்ஸ், மற்றும்
காட்டன் துணிகளில் நித்தம்
நித்தம் புத்தம் புதிய படைப்புகள்
அலாதியின் வண்ணங்கள்,
டிசைன்கள், மற்றும் வடிவமைப்புகள்
அனைத்தும் காலமும் பொருந்தும்
கற்பொளியூட்டி உங்கள் அழகுக்கு
அழகூட்டுகின்றன
மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்
MF-123 TAM



ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்!
Yendelux
coconut oil
என்டிலக்ஸ்
தேங்காய் எண்ணை
15 ... டின்களிலும் 1 லிட்டர் 500
... பாலிதீன் பாட்டில்களிலும் கிடைக்கிறது
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
போன் : ஆபீஸ் : 2244. 4484. மில்ஸ் : 2266. 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
VIRUDHUNAGAR. Phone : 3107, 3745.

''எனக்கு அந்தப்பொறுப்பு வேண்டாம்!''

''அது உங்கள் விருப்பம் இல்லை ரிஷி. ஒரு ஜனநாயக நாட்டில் ஒவ்வொரு குடி மகனுக்கும் சில பொறுப்புக்கள் உண்டு. உங் களைப் போன்ற படித்தவர்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை.''

''நசிகேதன் தப்பே பண்ணுறதா?''

பொறுமை இழந்த மித்ரா நடுவில் குறுக்கிட்டாள்.

''அவர் சொல்றதைக் காதில் போட்டுக் காதீங்க சார். அவர் நர்வஸ் ஆகியிருக்கிறார். மற்றபடி விவரம் தெரிந்தவர்தான் புஸ்தகம் எல்லாம் படிக்கிறவர்தான்.''

''தெரியும் மேடம்'' அதிகாரி புன்னகைத் தார்.

''எனக்கென்னவோ பயமாக இருக்கு மித்ரா.''

''என்ன பயம்?''

''ஏதாவது தவறு நேர்ந்து விட்டால்? என் தேர்வு மூலம் யாரையாவது பொறுப் பில்லாத தலைவர் பரீட்சையில் ஜெயித்து விட்டால்? தேசமே குட்டிச்சுவராகப் போகாதா? அப்போது எல்லோரும் இவ னால்தான் என்று திட்ட மாட்டார்களா?''

''நாளைக்குத் தேசம் முழுக்க நீங்கள் பேசப்படுவீர்கள். படம் பேப்பரில் வரும். பத்திரிகைக்காரர்கள் பேட்டி எடுப்பார்கள். வீடியோ படம் தயாரிக்கப்படும். உங்களைக் கூட்டங்களில் பேசக் கூப்பிடுவார்கள். ஒரு ராத்ரியில் திடீர் புகழ்.''

''அதற்கு என்ன?''

''அதை எப்படிப் பயன்படுத்திக்கொள்ள லாம் என்று திட்டமிடுங்கள். இந்தப் புகழை நீங்கள் ஏதாவது காசு பண்ண முடியுமா? ஆபீஸில் பிரமோஷன் கிடைக்குமா? கவர்ன்மெண்டில் நமக்கு ஒரு ஃப்ளாட் இல வசமாகத் தருவார்களா? இவற்றையெல் லாம் எப்படிச் சாதிக்கலாம் என்று யோசி யுங்கள். இதையெல்லாம் இந்த இரண்டு வருஷத்துக்குள் செய்து கொண்டால் உண்டு. அப்புறம் அடுத்த பரீட்சை வந்து விடும்.''

'':யோசிப்பதற்கு இதை விடப் பெரிய விஷயங்கள் இருக்கின்றன மித்ரா.''

''என்ன?''

''மனசாட்சி.''

''எக்கேடும் கெட்டுப் போங்கள். நான் சொல்வதைச் சொல்லி விட்டேன். நமக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறது. ஞாபகம் இருக்கட்டும்.''


''எழுந்திருங்க.பரீட்சைக்கு நேரமாச்சு'' மித்ரா உலுக்கினாள். பரீட்சைக் கமிஷன் அதிகாரி—காலை வணக்கம் சொன்னான். கார் கதவைத் திறந்து விட்டார்கள். கார் விரைந்தது. எதிரே பொட்டு டிராபிக் இல்லை.

''என்ன ஆச்சு?''

''என்ன?''

ரிஷி வெறிச்சிட்ட தெருவைச் சுட்டிக் காண்பித்தான்.

''இதுவா? இது முன் தீர்மானிக்கப்பட்ட பாதை. உங்கள் பத்திரம் கருதி வேறு டிராபிக் அனுமதிக்கப்படவில்லை.''



ஆசிரியர்: குழந்தையும் தெய்வமும் ஒண் ணுன்னு ஏன் சொல்றீங்க?
மாணவன்: இரண்டையும் ஈஸியா ஏமாத்திட லாம்!
-என். ரவீன்

''பாதசாரிகள் கூட?''

''ஆமாம். தவிரவும் இது புல்லட் புரூப் கார். உங்கள் மீது ஒரு குண்டுசி பட முடியாது.''

கார் நின்ற இடத்தில் இரண்டு வெள்ளை உடுப்புக்காரர்கள் வரவேற்றார்கள். ஒரு ஏர் கண்டிஷன் மண்டபத்துக்குள் கூட்டிப் போனார்கள். ஆஸ்பத்திரி மாதிரி இருந்தது.

''எங்களுடைய நல்வாழ்த்துக்கள்'' என்று சிரித்துக் கொண்டே உடலில் சில எலக்ட் ரோட்களைப் பொருத்தினார்கள்.

''என்னது இது?''

''பொய் சொன்னால் கண்டு பிடிக்க லை டிடக்டர்.''

''காட்!''

''பதற்றப்பட வேண்டாம். இதோ உங் களுக்கு எதிரில் தெரியும் திரையில் நசி கேதனின் கேள்விகள் எழுத்து வடிவில் தோன் றும். ஒலி வடிவமாகவும் உங்களுக்குக் கேட் கும்.''

''ஓகோ!''

''ஆனால் பயப்பட வேண்டாம். கேள்விகள் சுலபமாக இருக்கும். உதாரணமாக 'உங்கள் தெருவில் ஒழுங்காகக் குப்பை வாருகிறார் களா?''

''அப்படியா?''

''பரீட்சைக்கு நேரமாச்சு. ஆரம்பிக்க லாமா?''

''ஓ! அதற்கு முன்னால் எனக்கு ஒரு தம்ளர் ஆரஞ்சு ஜூஸ் கிடைக்குமா?''

''தாராளமாக.''

பச்சை வண்ணத்தில் முதல் கேள்வி திரை யில் தோன்றியது.

''இந்தியாவின் பெருமை (அ) அதன் மக்கள்? (ஆ) தலைவர்? (இ) ஜனநாயகம்?

ரிஷி திரையை ஒரு தரம் கூர்ந்து பார்த் தான். பின் விருட்டென்று கையில் இருந்த தம்ளரை அதன் மீது வீசி எறிந்தான். 'ணிங்' என்ற சங்கீதத்துடன் கண்ணாடிகள் சிதறின. பரீட்சை நின்றது. பரபரவென்று கதவு திறந்தது.

''என்ன?''

''இந்தியாவின் பெருமை—மனச்சாட்சி.''

''ஐம் ஸாரி. அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது!'' என்றார் டாக்டர்.

வண்ணம் பூசுவதில் உள்ள பிரச்சினைகளிலிருந்து விடுபடும் முழு விவரங்களை அறிந்து கொள்ள வாரீர்.

ஒரு நல்ல பெயிண்ட்டை வாங்குவது முதல் கட்டம் மட்டுமே. பெயிண்ட்டை எப்படி உபயோகிப்பது, வண்ணம் பூசவேண்டிய பரப்பும் கால நிலையும் எவ்வாறு இருக்கவேண்டும் என்ற விஷயங்களில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இவற்றின் காரணமாகவே வண்ணம் பொடிந்து கீறல் விழுதல், பொங்குதல், பொரிதல் போன்ற பொதுவான குறைபாடுகள் ஏற்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண "All you wanted to know about Painting" என்ற நெரோலாக் பெயிண்ட்ஸ் இலவச விளக்கப் புத்தகத்திற்கு இன்றே எழுதவும்.

கீழே தரப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி உடனே தபாலில் அனுப்பி வைக்கவும்.

தயவு செய்து நெரோலாக் பெயிண்ட்ஸ் விளக்கப் புத்தகம் ஆங்கிலப் பிரதி ஒன்று அனுப்பவும்.

பெயர் ____________________

முகவரி ____________________

____________________ பின்கோட் ________

குட்லாஸ் நெரோலாக் பெயிண்ட்ஸ் லிமிடெட்
தகவல் டெஸ்க்,
த.பெ. எண் 16322, பம்பாய் 400013.

தயவு செய்து 50 காசு தபால் முத்திரையும் வைத்து அனுப்பவும்.

நெரோலாக் பெயிண்ட்ஸ்

இல்லங்களுக்கு எழிலூட்டும் வண்ணங்கள்!



மங்களம் மாமி மிக நன்ருகச் சமைப்பாள்.

எத்தனையோ பேரை நான் வேலைக்கு வைத்துப் பார்த்தாகி விட்டது. அவரும் குழந்தைகளும் நாக்கைச் சப்பிட்டுக் கொண்டு சாப்பிடுவது இப்போதுதான். பண்டங்களைக் கொஞ்சமும் வீணுக்குவதில்லை. சமையலும் சுத்தமாக இருக்கும். பெரியவன் இப்போதெல்லாம் வீட்டில் வேளா வேளைக்குச் சாப்பிட்டுவிட்டுத்தான் ஊர் சுற்றுகிறன்.

மாமியை விட்டுப் பிரிய எனக்கு மனமில்லை. ஆனல் தொடர்ந்து வைத்துக் கொள்ள எனக்குப் பயமாக இருந்தது.

காரணம் மாமியின் வயது வந்த பெண். வயது பதினெட்டு இருக்கும். மதமத வென்று வளர்ந்திருந்தாள். வயதுக்கு வந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டதென மாமி சொன்னுள். வயதுக்கேற்ற புத்தி வளர்த்தி இல்லை. தாவணியை இழுத்து விட்டுக் கொள்ளக் கூடத் தெரியாமல் விழித்துக் கொண்டு நிற்பாள்.

'பட்டு' என்றுமாமி அழகாகத்தான் பெயர் வைத்திருந்தாள். நிறமும் வெண் பட்டு தான். முகத்தில் தெரிந்த அந்தப் பிரமையை அகற்றிவிட்டால் பட்டு அழகான பெண் தான்.

அவளால் எனக்குத் தொந்தரவு இல்லை. ஆனல் என் மனம் அமைதியடைய மறுத்தது.

எனக்கு இருப்பது மூன்று பிள்ளைகள். ஒருவனுக்கும் கல்யாணமாகவில்லை. எல்லோரும் வேலை பார்க்கிருர்கள். நான் என்ன கண்கொத்திப் பாம்பாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

அந்தப் பெண்ணை இவர்கள் எல்லோரும் வேலை வைத்துக் கூப்பிடுகிருர்கள். மங்கள மாமியும் தன் பெண்ணைகையில் காப்பியைக் கொடுத்து மாடிக்கு அனுப்புகிருள். அப்பொழுதெல்லாம் — ஒவ்வொரு முறையும் நானும் பின்னுல் போய் நிற்க முடியுமா?

என் வீட்டுக்காரர் மட்டும் முற்றும் துறந்தவரா என்ன? அவர் கண்கள் பட்டுவின் மேல் மேய்வதைப் பல முறை என்ருல் உணர முடிந்தது.

வேறு என்ன செய்வது? மாமியிடம் கண்டிப்பாகச் சொன்னேன், பட்டு இனிமேல் வீட்டுக்கு வரக் கூடாது என்று.

''அது அப்பாவி... அதால் யாருக்கும் எந்த இம்சையும் இருக்காது.. அங்கே யாரும் துணை இல்லேம்மா... வயது வந்த பெண்ணைத் தனியாக...'' மங்களம் தயங்குகிருள்.

பட்டுவைப் பற்றி மங்களம் என்னிடம் சொல்லியிருக்கிருள். பிறக்கும்போது நல்ல படியாகத்தான் இருந்தாளாம். ஏழாவது வயது வரை நன்ருகப் படித்தும் வந்தாளாம். பக்கத்து வீட்டுப் பெண் ஒருத்தி பட்டுவுடன் ஒன்ருகப் பழகினவள்.. வயதில் மூத்தவள். வீட்டில் ஏதோ கோபத்தில் மண்ணெண்ணெயை மேலே ஊற்றிக் கொண்டு பற்றி எரிந்து போனதைப் பார்த்த பிரமை... புத்தி பேதலித்து விட்டதாம். யார் யார்

நான் எங்கே? அவள் எங்கே?



பேச்சையோ கேட்டு வாங்கிக் கொடுத்த மருந்துகள் பயன்படவில்லை. இப்போது அவள் குணப்படுத்த முடியாத கேஸ். 'மெண்டல்' ஆஸ்பத்திரியிலிருந்து கூட 'டிஸ்சார்ஜ்' செய்து விட்டார்கள். இனி வேறு மார்க்கம் ஏதும் இல்லை.

மங்களம் யோசித்துச் சொல்வதாகப் போனாள்.

மறுநாள் அவள் வரமாட்டாள் என எதிர்பார்த்தேன். ஆனால் வந்தாள் – பட்டுவை வீட்டில் விட்டுவிட்டு–பாவம்! நான் செய்வது சரியில்லை என்று எனக்குத் தோன்றத்தான் செய்தது.

இந்தப் பசங்கள் சும்மா இருக்கவில்லை. ''பட்டு எங்கே?'' என்று மாமியை விசாரித்திருக்கிறார்கள். மாமி என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. அந்த மட்டும் நல்லவள் தான்.

ஏதோ பேச்சு வாக்கில் மாமி சொன்னாள்: ''நான் புறப்படுவதற்குள் அவளைக் குளிக்கச் சொல்லி ஏதோ ஆகாரம் பண்ணிக் கொடுத்துவிட்டு வருகிறேன். ஒவ்வொரு நாளும் அவளை உள்ளே வைத்து வெளியே பூட்டிக் கொண்டு வரும்போது மனம் ரொம்பவும் சஞ்சலப்படுகிறது'' என்று வருத்தப்பட்டாள்.

அதற்கு நான் என்ன செய்யட்டும்?

பகல் மூன்று மணி இருக்கும்.

மாமி பகல் டிபனுக்குக் கோதுமை அல்வா செய்து முடித்து விட்டுத் தவலை அடைக்கு அரைத்துக் கொண்டிருந்தாள்.

தடதடவென்று யாரோ கதவைத் தட்டினார்கள்.

மாமி இருந்த வீட்டில் தீப்பிடித்துக் கொண்டதாம். உடனே கூட்டி வரச் சொன்னார்களாம்.

மங்களம் மாமி பதறி அடித்துக்கொண்டு ஓடினாள். நான் காரை எடுத்துக்கொண்டு போகச் சொல்லியும் கேட்கவில்லை.

அடுத்த பத்தாவது நிமிஷம் நான் காரில் புறப்பட்டு இரண்டு தெருகூடத் தாண்டியிருக்க மாட்டேன். ஒரே கூட்டம். டிரைவர் இறங்கிப் போய்ப் பார்த்துவிட்டு வந்தான்.

''ரொம்பக் கொடுமை அம்மா? நம்ம வீட்டு சமையற்கார அம்மா தான் லாரிமோதி சக்கரம் ஏறிப் போயிட்டாங்க அம்மா!''

என் உணர்வு நிலை ஸ்தம்பித்தது. அடப்பாவமே! அங்கே பெண் இங்கே அம்மாவா?

நான் போய்ச் சேருவதற்குள் அங்கே தீயை அணைத்து விட்டிருந்தார்கள். நல்ல வேளை... யாரோ புண்ணியவான் – பக்கத்து வீட்டுப் பையனும் – வீட்டுப் பூட்டை உடைத்துப் பட்டுவைக் காப்பாற்றியிருக்கிறான். ஏதோ உத்தரம் விழுந்து மண்டையில் நல்ல அடி. ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தார்கள்.

என் வீட்டுக்காரரும், பையன்களும் வந்தார்கள். மங்களத்துக்குச் செய்ய வேண்டிய கடைசிக் காரியங்கள் முடிந்தன.

பட்டுவை ஸ்பெஷல் வார்டில் வைத்துப் பார்த்தோம். பணத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை. எல்லாவற்றிற்கும் நான்தான் காரணம் என்று எனக்குப் பட்டது.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு பட்டு எழுந்து உட்கார்ந்தாள். அவள் முகத்தில் நான் பார்த்தறியாத தெளிவு இருந்தது. அவள் அம்மாவைப் பற்றிச் சொன்னேன். புரிந்து 'கொண்டாள்.

அவள் முன் நிற்க எனக்குத் தயக்கம். பேச எனக்குக் கூச்சம். ''அடிப் பாவி! நீதானே எங்களைப் பிரித்தாய்!'' என்று கேட்பது போலத் தோன்றியது.

''இனிமேல் என்ன செய்வது?'' என்று கேட்டார் அவர்.

''தனியாக என்ன செய்வாள் பாவம்... நம் வீட்டோடு வைத்துக் கொள்ள வேண்டியதுதான்!'' என்று தாமே பதிலும் கூறிக் கொண்டார்.

''வீட்டோடா?...''என் மனம் படபடத்தது. இப்போது அவள் பைத்தியம் இல்லை. சொல்லப் போனால் நல்ல அழகி கூடத்தான்.

தெலுங்கு வள்ளுவர்!

நினைவிருக்கிறதா? ஜனாதிபதி ஜெயில் சிங் திருப்பதிக்கு வந்திருந்தபோது தனக்கு ஜோசியம் சொன்ன ராமலிங்க சித்தாந்தியைச் சந்தித்து நன்றி கூறினார்!

ராஜமகேந்திரபுரத்தினைச் சேர்ந்த அந்த ஜோசியர் இப்போது தமது பிறந்த ஊரில் 'நன்னைய பட்டாச்சார்யலு' என்ற அறிஞருக்குச் சிலைவைக்க ஏற்பாடு செய்து வருகிறார்.

பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த நன்னைய பட்டாச்சார்யலு தெலுங்கு மக்களுக்கு வள்ளுவரைப் போல. தெலுங்கு மொழி எழுத்துக்களை இவர் தான் கண்டு பிடித்தாராம்.

தேனாம்பேட்டை சிற்பி மணி நாகப்பாவின் நிறுவனத்தில் இந்தச் சிலை வெண்கலத்தில் தயாராகும். இதன் மதிப்பு ரூபாய் நாற்பதாயிரம். ஜனாதிபதி ஜெயில் சிங் திறந்து வைக்கப் போகிறார்!

-ரமேஷ்



பணம் ஒன்று இல்லையே தவிர என் வீட்டிற்கு மருமகளாய் வரத் தகுதி உடையவள்தான். பிராயச்சித்தம் போலும் இருக்கும்.

பையன்களுடன் பேசிப் பார்த்தேன். பெரியவன் சட்டென்று சொன்னான்: "உங்களுக்குச் சம்மதம் என்றால் எனக்கும் சம்மதம்தான்!" என்று திடமாகச் சொன்னான்.

நான் தயங்கினேன். இட்டத்தட்ட ஆயிரத்தைந்நூறு ரூபாய் வரை சம்பளம் வாங்கும் அவனுக்குப் பட்டு தகுதிதானா? அவனே அதைப் பற்றிக் கவலைப்படாதபோது எனக்கு மட்டும் என்ன கவலை?

பட்டுவை வீட்டுக்கு அழைத்துப்போகும் நாள். ஆஸ்பத்திரிக்குச் சேர வேண்டிய பணத்தை யெல்லாம் கொடுத்து விட்டோம்.

அவளிடம் ஒன்றும் நான் இதுவரை சொல்லவில்லை. என்னையும் அவரையும் நிற்க வைத்துப் பட்டு நமஸ்காரம் செய்தாள்.

"போறும்... போறும்... நாளைக்கு சங்கரும் நீயும் மாலையும் கழுத்துமாக நமஸ்காரம் செய்யுங்கள்!" என்றேன்.

அவள் திடுக்கிட்டு என்னைப் பார்த்தாள்.

"மாமி... இந்தச் சமையல்காரி பெண் அத்தனைக்குக் கொடுத்து வைக்கவில்லை. அன்னிக்குக் கதவை உடைத்து என்னைக் காப்பாற்றி இருக்கா விட்டால் இந்த உடம்பே பஸ்மமாகிப் போயிருக்கும். எனக்காக உயிரையே கொடுக்க வந்தவருக்கு நான் என்ன மாமி தர முடியும்? என்னைத் தவிர?"

அறைக்கு வெளியே அந்த வாலிபன் — ஏதோ ஒரு ஹோட்டலில் சர்வராக இருக்கிறானும் — அவன் காத்திருந்தான்!

பட்டு எவ்வளவோ உயர்ந்துவிட்டாள். எங்கள் பணத்தை, பெருந்தன்மையைச் செல்லாக்காசாக்கிவிட்டாள். "கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா?" என்று கேட்காமல் சொல்லி விட்டாள்.

அவர்கள் இருவரும் புறப்பட்டுப் போனார்கள். கண்கள் பனிக்க நாங்கள் விடை கொடுத்தோம்.

என்னுடைய சுயநலத்துக்காகத் தாயையும் மகளையும் பிரித்தேன். செய்த பாவத்துக்காகப் பிராயச் சித்தம் செய்ய முன்வந்து கூடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

என் மனம் சாகுமளவுக்கும் சாட்டையடி கொடுத்துக் கொண்டே இருக்கும்.

சிந்தனைக்குச் சில

பொதுவாக வாழ்க்கையில் ஒழுக்கம் ஏற்பட்டு விட்டால், அப்புறம் அதன் ஒவ்வொரு துறையிலுமே ஒழுக்கத்தினால் உண்டாகிற அழகும் ஏற்பட்டு விடுகிறது. இதனால்தான் பழங்காலச் சிற்பங்கள், சித்திரங்கள் எழுத்து உட்பட எல்லாம் ஒழுங்காக இருக்கின்றன.

ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

உணவு உயிரை வளர்க்கும்; உணர்வு உயிரை வளர்க்கும். ஆன்றோர்கள் கூறும் வசனங்களால் உணர்வு உண்டாகும். ஒழுக்கமுடைய சான்றோர்கள் உரைக்கும் ஒவ்வொரு மொழியும் அமுதமாகும்.

திருமுருக கிருபானந்த வாரியார்

தக்காளிச் சாற்றிலே சர்க்கரையைப் போட்டால் ரத்தச் சிவப்பாக மாறுகிறது. சர்க்கரைக்குப் பதிலாக உப்பைப் போட்டால் வெளுத்துப் போகிறது. இனிமையான பேச்சு மேலும் உன்னை அழகுள்ளவனாக்குகிறது. கடுமை உன் முகத்தைச் சோகையாக்குகிறது.

—கவியரசு கண்ணதாசன்

கெட்ட காரியத்தைச் செய்ய அஞ்சு. வேறு எதற்கும் நீ அஞ்ச வேண்டாம்.

—பிராங்ளின்

ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு இதம் அளிக்கும் ஒரு நல்ல வார்த்தை மேலானது.

-புத்தர்


பல தன்மைகள் வாய்ந்த நண்பர்கள் தொடர்பை விட, பொறுக்கி எடுக்கப் பட்ட சில புத்தகங்களின் உறவு நமக்கு அதிக நன்மையை அளிக்கும்.

—கோல்டன்

தொகுத்தளித்தவர்:
வானதி திருநாவுக்கரசு




கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGANT


ஒளிமயமான
தீபாவளியை
எழில் மயமாக்குவது
கோ-ஆப்டெக்ஸ்
சிறப்புத் தள்ளுபடி
20%
15-11-82 வரை
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

இதுவரை தெரிந்தது...

நிறையப் படிக்க வேண்டும் என்று ஆசைப் படும் கல்லூரி மாணவி அகிலா... சின்ன வயதில் தன் கணவன் மனத்துக்குள் நேசித்த பெண்ணைச் சந்திக்க உதவினாள் என்று மகளை வெறுக்கும் அகிலாவின் அம்மா.. அக்கா இரண்டு பேரும் கல்யாணம் பண்ணிக் கொண்டு போய்விட, அண்ணனுக்கள் மணி, ராம்ஜி சம்பாதிக்க, மீதமிருந்த அகிலாவே அம்மாவின் முழு வெறுப்புக்கும் வடிகாலாகிறாள். அப்பாவுக்கும் உடம்பு சரியில்லாமல் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்.

தம் மனத்துக்கு இதமாக இருந்த கல்யாணிக்குத் தம் மறைவைத் தெரிவிக்க வேண்டும் என்று அகிலாவிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டு இறந்துவிடுகிறார் அப்பா. வீட்டில் பெண்களும், மாப்பிள்ளைகளும், குழந்தைகளும் என ஜே ஜே என்ற கூட்டம். காரியத்துக்காகத்தந்தி கிடைத்து ஐந்து வயது மகனுடன் வந்த கல்யாணி விரட்டப்படுகிறாள்.

ஏற்கனவே அகிலாவின் மேலிருந்த வெறுப்பில், வீட்டு வேலைக்கு எனும் சாக்குடன் படிப்புக்கு முற்றுப்புள்ளியும் வைக்கப்படுகிறது. கூடிபுள்ள அந்தனை கூட்டத்துக்கும் வேலைக்காரி யாகி, மணியிடம் செலவுக்கு வாங்கும் பணத் துக்காகச் சிடு சிடுப்பை ஏற்றுக் கொண்டு... அகிலா நாட்களை ஓட்டுகிறாள். ராம்ஜியோ தான் காதலித்தவளை மதம்மாறி கல்யாணம் பண்ணிக்கொண்டு போய் விடுகிறான்.

அப்பாவின் சாவுக்கு முன்னால் நிச்சயமான மணியின் கல்யாணம் தடைப்படக் கூடாது என முனைகிறார் பெரியப்பா. சிரிப்பைக் காண முடியாமல், சிடுசிடுவென்றே இருந்து கொண்டிருந்த மணியின் முகத்தில் இப்போதுதான் புன்முறுவல் தெரிகிறது. பெரியப்பா முனையவில்லை யென்றால் தன் கல்யாணம் பின்னையார் கல்யாணம்தான் என்று முணுமுணுக்கும் மணி அதற்காக வரதட்சிணைப் பணத்தில் ஒரு கணிசமான தொகையையும் அவருக்கு விட்டுக் கொடுக்கிறான்.

10

சிடத்தையும், சமையலறையையும் விட்டால் இருக்கிற ஒரே இடமான அகிலாவுக்கு மிகவும் பிடித்தமான அந்த முன் அறையை அம்மா மணிக்கும் அவன் மனைவிக்கும் ஒழித்துக் கொடுத்துவிடச் சொன்னாள். அந்தஅறையை விட்டுத்தன்பெட்டியையும், புஸ்தகங்களையும் ஒரே ஆளால் தூக்க முடிந்த அந்தச் சின்ன மாம்பலகை மேஜையையும் கூடத்து மூலையில் கொண்டு வந்து போட்டுக் கொண்டாள். தன் தலையணையையும், பாயையும் கூடச் சுருட்டிக்கொண்டு வந்து அந்த மேஜையின் மீது வைத்து, அறையை முழுவதுமாக ஒழித்துக் கொடுத்த போது அகிலாவுக்கு நெஞ்சை அடைத்தது.

அவள் அந்த அறையைத் தன் அரண்மனையாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தாள். ராம்ஜி இருந்தபோது எல்லாரையும் போல் அந்த அறையை முன் ரூம் என்று குறிப்பிடாமல் வசந்த மாளிகை என்றே குறிப்பிடுவான்.



மண்ணில் தெரியுமோ வானம்?

''ஏண்டி அகிலா, என் சீப்பைக் காணோம். உன்வசந்த மாளிகைக்குள் போயிருக்கான்னு கொஞ்சம் பாரேன்?'' என்பான்.

''இன்னிக்கு ஒரு நாள் மட்டும் உன் வசந்த மாளிகையின் ஒரு ஓர மாத் தூங்கறேன். கூடத்துல சரோஜாவின் பசங்க தூங்கவிட மாட்டேன்றதுகள்...'' என்று அனுமதி கேட்பான்.

ஒரு நாளின் முக்கால்வாசி நேரமும் அவள் அதன்



உள்ளேயிருந்த காரணத்தினால் அது அவள் அறையாகக் கருதப்பட்டது. ராம்ஜி சொன்ன மாதிரி அவள் அதைத் தனது வசந்த மாளிகையாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தாள். அந்த அறையில் அவளுக்கு நிறைய வசதிகள் இருந்தன. ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்து மணிக் கணக்கில் வானத்தைப் பார்க்க முடிந்தது. மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் கதவை ஒருக்களித்து வைத்துவிட்டு விளக்கைப் போட்டுக் கொண்டு எத்தனை நேரமானாலும் படிக்க முடிந்தது. விளக்கை அணைத்த பின் சுவரில் சரிந்து உட்கார்ந்து இருட்டை வெறித்தபடி எல்லாவற்றையும் யோசிக்க முடிந்தது. அழ வேண்டும் என்று தோன்றின போதெல்லாம் யாருக்கும் தெரியாமல் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுகிற வசதி இருந்தது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக வீட்டிலிருந்த மற்றவர்களுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பைத் தற்காலிகமாகத் துண்டித்து அவள் தேடின தனிமையைத் தருவதாக இருந்தது.

அந்த அறையை ஒழித்து சியாமளாவுக்கு—மணியின் மனைவிக்குக் கொடுப்பதன் மூலம் அத்தனை சௌகர்யங்களையும் அவள் இழக்க வேண்டி நேர்ந்தது. மற்ற எதற்கும் வருத்தப்படவில்லை அவள். இனி ராத்திரி நேரங்களில் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் அழக் கூட முடியாதே என்பதுதான் அதிகம் கஷ்டப்படுத்திற்று.

ஆனாலும் வேறு வழியில்லை. அறையை ஒழித்துக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். முடியாது என்று சொல்ல முடியாது. இனிமேலும் மணி கூடத்து அலமாரியில் துணிகளை அடைத்து, நினைத்த இடத்தில் படுத்துத் தூங்கின மாதிரி தூங்க முடியாது. அவர்களுக்கென்று தனி அறை கொடுத்துத்தான் ஆக வேண்டும்...

கல்யாணமாகி, கல்யாணத்தன்று க்ரஹப் பிரவேசம் என்று சம்பிரதாயத்துக்காக வீட்டில் வந்து, பாலும் பழமும் சாப்பிட்டு விட்டுப் போன சியாமளா அதன் பின் நல்ல நாள் பார்த்து ஒரு வாரத்துக்குப் பின்னால்தான் நிரந்தரமாகத் தங்குவதற்காக வந்தாள். அதற்குள் சரோஜா தன் குழந்தைகளுடன் ஊருக்குக் கிளம்பிப் போய் விட்டாள். ஏழாம் மாதம் சீமந்தம் முடிந்து நல்ல நாள் பார்த்து அனுப்புவதாகச் சொல்லி வனஜாவையும் அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். அதனால் சியாமளா வந்தபோது எல்லா அமர்க்களமும் அடங்கி வீடு நிசப்தமாகி விட்டது.

மணியையும் அவளையும் வாசலிலேயே நிற்க வைத்து அம்மா அகிலாவை ஆரத்தி

சுற்றிக் கொட்டச் சொன்னான். வலது கால் வைத்து உள்ளே வரச் சொன்னான். உள்ளே வந்ததும் அவள் அம்மாவுக்கு நமஸ்காரம் பண்ணினாள்.

''தீர்க்காயுசா, தீர்க்க சுமங்கலியா இரும்மா. அடுத்த வருஷமே பேரனைப் பெத்துக் கொடு'' என்ற அம்மா கூடவே, ''இவனை இப்படி மாலையும் கழுத்துமாய்ப் பார்க்க அவருக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை'' என்று கண் கலங்க ஆரம்பித்ததும் முன் அறைக்குப் போகத் திரும்பின மணி சட்டென்று நின்றான்.

''ஏம்மா, அவ உள்ளே வந்ததும் வராததுமாக இந்த அழுகை அவசியமா...?'' என்று சற்று அழுத்தமான குரலில் அதட்டினதும், முதலில் அந்த அதட்டலைச் சற்றும் எதிர்பார்க்காத அம்மா அதிர்ந்துதான் போனாள். பின்னர் அடுத்த விநாடியே தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

''உங்கள் கடையிலே வாங்கின பனியன் நாளுக்கு நாள் நீண்டுகிட்டே போகுதே?''
''நான் விற்கும்போதே சொன்னேனே, நம்ப கடைப் பனியன் நீண்டு உழைக்கும்னு. இப்பவாவது நம்பறீங்களா?''
-கிருஷ்ண சங்கர்



''இல்லேடா... என்னையும் மீறி அவர் ஞாபகம் வந்துடுத்து....''

''எங்களுக்கு மட்டும் அவர் ஞாபகம் இல்லையா என்ன? ஆனாலும் அதைச் சொல்ல காலம், நேரம் இல்லையா?''

அம்மா சிறிது தயங்கித் தழைந்துபோன குரலில்,

''தெரியாமல் சொல்லிவிட்டேன், தப்புத்தான்டா'' என்றாள்.

அதைக் கேட்டு மணியின் முகம் இன்னமும் கோபமாயிற்று. தாங்க முடியாத ஒரு எரிச்சலுடன் சொன்னான் அவன்.

''சரி சரி. இதை நான் சொன்னேன்னு வேற அழ ஆரம்பிச்சுடாதே. நீ உள்ளே போ சியாமளி. உள்ளே கூப்பிடேன் அகிலா, எதுக்கு மரம் மாதிரி நின்னுண்டிருக்கே?''

பழைய மணிதானா இவன்? என்ன வாயிற்று இவனுக்கு? எதற்காக வந்ததும் வராததுமாக இப்படி எரிந்து விழுகிறான்? என்பதை ஊகிக்க முயன்றவளாக நின்றிருந்த அகிலா அவனுடைய அந்த அதட்டலுக்கு இயந்திரமாகப் பணிந்து போனாள்.

''உள்ளே வாங்க மன்னி...''

சியாமளா சமையலறைக்கு வந்து கவுரோரமாகப் பேசாமல் நிற்க, அகிலா ஸ்டவ்வைப் பற்றவைத்து, சற்று முன் நடந்ததை மறக்க நினைத்து அவளுடன் சகஜமாகப் பேச வேண்டும் என்ற எண்ணத்தில்,

''நீங்க காப்பி சாப்பிடுவேள் இல்லையா மன்னி?'' என்று கேட்டாள்.

அதற்கு அவள் உடனே பதில் சொல்லாமல், சற்றுத் தயங்கிச் சொன்னாள்:

''...இல்லை. நான் போர்ன்விடாதான் சாப்பிடறது...''

''போர்ன் விடாவா?'' என்ற அகிலா ஸ்டவ்வில் தண்ணீர் போட்டு விட்டுப் பேசாமல் இருந்தாள். காப்பிப் பொடி தவிர வீட்டில் வேறு பானம் எதுவும் வாங்குகிற பழக்கமில்லை. சரோஜாவின் குழந்தைகளுக்குக் காப்பி பழக்கமில்லை. கோக்கோதான் பழக்கம் என்பதால் ஒருதரம் இவள் மணியிடம் போய் சரோஜாவின் காதில் விழாதவாறு கேட்டாள்:

''சரோஜாவோட ரெண்டு குழந்தைகளும் காப்பி சாப்பிட மாட்டா மணி. கோக்கோதான் பழக்கமாம். அதனால ஒரு சின்ன டின் கோக்கோ வாங்கித் தரயா? அதை அவா ஊருக்குப் போகிற வரை வச்சுக்கறேன்...''

அவன் தன் வழக்கமான சிடுசிடுப்பில் வேண்டுமென்றே சற்று உரத்த குரலில் சொன்னான்:

''அவாவா குழந்தைகள் என்ன சாப்பிடுமோ அதைக் கையோடு கொண்டு வர மாட்டாளா? ஆளுக்கு ஆள் தனித் தனியா கோக்கோ, டீ, ஓவல்டின்னு வாங்கிப் போட இங்கே என்ன பத்துப் பேரா சம்பாதிக்கறா? நான் ஒருத்தன்தானே சம்பாதிக்கிறேன்?''

அவன் சரோஜாவின் காதில் விழட்டும் என்றே கத்துவதாக அவளுக்குப் பட்டது. அதுபோல் அதைக் கேட்ட சரோஜாவும் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து டபடபவென்று தன் பெட்டியைத் திறந்து ஒரு ஐம்பது ரூபாய் நோட்டைக் கொண்டு வந்து அகிலாவிடம் கொடுத்தாள்.

''இதப் பாரு அகிலா. என் குழந்தைகளுக்கு வேண்டியதை என்கிட்டே கேளு. வேறே யார் கிட்டயும் கேட்க வேண்டாம். அவா இன்னும் பிச்சை எடுக்கிற நிலைக்கு வரலை. அந்த நிலையில் அவாளை அவா அப்பாவும் வைக்கலை....'' என்று கத்த, பதிலுக்கு மணியும் ஏதோ சொல்ல —

அது பெரிய சண்டையாகி, சரோஜா ஓவென்று அழ, அதைப் பார்த்துப் பயந்து போன அவளின் குழந்தைகள் அவள் கால்களைக் கட்டிக் கொண்டு விசும்ப—

அன்று அந்த வீட்டில் வடித்த சாதம் முழுதும் யாராலும் தொடப்படாமல் அப்

படியே கிடந்தது அப்போது அகிலாவின் நினைவுக்கு வந்தது.

இப்போது இவள் 'போர்ன்விடா'தான் சாப்பிடுவேன் என்கிறானே... மணியிடம் போர்ன்விடா வாங்கித் தரச் சொல்லிக் கேட்பதா வேண்டாமா என்ற யோசனையுடன் அவள் டிகாக்ஷனை இறக்கி மணிக்கு மட்டும் ஒரு டம்ளர் காப்பி கலந்து முன் அறைக்குக் கொண்டு போய்க் கொடுத்த போது அவனே சொன்னான். இப்போது அவன் குரலில் பழைய எரிச்சல் சிறிதும் இல்லை. மாறாகச் சற்று பிரியத்துடன் வந்த மாதிரி கூட இவளுக்குத் தோன்றியது:

''சியாமளா காப்பி சாப்பிட மாட்டா போல இருக்கு. அவாத்தில அவளுக்கு போர்ன்விடாதான் கலந்து கொடுப்பா. நீ போய்ச் சீக்கிரமா ஒரு டின் போர்ன்விடா வாங்கிண்டு வந்துடு. நம்மாத்துல போர்ன் விடா இல்லேன்ற விஷயம் அவளுக்குத் தெரிய வேணும்....''

பரோடாவிலிருந்து
பம்பாய்வரை

அமிதாப் பச்சன் உயிர் பிழைக்க வேண்டும் என்பதற்காகப் பலர் பிரார்த்தனை புரிந்தனர். அரவிந்த் பாண்டியா என்பவர் என்ன செய்தார் தெரியுமோ? பரோடா சித்தி விநாயகர் கோயிலிலிருந்து பம்பாய் சித்தி விநாயகர் கோயில் வரை பின்புறமாகவே ஓடிவந்தார். (Running backward) சாதனையை முடித்த பாண்டியாவை பச்சனும், குடும்பத்தாரும் பம்பாயில் வரவேற்றனர். -திக்விஜயன்



அவன் கொடுத்த இருபது ரூபாய் நோட்டு மனத்திலும், கையிலும் கனத்துத் தெரிய இவள் வீட்டிலிருந்த அதே சாயம் போன பழைய புடவையுடன் தெருக் கோடி கடைக்குப் போய் போர்ன்விடா டின்னை வாங்கிக் கொண்டு திரும்பினபோது மாடிப் படியடியிலிருந்து தலை தூக்கிப் பார்த்த அம்மா கேட்டாள்:

''எங்கே போயிட்டு வரே?''

இவள் அதற்கு, ''எங்கேயும் இல்லே'' என்று சொல்லி அந்தப் போர்ன்விடா டின் அவள் கண்களில் படாதவாறு சமையலறைக்குள் நுழைந்து அதுவரை அதே இடத்தில் நின்று கொண்டிருந்த சியாமளாவைப் பார்த்து உட்கார்ந்து கேட்டாள்;

''ஏன் மன்னி நின்னுண்டே இருக்கேள்? உட்கார்ந்துக் கோங்களேன்....''

''பரவாயில்லே...''

''ஆத்துலே போர்ன்விடா தீர்ந்துபோச்சு. ராத்திரியே வாங்கணும்னு நினைச்சு மறந்து போயிட்டேன். அதான் போய் வாங்கிண்டு வந்தேன்.''

அதற்கு அவளிடமிருந்து பதில் ஒன்றும் வரவில்லை. இவள் அவளுக்கு போர்ன்விடா கொடுத்த மீதப் பாலில் தனக்கும் அம்மாவுக்கும் காப்பி கலந்து கொண்டாள். பின்னர் காப்பி டம்ளர்களையும் டபராக்களையும் அலம்பிக் கொண்டே கேட்டாள்:

''என்ன மன்னி, என்ன டிபன் பண்ணட்டும்? உங்களுக்கு எது பிடிக்கும்?''

''எல்லாம் பிடிக்கும்.''

''குறிப்பிட்டு எதையாவது சொல்லுங்களேன், பண்றேன். முதல் முதலாக ஆத்துக்கு வந்திருக்கேள், உங்களுக்குப் பிடித்ததா இருக்கட்டுமே?''

''உங்கண்ணாவைக் கேட்டுப் பண்ணுங்களேன்....''

''என்ன மன்னி இது, என்னைப் போயி வாங்க, போங்கன்னு கூப்பிட்டுண்டு? உங்களை விட நான் சின்னவளாத்தான் இருப்பேன். அதனால் வா போன்னே சொல்லலாம்....''

அதற்கும்அவளிடமிருந்து''பரவாயில்லே'' என்ற ஒரு வார்த்தை பதிலாக வந்ததும் அகிலா சட்டென்று அவள் முகத்தைப் பார்த்தாள்.

'இது பயமா, தயக்கமா? இல்லாவிட்டால் மிகச் சாமர்த்தியமாகத் தன்னைச் சுற்றி ஒரு கோடு போட்டுக் கொண்டு ஒதுங்கி நிற்பதற்கான வழியா?'

தீர்மானிக்க முடியாதவளாக மீண்டும் பேச்சுக் கொடுத்தாள்:

''இன்னும் எத்தனை நாள் ஆபீசுக்கு லீவு போட்டிருக்கேள் மன்னி?''

''இன்னியோட லீவ் முடியறது. நாளையிலிருந்து ஆபீசுக்குப் போயாகணும்.''

அதைக் கேட்டுக் கொண்டே சமையலறைக்கு வந்த மணி சொன்னான்:

''எனக்கும் நாளையிலிருந்துஆபீஸ் அகிலா! அவளுக்குக் கார்த்தாலே எட்டு மணிக்கெல்லாம் ஆபீஸ் ஆரம்பிக்கிறதால் அவள் ஏழரைக்கெல்லாம் வீட்டை விட்டுக் கிளம்பியாகணும். அதனால் இனிமேல் காலையில் டிபனும், மத்தியானம் ஒரு மணிக்குச் சாப்பாடுமாக மாற்றிப் பண்ணிடு. மத்தியானம் அவளுக்குச் சாப்பாடு கொண்டு போகக் காரியர்காரன் வருவான். அவன் கிட்டே எனக்கும் சேர்த்து ஏற்பாடு பண்ணிடறேன். காரியர் ஒண்ணும் இன்னி சாயந்திரம் போய் வாங்கிண்டு வந்துடறேன். ரெண்டு பேருக்கும் ஒண்ணாகவே காரியர் அனுப்பிவிடு, என்ன?''

அவனுடைய அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் மௌனமாக நின்ற அகிலா, மன்னி வந்தால் எப்படி யெல்லாம் இருக்க வேண்டுமென்று தான் பண்ணின கற்பனை வெறும் கற்பனையாகவே போய்விடப் போகும் ஏமாற்றத்தில் சியாமளியை நிமிர்ந்து பார்த்தாள். (தொடரும்)

ரசிகமணி நூற்றாண்டு கட்டுரைப் போட்டி

ரசிகமணியின் ரசிக உள்ளம்

இ. ச. நிர்மலா

டி. கே. சி. என்றதும் எல்லோருடைய நினைவுக்கும் முதலில் வருவது அவரது ரசிக உள்ளமே.

பண்டிதர்கள், திறனாய்வாளர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் ஆகியோர் கவிதையை அனுபவிக்கும் முறை வேறு; ரசிகமணி கவிதையை அனுபவிக்கும் முறை வேறு. குறவஞ்சிப் பாட்டோ, முத்தொள்ளாயிரப் பாட்டோ, கம்பன் கவிதையோ, தனிப் பாடலோ எதுவாயினும் அது தன்னைத் தானே புலப்படுத்திக் கொள்ளுமாறு ஒரு மந்திரச் சூழ்நிலை அமைப்பதில் டி.கே.சி. ஒரு சாதனையாளர். சபரி காட்டினின்று கனிகளைத் தேடிக் கொணர்ந்து அவற்றைக் கடித்துச் சுவைத்துப் பார்த்து நல்லனவற்றைப் பொறுக்கி எடுத்து இராமபிரானுக்கு எனச் சேர்த்து வைத்தாள் என்று இராமாயணம் இயம்புகின்றது. அதைப் போலவே ரசிகமணியும் இலக்கியங்களைச் சுவைத்துப் பார்த்து, அவற்றுள் நல்லனவற்றைத் தேர்ந்து தெளிந்து, அவற்றைக் கலை ரசிகர்களுக்கு உரியனவாகச் செய்தார்.

ஒருமுறை நண்பர்களுடன் சுற்றுப் பயணம் செய்தபோது ரசிகமணிக்குச் சொந்தமான ஒரு வெள்ளித் தம்ளர் காணாமல் போய் விட்டது; தேடித் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. அதனால் அவர் மனத்திற்குக் கொஞ்சம் வருத்தம்தான். சில நாட்கள் கழித்து ஒரு நண்பர் அந்த வெள்ளித் தம்ளரைக் கண்டுபிடித்து, ரசிகமணியிடமே அதை ஒப்படைத்து விட்டார். காணாமல் போன பொருள் கிடைத்து விட்டதே என்று ரசிகமணிக்கு மகிழ்ச்சி. ரூபாய், அணா, பைசாக் கணக்கிலே அவர் அந்த உணர்ச்சியை—மகிழ்ச்சியை — மதிக்கவில்லை. காணாமற் போன பொருள் திரும்பக் கிடைக்கும்போது ஏற்படும் உணர்ச்சியையே ரசிகமணி பெரிதும் மதித்தார். ''வெள்ளித் தம்ளர் கிடைத்து விட்டது. இனிமேல் காணாமல் போனாலும் கவலையில்லை!'' என்று கூறினார்.

ரசிகமணியின் ரசிக உள்ளத்தைத் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்தும் பிறிதொரு நிகழ்ச்சி: ரசிகமணியின் அறுபதாண்டு நிறைவை யொட்டிக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ரசிகமணிக்கு மூன்று வாழ்த்துப் பாடல்களை எழுதி அனுப்பினார். அப்பாடல்களின் எளிமையிலும் உண்மைப் பண்பிலும், சொல்லாற்றலிலும், தமிழ் உணர்ச்சியிலும் லயித்து மயங்கிய ரசிகமணி, 'உண்மையான — விலைமதிக்க முடியாத — கவிகள் மூன்றோடு என் பெயர் ஒட்டிக் கிடக்கும் பாக்கியம் பெற்றேன்' எனச் சொல்லி மகிழ்ந்தார். அப்பாடல்களின் நயங்களையும், நுட்பங்களையும் அருமைகளையும் அழகுகளையும் பாராட்டிக் கவிமணிக்கே ஒரு கடிதம் எழுதினார்!



'அழகெனும் அழகும் ஓர் அழகு பெற்றதே' எனக் கம்பர் சீதையின் அழகு பற்றிக் கூறுவதுபோல், பல கவிதைகள் ரசிகமணியின் அற்புதமான விளக்கத்

தால், இன்னும் கூடுதலான அழகினைப் பெற்றன.

ரசிகமணி இதயம் ஒன்றி அனுபவித்த கலிங்கத்துப் பரணிப் பாடல் ஒன்றைக் காணலாம்:

'முருகிற் சிவந்த கழுநீரும்
    முதிரா இளைஞர் ஆருயிரும்
இருகிச் செருகும் குழல் மடவீர்
    செம்பொற் கபாடம் திறமினோ!'

கலிங்கத்துப் பரணியின் 'கடை திறப்பு' என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ள இப் பாடலில் ரசிகமணி காணும் அரிய நயங்கள் இதோ:

''செங்கழுநீர்ப்பூ, இளைஞனுடைய உயிர் ஆகிய இரண்டையும் ஒரே இறுகாகத் திருகிக் கூந்தலுக்குள் அப்படியே சொருகிவிட்டாள் என்று கவி சொல்லும்போது, இளைஞனது உள்ளத்தில் நிகழ்ந்த காதல் நிகழ்ச்சியைப் பளிங்கினுள் வைத்துப் பார்ப்பது போலக் கண்கூடாகப் பார்க்கிறோம். இது கவிகள் செய்யவல்ல அற்புதச் செயல். மேலும், இளைஞர் **முதிரா** இளைஞர் என்றும், அவர் உயிர் **ஆருயிர்** என்றும் அடை கொடுத்துச் சொல்வதில் எவ்வளவு காருண்ய ரஸம்! **திருகி** என்னும் சொல் நிற்கிற நிலையைப் பார்த்தால் அது செய்யும் அதிகாரத்தை அளவிட்டுச் சொல்லுதல் எளிதல்ல. **குழல்** மடவீர் என்று கூந்தலை விசேஷமாய்ச் சொல்வதால் அது உயிரைத் திருகிச் சொருகி வைப்பதான கொடுஞ் செயலுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டது போலும் என்ற எண்ணம் மனத்தில் உதிக்கிறது.''

கவிதையை அனுபவிப்பதும், கவிதையின் உயிர் நிலையை அறிந்துகொள்வதும், கவிஞரின் இதயத்தைக் கண்டு கொள்வதும் ரசிகமணிக்கு எவ்வளவு எளிதாக அமைகின்றன என்பதற்கு மேலே காட்டியுள்ள பகுதி நல்ல சான்று.

'கம்பருக்கு நான் செய்த சேவைகளில் எல்லாம் பெரிய சேவை அவரை அனுபவித்த சேவைதான்' என்பது ரசிகமணியின் வாக்குமூலம். 'கம்பரைப் படிப்பதற்காக இலக்கணங்களைப் படிக்கவேண்டாம்; நிகண்டுகளையும் அரும்பத அகராதிகளையும் படிக்க வேண்டாம். ஆனால் வாழ்க்கையிலுள்ள தத்துவங்களையெல்லாம் படிக்க வேண்டும்... கம்பரைப் போல் நமக்கு ஆனந்தம் கொடுக்கக் கூடிய பொருளோ, பதவியோ உலகத்தில் இல்லை. வானத்திலுமே இல்லை' என்பது அவரது அழுத்தம் திருத்தமான முடிவு.

'உலகத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மகா கவி பிறக்கிறான்' என்று கூறுவார்கள். அந்தக் கூற்று முற்றிலும் உண்மை. ஆனால் ரசிகமணியைப் போன்ற உள்ளுணர்வும், உண்மையறிவும், மாசற்ற காட்சியும், அனுபவ முதிர்ச்சியும் பெற்ற ரசிகர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிறக்க முடியும்.

இதுவரை...

கடலலைகள் தாலாட்டும் மணற்காட்டுக் கிராமத்துக்கு மிடில் ஈஸ்டிலிருந்து கைநிறையச் சம்பாதித்துக் கொண்டு திரும்புகிறான் கனகசபை. மனைவிக்காக என்னென்னவோ வாங்கிக் கொண்டு ஆயிரம் கனவுகளுடன் வீட்டை அடைபவனுக்கு அதிர்ச்சி... கிரிஜாவைக் காணவில்லை.

பக்கத்து வீட்டு உன்னி, அவன் அக்கா தேவகி இருவருக்கும் அவளைப் பற்றித் தெரியவில்லை. ஊரில் மனைவியைத் தேடி அலைபவனுக்கு ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி கதை சொல்கிறார்கள். சர்ச் பாதிரியார், ரத்தினசாமி, சதாசிவம்... இடையில் பூசாரியை விசாரிக்கப் போகிறவனுடைய கவனத்தைக் கவர்கிறது ஒரு கூட்டம். வாயில் ஒரு புடவைத் துண்டைக் கவ்விக் கொண்டு ஆட்டம் காட்டும் நாயைத் துரத்தும் ஒரு கூட்டம்... கிரிஜாவின் புடவையோ?

கிராமத்தில் சந்தேகப் பொறி கிளம்புகிறது. "கடைசியா சர்ச்சுக்குள்ள நுழைஞ்ச உன் பொண்சாதியைக் காணலேடா..!" என்கிறார் சதாசிவம். சர்ச்சுக்குள்ளதான் அவளுக்கு ஏதோ நடந்திருக்க வேண்டும் என்று முடிவு கட்டுகிறார்கள். கம்பு, கடப்பாரையுடன் கிளம்



சுஜாதா

விடிவதற்குள் வா!

பும் அவர்களைக் கனகசபை எவ்வளவு தடுத்தும் பிரயோஜனமில்லை.

ஏற்கனவே சர்ச்சில் காலையில் பாட்டுப் போடுகிறார்கள், கடலோர மீனவர்களைக் கிறிஸ்துவர்களாக்கி விட்டார்கள் என்ற கோபம். கிரிஜா காணாமல் போனது ஒரு காரணமானது. சர்ச்சு வாசலில் கூடிய கூட்டத்தைக் கேள்விப்பட்டு மீனவர்களும் பதிலடி கொடுக்கத் தயாராக வருகிறார்கள். கைகலப்பு... கலவரம்... போலீஸும் பத்திரிகை நிருபர்களும் வந்து சேருவதற்குள் நிகர லாபம் பலருக்குக் காயம், ஒருவன் செத்துப்போனான். மீனவர்களுக்குத்



தாங்கள் செமத்தியாகக் கொடுத்ததாகக் குதூகலத்துடன் சதாசிவம் முதலியோர் பேசிக்கொண்டிருக்கும் போது தலைவிரிகோலமாக ஒரு பெண் ஓடிவருகிறாள். கற்பழிப்பு...

தங்கள் பக்கத்துப் பெண்ணை மீனவர்கள் கற்பழித்து விட்டார்கள் என்ற கொதிப்புடன் மீண்டும் கூட்டம் கிளம்புகிறது.

'கிரிஜாவைக் காணவில்லை' என்பதானது ஒரு பெரிய இனக் கலவரத்துக்கே வித்திட்டு விட்டதைக் கண்டு கனகசபை கலங்குகிறான். அவளைப் பற்றிய உண்மைகளை அறிய முயலாமல் இரு தரப்பினரும் பழிவாங்கும் படலங்களில் இறங்க போலீஸ் தீவிரமடைகிறது.

சர்ச்சுப் பக்கத்திலிருந்து பட்டாசு வெடிப்பது போலச் சத்தம். தேவகி கதறிக்கொண்டு ஓடி வருகிறாள். கனகசபையையும் இழுத்துக்கொண்டு சர்ச் பக்கம் ஓடுகிறாள். அங்கே....

சிலர் இறந்திருக்க பலரும் மரண ஓலத்துடன் அலறிக் கொண்டிருக்க... நடுவே ஒரு பாவமும் அறியாத, வேடிக்கை பார்க்கச் சென்ற உண்ணி... செத்துப்போன உண்ணியை மடியில் போட்டுக்கொண்டு கதறுகிறாள் தேவகி...

துப்பாக்கிச் சூடு. கலவரம் என்ற செய்தியை சதாசிவம் சுவாரஸ்யமாகப் பேப்பரில் படிக்கிறார்.

நாளிதழில் வேறு ஒரு செய்தி கனகசபையைக் கவர்கிறது..........

16

பத்திரிகைத் தலைப்புச் செய்தி மணற்காட்டைப் பற்றி அலறியிருந்தாலும் அதன் ஓரத்தில் ஒரு மூலையில் வந்திருந்த விளம்பரச் செய்திதான் அவனைக் கவர்ந்தது.

''இந்தப் பெண்மணி எங்கள் மருத்துவமனையில் சென்ற ஆகஸ்ட் மாதத்திலிருந்து இருந்து வருகிறார். இவரைத் தெரிந்தவர் கீழ்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்: செயலாளர், கஸ்தூரிபா மருத்துவமனை, வேதாரண்யம்-614810.''

அந்தப் போட்டோவைப் பார்த்தால் கொஞ்சம் கொஞ்சம் கிரிஜாவைப் போல இருந்தது. சதாசிவத்திடம் கொண்டுசென்று காட்டலாம் என்றால் அவரைக் கைது செய்திருக்கிறதாக அல்லது தலைமறைவாக இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். திரும்பத் திரும்ப அந்தப் போட்டோவைப் பார்த்தான். வேதாரண்யமா அது எங்கே இருக்கிறது? அங்கு யார் இருக்கிறார்கள்? அங்கே எதற்காகப் போகிறான்?

''அண்ணே வேதாரண்யம் எங்கே இருக்குது?''

''மதுரை ஜில்லாவில்'' என்றான் ஒருத்தன். ''ஏன்?''

''இல்லீங்க. இங்கதான். கிழக்கால முப்பது மைல்!''

''அடப் போடா! வேதாரண்யம் தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்குது. என்னங்க அங்கே?''

''இந்தப் போட்டோவில பாருங்க. அசப்பிலே பாத்தா என் பெண்சாதி கிரிஜா மாதிரி இல்லே!''

''என்னங்க இது. உங்க பெண்சாதியைத்தான் பயலுவ வெட்டிப்புதைச்சிருக்காங்க!''

''இல்லீங்க. அது நிச்சயமாத் தெரியலிங்க! போலீஸ்காரங்க கிட்ட இதைச் சொல்லணும். அவங்க எங்கே?''

''எங்கேயா? ஊர் பூரா உலாத்தராணுவ! கலெக்டர் வேற வர்றாராம், மத்தியஸ்தம் பண்ணி வெக்கறதுக்கு!''

''மத்தியஸ்தம் இல்லீங்க. எல்லாப் போலீஸ் அதிகாரிங்களும் இங்கேதான் முகாம்! திடீர்னு நம்ம கிராமத்துக்குக் களை கட்டிருச்சு. முதல் அமைச்சர் வரப்போறாராம்! இந்திரா காந்தி கூட வரப்போறாங்களாம்!''

''எதுக்காம்?''

''மத்தியஸ்தத்துக்குத்தான்! சமாதானத்துக்குத்தான்.''

''சமாதானம் ஆயிருமா?''

''எங்க! ராத்திரி கிணத்திலெல்லாம் டீஸல் ஊத்தப் போறாங்க. அதுக்கு ஒரு பக்கம் தயாராவுது. மந்திரிமார்ங்கள்ளாம் வரட்டும். யார் வந்தா என்ன? காவுக்குக் காவு வாங்கிட்டுத்தான் நிப்பாங்க. ரத்தமா இல்லே சாக்கடைத் தண்ணியா!''

''அவுங்க பக்கம்தான் சேதம் ஜாஸ்தின்னு பேசிக்கிடுதாங்க.''

''ரெண்டு பக்கமும் அடிப்பா!''

''அஞ்சு பேர் போயிட்டதா பேப்பர்லே போட்டிருக்குதே.''

''அஞ்சு, ஆறு, ஏழு ஒவ்வொரு பேப்பர்லேயும் ஒவ்வொண்ணு போடுதான்! ஆறு மெய்யா எத்தனை தெரியுமோ'' என்று கனகசபையை அருகில் அழைத்து ''நூறு பேர் போயிட்டாங்க!'' என்றான்.

''சேச்சே ரொம்ப மிகையாச் சொல்றீங்க!''

''நீ என்ன பார்த்தே! அட நான்தான் என் கண்ணால பார்த்தேனே! லாரி லாரியா பொணங்களை ராவில கொண்டு போனாங்களே! கர்ஃப்யூ போட்டுட்டா சன்னல் வழியா பார்க்க முடியாதா என்ன! அப்பறம் இதைக் கேளு. நம்ம டீக்கடையில தங்கப்பன்னு ஒரு பையன் பாய்லர் கிட்ட கிரிச்சிட்டே நிப்பானே ஞாபகம் இருக்குதா?''

''ம்.''

''அவன் எங்கே?''

''அப்புறம் உண்ணி எங்கே? பாலகிருஷ்ணன் எங்கே? ஒரு ஆளுக்குத் தெரிஞ்சே மூணு பேத்தை நாலு பேத்தைக் காணமே. கிராமத்தில யாரைக் கேளு. மூணு பேத்தைக் காணங்கிறான்! அப்ப நீயே கணக்கப் போட்டுக்க!''

''அவங்கள்ளாம் ஆஸ்பத்திரியில இருக்காங்க போல.''

''அட ஆஸ்பத்திரி யெல்லாம் பொய்யி? எல்லாரையும் டிஞ்சர் போட்டுக் கட்டுப் போட்டு வீட்டுக்கு அனுப்பியாச்சு!''

''இப்ப எனக்கு வேதாரண்யம் போகணுமே! அது எங்க இருக்கு?''

''சரிதான்! இந்தச் சமயம் ஊரை விட்டு எங்கயும் வெளியே போக முடியாது! சட்டி குத்திப்போட்டிரும் சனம். பஸ்ஸு, ரெயிலு லாரி எல்லாம் நின்னே போச்சு! மந்திரிங்க வராங்களே அவங்க அணைச்சுக்கிட்டுப்போனாத்தான் உண்டு!''

''நாளைக்குச் சாயங்காலம் மீட்டிங்காமே!''

''ஆமா. சர்வ கட்சிப் பொதுக் கூட்டம்! நாம் எல்லாரும் ஒத்துமையா இருக்கணுமில்லே!''

''பெத்த தாயைப் பறி கொடுத்திருந்தா பேசுவாங்க! தங்கச்சியைப் பறிகொடுத்திருந்தாப் பேசுவாங்க!''

கனகசபை தெருவில் நடந்தான். ''அண்ணே திரியாதீங்க. உள்ள போட்டுருவான். கர்ஃப்யூ இருக்குது. மிலிட்டரிக்காரங்க சுத்திக்கிட்டு இருக்காங்க.''

''நம்ம கிராமத்துக்கு வந்த வாழ்வைப் பாத்திங்களா!''

கனகசபை ஓரமாக வீட்டுக்கு வீடு மாறிக்கொண்டு, திண்ணையில் உட்கார்ந்துகொண்டு போஸ்ட் ஆபீஸ் பக்கம் போனான். அங்கே மூன்று ஜீப்புக்கள் நின்று கொண்டிருந்தன. எதிர் வீட்டில் சற்றே கும்பலாக இருந்தது. ''யாருங்க?'' என்று விசாரித்தான்.

''டிப்டி கலெக்டருங்க. விசாரிச்சுக்கிட்டு இருக்கார். பாதிரியாரை விசாரிச்சுக்கிட்டு இருக்கார்.''

அவரிடம் கேட்கலாம். வேதாரண்யம் எப்படிப் போவது என்று. மறுமுறை பேப்பரைப் பார்த்துக் கொண்டான்.







இவர்கள் ஜீப்பில் தொத்திக் கொண்டு ஊரை விட்டு வெளியே வந்து விட்டால் போதும். பஸ் பிடித்து விசாரித்துப் போய்க் கொள்ளலாம்.

மெல்லக் குறுக்கே நடந்தான்.

''யோவ், யார்யா அது?'' என்று போலீ ஸின் அதட்டல் கேட்டது.

''கலெக்டரைப் பார்க்கணும்.''

அதற்குள் ஒரு போலீஸ்காரர் அவனை நோக்கி விரைந்து வந்து அவன் புஜத் தைப் பிடித்து இழுத்து ஓரத்தில் தள்ளி னார். ''அதெல்லாம் இப்பப் பார்க்க முடியாது. இப்ப விசாரிச்சுக்கிட்டு இருக் காரு. கர்ஃப்யூ இருக்குது தெரியுமில்லே? கிரா மத்துத் தெருவில் யாரும் உலாத்தக் கூடா துன்னு தண்டோராப் போட்டுச் சொன்ன மில்லே? அங்கங்க ரத்தம் கொதிச்சுக்கிட்டு இருக்குது. நீ வந்து சும்மா உலாத்துறியே அறிவு இருக்குதா?''

''அய்யா அவர்கிட்ட முக்கியமா ஒரு விசயம் சொல்லனும். இந்தக் கலகத்துக் கெல்லாம் காரணமா இருந்த ஆதாரமான விசயத்தைப் பத்தி...''

''அதெல்லாம் உம்முறை வரப்பச் சொல் லிக்க. எல்லாருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கத் தான் போறாங்க. ஜுடிஸியல் என்க்வைரியே நடக்கும் போ! கலாட்டா செய்யாதே.''

''அய்யா இந்த விசயம் ரொம்ப முக் கியம்யா.''

''அட போய்யான்னு'' என்று கழுத் தைப் பிடித்துத் தள்ளப்பட்டான். கீழே விழ இருந்தவன் தூணைப் பிடித்துக்கொண் டதால் அடிபடாமல் தப்பினான். மடிபடியும் எதிரே பார்த்தான். சன்னல் வழியாகப் பாதிரியார் தாடி அசையப் பேசிக்கொண் டிருப்பது தெரிந்தது. அவர் எதிரே உட் கார்ந்திருந்த அதிகாரி தெரியவில்லை. என்ன செய்வது? காத்திருக்கத்தான் வேண்டும். உண்ணியைப் பற்றி ஞாபகம் வந்தது. கண் களில் கண்ணீர் நிரம்பியது. தேவகியைச் சமாதானப் படுத்த நிறைய மலையாளப் பெண்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறார்கள். அவ்வப்போது தெம்பு வந்ததும் கோவென்று அழுகிறார்கள். உண்ணியைப் போஸ்ட் மார்ட்டத்துக்கு எடுத்துப் போயிருக் கிறார்கள். இந்தப் பேப்பரில் உள்ள படம் கிரிஜாவா தெரியவில்லை. அப்போது ஒலி பெருக்கி இரைச்சலாக வீதியெங்கும் நாளை மாலை சர்வ கட்சி, சர்வ மதப் பொதுக் கூட்டம். சட்டப் பேரவை, மேலவை, பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் மதத் தலை வர்களும், மற்றும் இதரப் பிரமுகர்களும் கலந்து கொள்ளும் மகத்தான சமாதானக் கூட்டம். எல்லோரும் திரண்டு வருகை தாரீர்! கர்ஃப்யூ நீக்கப்படும். முதலமைச்சரே ஏற்றுக்கொள்ளும் இந்த முயற்சிக்கு அனை வருடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று காலியான தெருக்களில் இரைச்சலிட்டுக் கொண்டே சென்றது. அடுத்த தெரு. மீனவர் பகுதி எங்கிலும் அதே வாசகங்களுடன் ஒலித்துக் கொண்டே சென்று மறைந்தது. கலெக்ட ருக்கு டிபன் பாக்ஸில் சாப்பாடு கொண்டு வரப்பட்டது. கான்ஸ்டபிள்கள் கதாரித்த நிலையில் சட்டைப் பட்டன்களைக் கழற்றிப் பனியன் தெரிய உட்கார்ந்திருக்க, சற்றுத் தூரத்தில் ஹெல்மட் போலீஸ் ஒரு வண்டி நிறையத் தெரிந்தார்கள். அப்போது சதா சிவம் வெளியே வருவது தெரிந்தது. இங் கிருந்து கூப்பிட்டான்.

சப்தம் வந்த திசையில் பார்த்து ''அட இருக்கியா, நீ! சரிதான்'' என்று சதாசிவம் அருகே வர,

''சதாசிவம், உங்களைத்தான் தேடிக்கிட் டிருக்கேன்.'' என்றான் கனகசபை.

''என்னவாம்?''

''இந்தப் பேப்பரைப் பாருங்க.''

''குமரி மாவட்டத்துக்கு முதலமைச்சர் வருவார்! ஆமா, இதைத்தான் சொல் லிக்கிட்டே இருக்காங்க.''

''அதில்ல சதாசிவம், இந்த விளம்பரத் தைப் பாருங்க.''

பார்த்துவிட்டு, ''என்ன '' என்றான்.

''இந்தப் போட்டோவைப் பார்த்தா அசப்பில கிரிஜா மாதிரி இல்லே? ரத்தின சாமி சமீபத்தில அவளைப் பார்த்தது....''

''கிரிஜாவா எங்கே காமி '' என்று மறு படி அதை உற்றுப் பார்த்துவிட்டு 'சே, இல்லேடா. உனக்கு இந்தச் சமயத்தில எந்தப் போட்டோவைப் பார்த்தாலும் கிரிஜா மாதிரிதான் இருக்கும்!'' என்றான்.

''இல்லே, சதா! எனக்கு சம்சயமா இருக் குது.வேதாரண்யம் போய் விசாரிச்சுப்பார்த் துரலாம்னு ஊரை விட்டுப் போகவே ரெண்டு மூணு நாளைக்கு முடியாது போல இருக்கு!''

''அடச்சே! இதுக்காக வேதாரண்யம் போகப் போறியா! இது கிரிஜாவே இல்லே. ஏய், ரத்தினம்! இங்க வாடா. இந்தப் போட்டோவைப் பாரு''

ரத்தினசாமி அதை வாங்கிப் பார்த்து. ''என்ன சதா, விசாரணை யெல்லாம் முடிஞ் சுதா?'' என்று கேட்டான்.

''முடிஞ்சுது!''

''ரத்தினம் இதைப் பார்த்தா யார்மாதிரி இருக்கு சொல்லு பார்க்கலாம்'' என்றான் கனகசபை.

''கிரிஜா மாதிரிதான். அட!''

''சொன்னேன் பாத்தீங்களா!''

''டேய் சரியாப் பாரு.''

''இல்லே சதா. கொஞ்சம் கொஞ்சம் அவமாதிரிதான் இருக்கு. நல்ல பிரதியா இல்லேயா?''

''வேதாரண்யம் எங்ஙன இருக்கு?''

''சதா, ரத்தினம்! இந்தத் தகவலே நாம போலீஸ் கிட்டயும் அதிகாரிங்க கிட்டயும் சொல்ல வேண்டும் இல்லேயா?''

''எதுக்கு ''

''இதிலேதானே கலகமே முதல்ல ஆரம் பிச்சுது! இது கிரிஜாதானுன்னு சட்டுன்னு மெஸேஜ் கொடுத்துத் தெரிஞ்சுக்கிட்டா?''

(தொடரும்)

பட், படார் ஜோக்ஸ்

அவர்: ''சினிமாத் தயாரிப்பாளர் மகளை என் மகனுக்குக்கட்டி வைச்சது தப்பாப் போச்சு.''
இவர்: ''ஏன்?''
அவர்: ''ஒவ்வொரு தீபாவளிக்கும் ஒரு குழந்தை ரிலீஸ் பண்ணிடறு.''

அவன்: ''தலை தீபாவளிக்கு வைர மோதிரம் பண்ணிப் போடாத மாமனுர் வீட்டிலே பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டேன்னு சொன்னியே. அப்புறம் என்ன செய்தே?''
இவன்: ''வெந்நீராக் குடிச்சு வச்சேன்.''

அவன்: ''தீபாவளிக்கு உன் வீட்டுக்காரர்உனக்குப்பட்டுப் புடவை எடுத்துத் தரமாட்டார்னு சொன்னியே. அப்புறம் எப்படி எடுத்துத் தந்தார்?''
இவன்: ''பட்டுப் புடவைன்னு கேட்ட போது எடுத்துத் தரலே. 'சிலுக்கு'ப் புடவை வேணும்னு சொன்னேன். உடனே எடுத்துக் கொடுத்துட்டார்.''

அவன்: ''உன் மாமனுர்தான் பெரிய பண முதலையாச்சே. தீபாவளிக்கு உனக்கு என்ன வாங்கித் தந்தார்?''
இவன்: ''எது கேட்டாலும் பணமே இல்லைன்னு முதலைக் கண்ணீர்வடிக்கிறார்.''

—கீதா பஞ்சு

மனைவி: ''எனக்கு இந்தத் தீபாவளிக்கு ஆரஞ்சுக் கலர் புடவைதான் வேணும்!''
கணவன்: ''இதுக்குத்தான் காலையிலிருந்து என்னை இப்படிப் ''பிழிஞ்சு, பிழிஞ்சு'' எடுத்தியா?''

கணவன்: ''என்னது தலை தீபாவளிக்கு டி.வி.யோட வரச் சொன்னு வெறும் ஆன்டெனுவோட வர்றே?''
மனைவி: ''எங்கப்பா எதையுமே தவணை முறையிலேதான் கொடுப்பாரு!''

—பட்டுக்கோட்டை ரவி



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431643)
Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran


உங்கள் கேசம் அடர்த்தியின்றி சக்தியின்றி இருக்கிறதா? உங்கள் கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
EGG
Halo
SHAMPOO
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தியின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும் காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம் நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப் படியவைத்து அதற்குத் தேவையான எல்லா ஊட்டங்களையும் அளி்கிறது. உங்கள் கேசம் அழகாக ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம் உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும் தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
HES. G. 6. TM

REGISTERED No. M. 4307
Registered as a Newspaper in Sri Lanka

